

# செம்மண்

நிலம் 1 துகள் 9 வள்ளுவர் ஆண்டு 2051 12 - 18 புரட்டாதி வாரமலர் பக்கங்கள் 24 விலை ரூபா 50/-


# மேலெழும் தமிழர் நாகரிகம் கீழடி!



1



2



3



4



9

பெரும் மரத்தூண்களில் ஆணிகளால் சட்டங்களைக் கோத்து ஒன்றன்மேல் ஒன்றாக ஓடுகள் அடுக்கிக்கட்டப்பட்ட வீடுகள்... சுண்ணாம்பால் இழைக்கப்பட்ட தரை... வைகையிலிருந்து வருகிற தூய நீர், மூடப்பட்ட கால்வாய் வழியே தொழிற் பேட்டைக்குள் பாய்கிறது. ஊரைச்சுற்றிலும் வேளாண்மை தழைத்திருக்கிறது.

ஒரு ஆலையில் உருக்கப்பட்ட இரும்பு அனலாகத் தகித்து ஓடுகிறது. இன்னொரு பக்கம் கலைஞர்கள் பானை வனைந்துகொண்டிருக்கிறார்கள். பாண்டம் வாங்கிச் செல்பவர்கள், தங்கள் பெயரை அதில் எழுதி எடுத்துச் செல்கிறார்கள். இன்னொரு பக்கம் பழங்களையும் செடிகளையும் கொண்டு வண்ணங்கள் தயாரித்து நெசவாளர்கள் நூலுக்குச் சாயமேற்றிக்கொண்டிருக்கிறார்கள். அருகில் தங்கத்தையும் மணிகளையும் கோர்த்து ஆபரணங்கள் தயாரித்துக்கொண்டிருக்கிறார்கள் சிலர்.

தொழிற்பேட்டைக்கு வெளியே இருக்கிற குடியிருப்பில் வயதான ஆண்கள்,



செலவுகள் போக வருசத்தில பத்துப் பதினைஞ்சு லட்சம் மிஞ்சும். நல்லாக் காய்ச்சுதென்டால் 80... 90 லட்சத்துக் கும் போகத்துக்குப் பழம் வெட்டலாம்.



கடல் விழுங்கும் தென்கிழக்கு கரை!




குற்றச் செயல்களுக்கு பொலிஸாரும் அரசும் மட்டும் காரணமல்ல சட்டத்தரணிகளுமே...

5

# செம்மண்

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்

**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**
**துணை ஆசிரியர்: ந.ஜெயதாஸ்**



## வாய்ப்புக்காக காத்திருப்பது மட்டும்தானா அரசியல்?

கொழும்பில் அரசு பலத்தோடு ஓர் ஆட்சி உருவாகி யிருக்கின்றது. இலங்கையை அனைத்து மக்களுக்கும் உரிய நாடாகக் கட்டியெழுப்புவோம் என்று இந்த ஆட்சியின் தலைவர்கள் உறுதிமொழிகளை வழங்கினாலும் அவர்களால் முன்னெடுக்கப்படும் அரசியல் நகர்வுகளும் அரசியல் கருத்துக்களும் இலங்கை எதிர்காலத்தில் எல்லா இன மக்களும் வாழும் நாடாகத் திகழ்வதற்கான சாத்தியங்களைக் கொண்டிருக்குமா என்கிற சந்தேகத்தை எழுப்பத் தவறவில்லை. அரசமைப்பிற்கான 20ஆவது திருத்தம் மற்றும் 13ஆவது திருத்தத்தை நீக்க வேண்டும் என்கிற கோரிக்கை, மாடுகளை வெட்டுவதற்கான தடைச் சட்டம் போன்ற ஆட்சியாளர்களின் செயல்கள் இந்த அச்சத்தை ஏற்படுத்துகின்றன.

கொழும்பை மையப்படுத்திய ஒற்றையாட்சி முறையைப் பலப்படுத்துவதற்காக ஆட்சியாளர்கள் காட்டிவரும் எத்தனங்கள் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இந்த நாட்டில் என்ன எதிர்காலம் என்கிற கேள்வியைப் பலமாக எழுப்பு கின்றன. உருவாகப் போகும் இந்தப் பெரும் சவாலை எப்படி எதிர்கொள்வது என்கிற அச்சத்தையும் அவை உருவாக்குகின்றன. இதனை எதிர்கொள்வதற்குத் தமிழ், முஸ்லிம் கட்சிகளிடம் ஏதாவது உத்திகள், செயற்றிட் டங்கள் இருக்கின்றனவா என்றால் இல்லை என்பதே தெளிவான பதில்.

தமது மக்களின் இருப்பைப் பாதுகாத்து அவர்களின் சுதந்திரமானதும் இயல்பானதுமான வாழ்க்கைக்கு வழி யேற்படுத்திக் கொடுப்பதே அரசியல் தலைமைகளின் கடமை. அதைச் செய்வதற்கு வரப்போகின்றவற்றை உய்த்துணர்ந்து அதற்கேற்ற வகையில் தம்மையும் மக்களையும் அவர்கள் தயார்ப்படுத்திக்கொள்ள வேண் டும். ஆனால், தமிழ், முஸ்லிம் மக்களைப் பொறுத்த வரையில் அப்படியான முன்னேற்பாடுகள் எவையும் இல்லை என்பது கவலைக்குரியது.

ஒவ்வொன்றும் வரட்டும் பார்த்துக்கொள்ளலாம் என்பதே தமிழ், முஸ்லிம் அரசியல் தலைமைகளின் போக்காக இருக்கின்றது. இதனால், இந்தத் தலைமைகள் எப்போதும் தற்காத்துக்கொள்ளும் உத்திகளுக்குள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள்; இருக்க வேண்டியவர்களாகவும் உள்ளனர்.


ஆட்சியில் ராஜபக்சக்கள் அதிகாரத் திமிரோடு அமர்ந்திருக்கும் நிலையில், இந்த ஆட்சியாளர்களின் சீனச் சார்பு நிலையால் ஏற்படப்போகும் புவிசார் அரசி யல் விளைவுகளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் இவர்கள். அந்த விளைவுகள், அதாவது கொழும்பின் சீனச் சார்பு நிலைக்கு எதிராகக் அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளும் இந்தியாவும் முன்னெடுக்கப்போகும் நகர்வுகளுக்கு ஏற்ற மாதிரி தமது அரசியலை நகர்த்துவது மட்டுமே இவர்களின் தெரிவாக இருக்கின்றது.

புவிசார் அரசியல் நிலைப்பாடு ஈழத் தமிழர்களுக்குச் சாதகமான வகையில் திரும்பும் வகையில் காத்திருப்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்கிற எந்தக் கட்சியிடமும் உள்ள உத்தி. இதற்கு மேல் அந்தக் கட்சி களிடம் மக்களை அவர்களின் இலக்கு நோக்கி வழி நடத்துவதற்கான தேடல், முயற்சி எதுவுமில்லை. இதனா லேயே ஈழத் தமிழர்களின் அரசியல் இப்போது ஏக்கமுற்ற நிலையில் நிற்கின்றது. அதற்குத் தலைமை தாங்கு வதற்குப் பொருத்தமான எந்தவொரு தலைமை யையும் கண்டடைய முடியாமல் திணறுகின்றது.

வன்னிக் காட்டில் இருந்தபடி இந்த உலகின் அரசியல் போக்கையே ஈழத் தமிழர்களுக்குச் சாதகமாக வளைக்க முடியும் என்று நம்பிய ஒரு தலைமைக்குப் பின்னர், ஈழத் தமிழர் அரசியலை முன்கொண்டு செல்வதற்கு என்ன செய்வது என்றே தெரியாத நிலமையில் திணறும் தலைமை களுடனேயே, அசுர பலம் கொண்டெழுந்திருக்கும் கொழும்பை எதிர்கொள்ளவேண்டியவர்களாக இருக்கி றார்கள் தமிழர்கள். இந்த நிலைப்பாட்டில் இருந்து தமிழ்த் தலைமைகள் வெளிவந்து தமிழர் அரசியலை முன்னகர்த்தும் வழிவகையைக் கண்டறியாத வரையில் இன்னும் இரண்டு தசாப்தங்களானாலும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதென்பது இலகுவானதல்ல.

## மேலெழும்...

சுடுமண் புகைப்பான்களில் புகையிலையைத் திணித்து ஆழ்ந்து இழுத்துக்கொண்டி ருக்கிறார்கள். பாட்டிகள் ஆடுபுலியாட்டம் ஆட, குழந்தைகள் பாண்டியாடுகிறார்கள்.



5

அழகன்குளம் துறைமுகத்தில் வந்தி றங்கிய ரோமானிய, வடக்குதேச வணிகர்கள் பட கின்மூலம் வைகை யில் கரையேறி, தங்கள் நாட்டு பள பள மண்பாண்டங்களையும் மணி களையும் குவித்துவைத்துக் கூவிக் கூவி விற்கிறார்கள். பொன்னும் மணி யும் தரித்த பெண்கள் எடைபோட்டு அவற்றை வாங்கிச் செல்கிறார்கள். நாகரிகத்தில் சிறந்த, அறிவு பெற்ற ஒரு சமூகம் அந்த ஊரில் வளமாக வாழ்ந்துகொண்டிருக்கிறது.

கிட்டத்தட்ட 3 ஆயிரம் ஆண்டு களுக்கு முன்னர் செழுமையான தமிழ்ச் சமூகம் எப்படி வாழ்ந்தது என்கிற காட்சியை இப்படி ஆனந்த விகடன் இதழில் விவரித்து எழுதி யிருக்கிறார் வெ.நீலகண்டன்.

ஒரு சங்க இலக்கியப் பாடலின் விளக்க வுரை போல இருக்கும் இந்தச் சித்திரம், கற்பனையல்ல. கீழடி, கொந்தகை, அக ரம், மணலூர் கிராமங்களில் நடக்கும் அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களும் கட்டுமானங்களும் இப்படியொரு வாழ்க்கையைத்தான் காட்சிப் படுத்துகின்றன என்று கூறுகின்றார் நீலகண்டன்.

கீழடி உலகின் பழம்பெரும் மனித நாகரிக எழுச்சியின் ஒரு சான்று. உலகம் கவனிக்காதுவிட்ட அல் லது மறக்கடிக்கப் பட்ட வரலாற்றின் ஆணிவேர். அங்கு தொடர்ந்து நடந்து வரும் அகழ்வாய்வுகளில் அடுக்கடுக்காகச் சான்று கள் தொடர்ந்து கிடைத்த படியே இருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் மூவாயிரம் ஆண்டுக ளுக்கு முன்னரே தமிழர் கள் எவ்வளவு நாகரிகம் மிக்கவர்களாகவும் வளம் படைத்தவர்களாகவும் வசதி படைத்தவர்களாக வும் கல்வியறிவு மிக்க வர்களாகவும் இருந்தார் கள், வாழ்ந்தார்கள், வளர்ந் தார்கள் என்பதைப் பறை சாற்றுகின்றன.



6

பல்வேறு இடர்பாடு களுக்கு மத்தியில் தமிழக அரசின் நிதி ஒதுக் கீட்டில், நீதிமன்றத்தின் தலையீட்டு டன் 4, 5ஆவது கட்ட ஆய்வுகள் நடத்தப்பட்டன. முதல் மூன்று கட்ட ஆய்வுகளிலும் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களைக் கொண்ட அறிக்கை ஏற்கனவே வெளியிடப்பட்டுவிட்டது. தொடர்ந்து நடக்கும் ஆய்வுகளின் முடிவுகளும் அறிவி யல்பூர்வமான ஆதாரங்களுடன் அடுத்த அறிக்கையாக வெளியிடப்படும். இப்போது 6ஆவது கட்ட ஆய்வு கள் அங்கு நடந்து வருகின்றன.



7

முதல் மூன்று கட்ட ஆய்வுகளின் போதும் கீழடியில் இருந்து 7 ஆயி ரத்து 800 சான்றுப் பொருள்கள் கிடைத் தன. அவை பல் வேறு காலப் பகு திக்குரியன என்கிற போதும் அவற்றில் சில பொருள்கள் கிறிஸ்துவுக்கு முற் பட்ட 600 ஆண்டு களுக்கு முந்தியவை என்று கரிம ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டன.

தொடர்ந்து நடத்தப்பட்ட 4ஆம் கட்ட ஆய்வுகளில் 5 ஆயிரத்து 820 சான்றுப் பொருள்களும் 5ஆம் கட்ட ஆய்வில் 900 சான்றுப் பொருள்களும் 6ஆம் கட்ட ஆய்வில் 3 ஆயிரத்து 500 சான்றுப் பொருள்களும் கிடைக்கப்பெற்றுள்ளதாக தமிழ்நாடு தொல்லியல்துறை ஆய்வாளர்கள் தெரிவித் துள்ளனர்.

தற்போது நடந்துவரும் ஆய்வு கீழடியில் தொழிற்பேட்டை இருந்திருக்கக் கூடிய இடத்தில் நடந்துவருகின்றது. அங்கிருந்து கிடைத்த சான்றுப் பொருள்களின் உதவி யுடன் கிட்டத்தட்ட 2 ஆயிரத்து 850 வருடங்களுக்கு முன்னரே அங்கு தொழிற் பேட்டை இருந்திருக்கின்றது, தொழிற்சாலைகள் (23 ஆம் பக்கம் பார்க்க)



8

## காவலர்களுக்கு விழுந்தது அடி!

காவல்துறையினரைப் பொதுசனம் தாக்கிய சம்பவம் ஒன்று பண்டாரகம அட்டுலுகம பகுதியில் அண்மையில் நடந்துள்ளது. இதற்குக் காரணம் என்னவென்று தோடிப்பார்த்தால், போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு அந்தப் பகுதி மக்கள் ஆதரவாளர்களாக இருக்கிறார்கள் என்பது வெளிச்சமாகியுள்ளது.

கடந்த 9ஆம் திகதி போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளுக்காக அந்தப் பகுதிக்கு காவல்துறையினர் சென்றனர். கஞ்சா விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் நபர் ஒருவரைக் கைது செய்தனர். மேற்கொண்டு அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுகின்ற முக்கிய சந்தேக நபரான 'கோட்டு கோலா ரிஃபாய்' என்பவரைக் கைது செய்வதற்கு அவர் வழிவகுத்தார் எனவும் கூறப்படுகிறது.

இந்த நிலையிலேயே அந்தச் சந்தேகநபரைக் காவல்துறையினர் அழைத்துச் செல்ல முற்பட்ட போது அந்தப் பகுதி மக்கள் காவல்துறையின் வாகனத்தைத் தடுத்து அதிகாரிகள் மீது கல்லெறிந்துள்ளனர். ஹெராயின், மாவா, போதை மாத்திரைகள் மற்றும் கஞ்சா போன்றவற்றை வைத்திருக்கிறார் என்று சந்தேகிக்கப்படும் பிரதான சந்தேக நபரை கைவிலங்கிட்டு கைதுசெய்ய முயன்றபோது சந்தேகநபரின் உறவினர்கள் மற்றும் அப்பகுதியில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்ட நான்கு பெண்கள் மற்றும் நான்கு ஆண்கள் காவல் துறையினரைத் தாக்கியுள்ளனர்.

தாக்குதலின் போது ஒரு சில காவல் அலுவலர்கள் காயமடைந்தனர். அதே நேரத்தில் காவல்துறையைத் தாக்கிய குழுவின் நான்கு சந்தேக நபர்கள் தப்பி ஓடிவிட்டனர். அதன்பின்னர் மேலதிகக் காவல்துறையினர் வரவழைக்கப்பட்டு அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்துத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. காவலர் களைத் தாக்குமளவுக்குப் போதைக் கடத்தல்காரர்களுடன் அந்தப் பகுதி மக்கள் எவ்வளவு அந்நியோன்னியமாக இருந்திருக்கிறார்களே!





## தகவல் பெட்டகம்

### மகிந்த ஓய்வெடுப்பாரா?

இந்த வாரத்தில் அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியத்தையும் விறுவிறுப்பையும் ஒருங்கே திரட்டிய செய்தி தலைமை அமைச்சர் மகிந்த ராஜபக்ச அந்தப் பதவியில் இருந்து விலகப் போகிறார், அவருக்குப் பதிலாக அவரது தம்பியான பசில் ராஜபக்ச பதவியேற்கப்போகிறார் என்பதுதான். இந்தச் செய்தி எங்கிருந்து பற்றிக் கொண்டது என்பது தெரியாது. ஆனால், இன்னும் இரண்டு வருடங்களில் மகிந்த பதவி விலக பசில் அந்த இடத்தை நிரப்புவார் என்று ஆங்கில ஊடகம் ஒன்றில் செய்தி வெளியானதும் பரபரப்பு தொற்றிக்கொண்டது. அனேகமாக மற்றைய எல்லாச் செய்தி ஊடகங்களும் அந்தச் செய்தியை அப்படியே காவின. மகிந்த ராஜபக்ச அண்மைக் காலமாகவே வயது மூப்பின் காரணமான. இயலாமையை வெளிப்படுத்தி வருகின்றார். பொது நிகழ்வுகளில் அவரால் ஏனையவர்களின் துணை இன்றிப் பங்கேற்க முடியவில்லை. தொடர்ந்து உரையாற்றும்போது அவர் அதிகம் சோர்ந்து போகிறார். அவரது முகத்திலும் உடலிலும் மூப்பின் தளர்வு தெளிவாகவே தெரிகின்றன. இவையெல்லாம் சேர்ந்து இந்தச் செய்தியில் உண்மையிருக்கும் என்று அனைவரையும் நம்ப வைத்தன. ஆனால், கடைசியில் அப்படிப் பதவி விலகும் எண்ணம் எதுவும் தனக்கு இல்லை என்று மகிந்தவும், அரசில் பதவி ஏதும் தேவை என்கிற எண்ணம் தனக்கில்லை என்று பசிலும் கூறியதன் மூலம் இந்தச் செய்திகளுக்கு முற்றுப் புள்ளி வைத்தார்கள். இருப்பினும் நெருப்பில்லாமல் புகையாது தானே!



## திரும்பிப் பார்க்க வைத்த காதல் ஜோடி!

வடக்குக் கிழக்கில் உயிர்மாய்ப்புகள் அதிகரித்துவரும் சூழலில் அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது காதலர்களின் உயிர்மாய்ப்புச் சம்பவம் ஒன்று. கிளிநொச்சி பரந்தன், ஓசியர் சந்திப்பகுதியில் ஆண், பெண் இருவரது சடலங்கள் தூக்கில் தொங்கிங்கொண்டிருந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தன. கடந்த 4ஆம் திகதியிலிருந்து காணமல் போயிருந்த இந்த இணை தூக்கில் தொங்கிய நிலையில் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளமை அதிர்ச்சி தந்துள்ளது. மிகுந்த கவலையையும் சமூகம் குறித்த பரிதாபத்தையும் அதிகப் படுத்தியுள்ளது இவர்களின் இறப்பு. இலங்கை மின்சார சபையில் பணியாற்றும் 28 வயதுடைய சுசிதரன், கிளிநொச்சி பிரதேச செயலகத்தில் பணியாற்றும் பட்டதாரிப் பயிலுநரான 27 வயதுடைய தனுஷியா ஆகிய இருவருமே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டிருந்தனர். காதலித்து வந்தனர் எனக்கூறப்படும் இருவரும் மணம் முடித்துத் தமது வாழ்க்கையினை மேற்கொண்டு நடத்துவதற்குரிய வசதி வாய்ப்புகளைக் கைவசம் வைத்திருந்தும் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளனர் என்று கூறப்படுவது எந்தளவிற்கு உண்மை என்பதை காவல்துறையினர் தீர விசாரித்தால் தான் அறியமுடியும். தற் கொலை என்று கூறி இந்தச் சாவுகளைச் சாதாரணமாகக் கடந்து செல்லாமால் தீர விசாரிப்பது பல உண்மைகளை வெளிக் கொண்டு வர உதவும். இவர்களின் இறப்புக்குப் பின்னாலிலுக்கின்ற காரணம் சாதி என்ற அரக்கன் என்று விமர்சனங்களும் விசனங்களும் எழுந்திருக்கின்ற பின்னணியில் ஆழமான விசாரிணைகள் அவசியம். பிரச்சினைகளுக்கான தீர்வாக சாவுகள் ஒருபோதும் மனிதர்கள் எப்போது புரிந்துகொள்ளப் போகிறார்கள்.




## நாடாளுமன்றில் வந்தமர்ந்த தூக்குத் தண்டனைக் கைதி!

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதி ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்ற செய்த சம்பவம் இலங்கையின் மதிப்பையே கேள்விக்குள்ளாக்கியுள்ளது. கடந்த 9ஆம் திகதி கூடிய நாடாளுமன்ற அமர்வின் போது இது இடம்பெற்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் 'சொக்கா மல்லி' என அழைக்கப்படும் பிரேமலால் ஜயசேகர. இவர் 2015ஆம் ஆண்டு நாடாமுமன்றத் தேர்தல் சமயத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பதற்குக் காரணமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டவர். இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இப்படியிருக்க அவர் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். நீதிமன்றில் அனுமதி பெற்று அவர் இப்போது நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவியேற்றுக்கொண்டுள்ளார். இதற்குச் சபையில் பலத்த எதிர்ப்பு கிளம்பியது. எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அமர்வைப் புறக்கணித்தனர், கறுப்பு பட்டி அணிந்தவாறு நாடாளுமன்றத்துக்கு வந்த அக்கட்சி உறுப்பினர்கள், கறுப்பு பட்டிகளை சபைக்குள் வீசி எறிந்தவாறு சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

தலைமை அமைச்சர் மஹிந்த ராஜபக்ச, அதிபராகப் பதவி வகித்த காலப் பகுதியில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றவாளியாக நீதிமன்றால் அறிவிக்கப்பட்டபோது அவர் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது. தற்போது தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கும் வாய்ப்பை வழங்கியது, அரசமைப்புக்கு முரணானது என எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கடிந்தார். அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா என்கிற தொனியில் தான் ஆளும் தரப்பு இந்த விடயத்தைப் பார்த்து ரசித்ததுபோல் தெரிந்தது.



# மட்டற்ற அதிகாரத்தை நோக்கி ஓரடி பின்னால்...

**வி.அருணாசலம்**

இலங்கையின் முன்னாள் அதிபரான ஜெ.ஆர் ஜெயவர்த்தன 1978ஆம் ஆண்டில் ஓர் அரசமைப்பை மிகவும் நுட்பமாக வரைந்தார். சிறிமாவோ தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சி இனிமேல் ஒருபோதும் தலையெடுக்கக்கூடாது என்ற எண்ணத்திலே அவர் உருவாக்கியது அந்த அரசமைப்பு. அதில் மாற்றம் செய்வதானால், நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்ற எல்லைக் கல்லையும் நாட்டி வைத்தார். அந்த அரசமைப்பின் மூலம் ''ஒரு மன்னனுக்குரிய அதிகாரத்தைப் பெற்றுவிட்டேன்'' என்றும் பெருமைப்பட்டுக் கொண்டார்.

2015இல் ஆட்சிக்கு வந்த ரணில் அதிபருக்கு இருந்த அதிகாரங்கள் பலவற்றைக் குறைத்துப் பிரதமருக்கான அதிகாரங்களைக் கூட்டுவதற்குரிய தன்னால் இயன்ற ஏற்பாடுகளைச் செய்தார். அதிபராக ஒருபோதும் வரமுடியாது என்பதை உணர்ந்து தன்னால் ஓரளவுக்காவது எட்டக்கூடிய பிரதமர் பதவியில் இருந்து கொண்டு உச்சமாக எதைச் செய்யலாம் எனச் சிந்தித்தார். பொது அதிபர் வேட்பாளரான மைத்திரிபாலவுக்கு ஆதரவளித்து அவரை அதிபராக்கி குடும்ப ஆட்சிக்கும் ஊழலுக்கும் முற்றுப்புள்ளி வைப்பது என்ற தலைப்பில் ராஜபக்சாக்களுக்கு எதிராகக் களமிறங்கி 19ஆவது திருத்தம் மூலம் ஆணைக்குழுக்களை உருவாக்கி ஒரு மக்களாட்சியைக் காட்ட முற்பட்டார். இந்தத் திருத்தம் மக்களுக்கு எந்தளவுக்கு நன்மை பயத்தது என்பதைவிட ராஜபக்ச குடும்பத்துக்கு எதிராக ரணில் போட்ட கால் கட்டு, கை கட்டாகவே இருந்தது.



இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் அதிபர் தேர்தலில் நிற்க முடியாது என ஆரம்பித்து நடிகை கீதா குமாரசிங்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்பட்டது. இதன் பின்னணி இரட்டைக் குடியுரிமையுள்ள கோத்தபாய ராஜபக்ச, பசில் ராஜபக்ச போன்றவர்களை ஓரம் கட்டுவது. மூன்றாவது தடவையாக யாரும் அதிபராக முடியாது என்று அறிவிக்கப்பட்டது. இது மகிந்த ராஜபக்சவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டது. 35 வயதுக்குட்பட்டவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்பது நாமல் ராஜபக்சவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்டது. இப்படியிருக்க, 19ஆவது திருத்தத்தை வென்று, தனது அமெரிக்கக் குடியுரிமையை இழந்து கோத்தபாய ராஜபக்ச அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றார். ரணில் தரப்பு ஆட்டம் கண்டது. ரணிலின் கூட்டணியாக இருந்த தமிழ் முஸ்லிம் தலைவர்களும் ஓரமாகினர்.

> **ராஜபக்சக்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிம்பம் நான்கரை வருடங்களில் சுக்குநூறாக உடைவதற்கு ரணில் தரப்பின் செயற்பாட்டு வடிவத்தின் மந்தமே பிரதான காரணம். அத்தோடு, தமிழ் முஸ்லிம் தலைவர்கள் விடுகின்ற அறிக்கைகள் ஞாயிறுத் தாக்குதல் என்பனவும் சிங்கள மக்கள் மைத்திரிரி - ரணில் அரசைத் தள்ளிவைக்கக் காரணமானது.**

கோத்தபாயாவின் வெற்றியைத் தடுத்து நிறுத்துவதற்காக ரணில் தரப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் கட்சிகள் ஆகியன பல கதைகளையும் அவிழ்த்து விட்டன. இராணு ஆட்சி வரப்போகிறது, வெள்ளை வான் கடத்தல் இனி அடிக்கடி நடக்கும், குடும்ப ஆட்சி மலரப்போகிறது, ஊழல் ஆட்சி வரப்போகிறது என்றெல்லாம் கூறிய போதிலும் ''நல்லாட்சி'' செய்தவர்கள் கூடப் புதிதாக எதையும் செய்யவில்லை என்பதை உணர்ந்து கொண்ட பெரும்பான்மைச் சிங்கள மக்கள் ரணில் மைத்திரிசார் கட்சிகளை ஓரம் கட்டினர்.

ராஜபக்சாக்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் இருந்தாலும் அதைவிட மத்திய வங்கி ஆளுநராக சிங்கப்பூர் பிரஜை ஒருவரை நியமித்துப் பல கோடி ரூபா பிணைமுறி வியாபாரத்தில் ஈடுபட்டது என்பதும் மக்களைத் திசை திருப்பியது. மகிந்த தரப்பு அபிவிருத்தியைச் செய்துவிட்டுக் கொள்ளையடித்தது ஆனால் ரணில் தரப்பு வங்கியை நேரடியாகவே கொள்ளையடித்தது என்று சாதாரண சிங்கள மக்கள் கதைக்கும் நிலை உருவானது.

ராஜபக்சக்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட பிம்பம் நான்கரை வருடங்களில் சுக்குநூறாக உடைவதற்கு ரணில் தரப்பின் செயற்பாட்டு வடிவத்தின் மந்தமே பிரதான காரணம். அத்தோடு, தமிழ் முஸ்லிம் தலைவர்கள் விடுகின்ற அறிக்கைகள் ஞாயிறுத் தாக்குதல் என்பனவும் சிங்கள மக்கள் மைத்திரி - ரணில் அரசைத் தள்ளிவைக்கக் காரணமானது.



1978ஆம் ஆண்டில் ஜெ.ஆர். ஜெயவர்த்தன வரைந்த அரசமைப்பை மாற்றுவதற்கு 3இல் 2 பெரும்பானன்மை அவசியம் என்ற தடைதாண்டலை ராஜபக்சாக்கள் 42 வருடங்களின் பின்னர் தாண்டியிருக்கிறார்கள்.

இனி இதை வைத்துக்கொண்டு எதையெல்லாம் செய்துவிட முடியும் என அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு மிகப் பெரிய மூளைப்பலம் கொண்ட வியத்மக என்ற அமைப்பின் துறைசார் புத்திஜீவிகள்



உள்ளனர். 2020ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் தொடர்பில் கலாநிதி பாக்கிய ஜோதி சரவணமுத்து (நிறைவேற்றுப் பணிப்பாளர் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலை) தேர்தலுக்கு முன்னர் எழுதிய கட்டுரை ஒன்றில் ''இந்த ஆட்சிக் குழுவைப் பொறுத்த வரையில் பொதுத் தேர்தலானது குடும்ப ஆட்சியைத் திரட்டி வசப்படுத்தும் வகையில் நாடாளுமன்றில் 3இல் 2 பங்கு பெரும்பான்மையை பெறும் முயற்சியாகவே இருந்துள்ளது. தனக்குப் பிடித்தமான ஓர் அரசையும் ஆட்சி முறையையும் உருவாக்கும் வகையில் அரசமைப்பு ரீதியில் தேர்தலில் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக மக்களின் பணிப்பாணையைப் பெற்றுக் கொள்வது சம்பந்தமான ஓர் விடயமாகும். அவர் (கோத்தபாய ராஜபக்ச) தெளிவாகவே 1978இன்



அரசமைப்பு வழங்கும் செயற்பாட்டுக்கான தடை யற்ற வச தியை விரும்புவதால் அவ ருக்கு 3 இல் 2 பெரும் பான்மை கிடைத்தாலும் கிடைக்காமல் போனாலும் வேகமாகக் காய் நகர்த்தி அரச மைப்புக்கான 19திருத்தத்தின் மட்டுப்பாடு களை மீறி 13ஆம் திருத்தத்தின் மட்டுப்பாடு களின்றி 1978 அரசமைப்புக்கே திரும்பினா லும் ஆச்சரியப்படுவதற்கில்லை'' என்று பதிவு செய்திருக்கிறார்.

1978 அரசமைப்புக்கே மீண்டும் போதல் என்பது 42 வருடங்கள் கடந்த பின்பும் ஜெ.ஆர் உருவாக்கிய அரசமைப்பு சக்தி மிக்கதாக இருப்பதையே காட்டுகிறது. இது ஏற்கனவே மக்களால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும்.

3இல் 2 பெரும்பான்மையை ஒரு போதும் யாராலும் பெற முடியாது என்று ஜெ.ஆர். ஜெயவர்த்தனா நினைத்திருந்ததை ஐக்கிய தேசியக் கட்சியையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் அரசியலில் இருந்து ஓரம்கட்டிப் புதிய கட்சியான பொதுஜன பெரமுன நிறை வேற்றியிருக்கிறது. இலங்கை அரசியலில் இதை யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை.

# இது நியாயமா?

> “சமூகத்தின் மோசமான அம்சம் ஒன்றைப் பாதுகாப்பதற்கு ஆதரவாகவுள்ள சட்டத்தரணிகளே அரசியல்வாதிகளாகவும் மாறியிருப்பது அல்லது மக்களுக்குத் தலைமை தாங்க நினைப்பதே இங்கு சிக்கலுக்குள்ளானதாகின்றது.”

■ செ.தர்மராஜா

தென்னிந்தியப் பிரபல திரைப்பட நடிகர் எம்.ஆர்.ராதா பாடசாலைக்குச் சென்று கல்வி கற்காதவர். எழுத வாசிக்கத் தெரியாதவர். ஆனால் சமூகம் பற்றிய புரிதலும் தேடலும் அக்கறையும் அவரிடம் அதிகளவில் இருந்தன. அதையே தனது நடிப்பிலும் பிரதிபலித்தார். சட்டத்தரணிகள் பற்றிய அவரது கூற்று ஒன்று மிகவும் பிரபல்யமானது. "25 வருடங்களாகப் பொய் சொல்லிப் பிழைத்த சட்டத்தரணி ஒருவர் நீதிபதியாகப் பதவியேற்றால் அவரது தீர்ப்பு எப்படியிருக்கும்?" என்று அவர் ஒரு மேடையில் கிண்டலாகக் கேள்வியெழுப்பினார். அவர் நீதித் துறை பற்றிக் கூறிய விடயங்களில் இது முக்கியமானது. ஆழ்ந்த சிந்தனையை அப்போது அளித்தது. இந்தக் கூற்று இலங்கைத் தமிழர் விடயத்திலும் சில சட்டத்தரணிகளுக்குப் பொருந்தும்.

இலங்கையிலும் ஒரு சட்டத்தரணி நீதியமைச்சராக்கப்பட்டிருக்கிறார் என்பதற்காக எம்.ஆர்.ராதாவின் கூற்றை இங்கு முன்னிலைப்படுத்தவில்லை என்பதை வாசகர்கள் அறிவீர்கள் என்பதை நான் அறிவேன்.

யாருக்கோ சொந்தமான காணியில் மணல் ஏற்றுவது, கெரோய்ன், கஞ்சா, ஐஸ் போதைப் பொருள்களைக் கடத்துவது, கொலை, கொள்ளை, வன்புணர்வு, மிரட்டல், வாள் வெட்டு, பணத்தை வாங்கிவிட்டு ஏறமாற்றுவது, அரச ஊழியர்களின் ஊழல்கள் எனச் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவர்கள் பலர் இருக்க, அவர்களைத் தண்டிப்பதற்கு இலங்கை அரசின் சட்டங்களில் போதிய இடமுமிருக்க, இந்தச் சமூக விரோதிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்து விடுகிறார்கள். இவர்களைச் சட்டத்தின் பிடியில் இருந்து வெளியே எடுப்பவர்கள் யார்? இந்தச் சமூகத்திலிருந்து சட்டம் கற்று அதில் பட்டம் பெற்ற சட்டத்தரணிகளே.

சரி போகட்டும்! அவர்கள் அத்தோடு நின்றுவிட்டிருந்தால் பரவாயில்லை. சமூகத்தின் மோசமான அம்சம் ஒன்றைப் பாதுகாப்பதற்கு ஆதரவாகவுள்ள சட்டத்தரணிகளே அரசியல்வாதிகளாகவும் மாறியிருப்பது அல்லது மக்களுக்குத் தலைமை தாங்க நினைப்பதே இங்கு சிக்கலுக்குள்ளானதாகின்றது.

## அவர்கள் கூறும் நியாயம்

தம்மை நாடிவரும் எவருக்காகவும் தாம் சட்டச் சேவையை வழங்கவேண்டியது தமது அறம் என்று சட்டத்தரணிகள் இந்த விடயத்தில் வாதாடுவார்கள். சட்டத்தின் முன்னால் குற்றம் நிரூபிக்கப்படும் வரையில் எவரும் குற்றவாளி அல்லர் என்பதால், சந்தேகநபர்களுக்காகத் தாம் நீதிமன்றத்திற்குச் செல்வதைத் தவறென்று எவரும் சொல்ல முடியாது என்றும் அவர்கள் வாதாடுவார்கள்.

திருட்டுக் குற்றத்திற்காகப் பல தடவைகள் கைது செய்யப்பட்டு பல தடவைகள் குற்றவாளியாகக் காணப்பட்டவர் மீண்டும் அதுபோன்ற குற்றச்சாட்டுக்குள்ளாகி நீதிமன்றத்தில் நிறுத்தப்படும்போதும் சட்டத்தரணிகள் இதே நியாயத்தையே சொல்வார்கள். ஒரு கொலைக் குற்றவாளி மற்றொரு கொலை வழக்கில் கைதுசெய்யப்படும்போது அவருக்காக வாதாடும் சட்டத்தரணியும் இதையேதான் சொல்வார்.


ஒரு தூக்குத் தண்டனைக் குற்றவாளி நாடாளுமன்றத்தின் உறுப்பினராகப் பதவியேற்றுக்கொண்டபோது அந்தச் சபையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காது அமர்ந்திருந்தவர்களில் சட்டத்தரணிகள் பலரும் அடக்கம் என்பதையும் மறந்துவிட முடியாது.

சட்டத்தரணிகளில் பலர் நேர்மையானவர்களாகவும், நல்லவர்களாகவும், குற்றவழக்குகளுக்காக நீதிமன்றப் படியேறாதவர்களாகவும் இருக்கின்றார்கள் என்பது எவ்வளவுக்கு உண்மையோ அதுபோன்றே குற்றங்களே தமக்கான வாழ்வாதாரம் என்று வாழும் சட்டத்தரணிகளும் இருக்கின்றார்கள் என்பதும் உண்மையே!

## திருகுதாளம்

ஒரு மூத்த சட்டத்தரணி (இம்முறை தேர்தலில் நின்று தோற்றவர்) பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதான ஓர் அரசியல் கைதியின் வழக்கில் முன்னிலையவதற்கு அந்தக் கைதியின் வெளிநாட்டிலுள்ள உறவுக்காரருடன் பேரம்பேசிப் பல லட்சங்களை உருவியிருக்கிறார் என்ற குற்றச்சாட்டு கவனத்துக்குரியது.

சந்தேகநபர் ஒருவர் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர் குற்றமற்றவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டால் அவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நீதிமன்றில் காவல்துறையினர் வழங்கிய பி அறிக்கையை நீக்கி, அவர் மீதான வழங்குகளைத் திரும்பப் பெற்றுச் சிறைச்சாலை நிர்வாகம் அவரை விடுதலை செய்யும். அதற்குத் தீர்ப்பின் பிரதி ஒன்றைத் தீர்ப்பு வழங்கிய நீதிமன்றத்தின் பதிவாளரிடம் பெற்று அதைக் கொண்டு சென்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நீதிமன்றப் பதிவாளரிடம் முன்வைக்கவேண்டும். உடனடியாக பி அறிக்கை நீக்கப்படும். அதற்கான உரிய கடிதத்தைப் பெற்றுக் கைதி அடைத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைச்சாலை நிர்வாகத்திடம் சமர்ப்பித்தால் உடனேயே கைதியை வெளியே எடுத்துவிட முடியும்.



தீர்ப்புக் கிடைத்த மறுநாளே கைதியை வெளியே எடுக்கின்ற நிலை காணப்படுகிறபோதும், செலவேதுமின்றிக் கைதியை வெளியே எடுக்கும் இந்த விடயத்துக்கு மேற்குறிப்பிட்ட சட்டத்தரணி வெளிநாட்டில் இருப்பவரிடம் 2 லட்சம் ரூபாவைப் பெற்றிருக்கிறார் என்பதும் குற்றச்சாட்டு.

தமிழ்ச் சமூகத்தில் விரவியுள்ள குற்றச் செயல்களுக்குப் பொலிஸாரும், இலங்கை அரசுமே காரணம் என்று குற்றம் சாட்டுபவர்கள் குற்றம் புரிந்தவருக்குச் சாதகமாக வாதாடி, பணம் பெற்றுக்கொண்டு குற்றவாளியை வெளியே எடுத்துவிடுகின்ற தமிழ்ச் சட்டத்தரணிகளைக் கண்டுகொள்வதில்லை.

இதற்கும் மேலான கொடுமை என்னவென்றால் தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகள் அதிக சட்டத்தரணிகளை தமது உறுப்பினர்களாக உள்வாங்கியிருக்கின்ற போதிலும் பாதிக்கப்பட்ட - நீதிகேட்டுத் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபடுகின்ற மக்களுக்கான இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்கான துணை அமைப்புக்கள், ஏற்பாடுகள் எதையும் அந்தக் கட்சிகள் கொண்டிருக்க வில்லை என்பது.

வெளிநாட்டில் சொந்தக்காரர்கள் உள்ள அரசியல் கைதிகளை வெளியே எடுத்து விடுவதற்குத் தமிழ்ச் சட்டத்தரணிகள் துடியாய்த் துடித்துப் பல லட்சங்களை அவர்களிடமிருந்து உருவி வருவதும் திரை மறை விடயமல்ல.

ஆனால், ஒருவேளை இத்தகைய சட்டத்தரணிகள் அரசியலுக்கு வந்தால் தாம் பணத்திற்காகச் செய்தவற்றையே ஒரு சேவையாக வெளிப்படுத்துவார்கள். உண்மை என்னவென்றால் அரசியல் கைதிகளில் அதிகம்பேரை நீதிமன்றங்கள் வாயிலாக வெளியே எடுத்துவிட்டவர்கள் மனித உரிமைகள் சார்ந்து இயங்குகின்ற சட்டத்தரணிகளும், அதைச் சேவையாகச் செய்த சட்டத்தரணிகளுமேயாவர்.

## ஒரு கேள்வி

புங்குடுதீவைச் சேர்ந்த மாணவி வித்தியா படுகொலை வழக்கில் குற்றவாளிகளைக் காப்பாற்றுவதில் அப்போதைய மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர், தமிழ்த் தேசியம் பேசும் சட்டப் பேராசிரியர் உட்படச் சிலர் முனைந்தார்கள் என்கிற குற்றச்சாட்டு எழுந்ததை மறக்க முடியாது. ஆனால் மக்களின் எழுச்சி காரணமாக அந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் சார்பாக நீதிமன்றத்தில் தோன்றுவதில்லை என்கிற முடிவைச் சட்டத்தரணிகள் கூட்டாக எடுத்தார்கள்.

அப்படியிருக்கும்போது சட்ட உதவிக்காகத் தம்மை நாடிவரும் எவருக்கும் அதை வழங்கமுடியாது என்று மறுப்பது அறமல்ல என்று ஏனைய குற்றவியல் வழக்குகளில் மட்டும் சட்டத்தரணிகளால் எப்படிச் சொல்ல முடியும்? எனவே உச்சமான தண்டணைகளை இலங்கைச் சட்டத்தின் கீழ் வழங்க வாய்ப்புள்ளபோதும் அவர்களை மீண்டும் சமூகத்தில் "சுத்தமான சூசைப்பிள்ளைகளாக" நடமாட விடுவதன் பின்னணியில் காவல்துறையினரும் அரச அதிகாரமும் மட்டுமே இருக்கின்றது என்று நம்புவதில் அர்த்தமில்லை.

தமிழ்ச் சமூகத்தில் இவ்வாறான சமூக விரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் குறிப்பிட்ட அளவினராக இருக்கலாம். அவர்களுக்கான தண்டணையைப் பெற்றுக் கொடுத்தால் (வித்தியா கைதிகளுக்கு வழங்கியதுபோல) தமிழச் சமூகத்தை ஓரளவுக்காவது ஒழுங்குபடுத்த முடியும். இது விடயத்தில் தமிழ்ச் சட்டத்தரணிகள் இறுக்கமான நடைமுறைகளைக் கடைப்பிடித்தால் பல முறைகேடுகளைத் தடுக்க முடியும். தமிழ்ச் சமூகத்தைச் சீர்ப்படுத்த முடியும். இதற்கான முன்னெடுப்பைத் தமிழர்களே மேற்கொள்ளவேண்டும். ■



# இனிக்கும் தொழில் இது...!

■ காயா

மருதனார் மடத்திலிருந்து உரும்பிராய்ச் சந்தி நோக்கி உந்துருளியில் பயணித்துக்கொண்டிருந்தபோது அந்த வீதி நீளமும் இடையிடையே அமர்ந்திருந்து திராட்சைப்பழ வியாபாரம் செய்தவர்கள் கண்ணுக்குத் தட்டுப்பட்டனர். உந்துருளியை ஓரம்கட்டி அதில் ஒருவரிடம், "பழம் கிலோ என்ன விலை?" என்று கேட்டேன். "முந்நூற்றம்பது" என்று பதிலளித்தார் விற்பவர். அந்த இடத்துக்கு அண்மையாகப் பெரும் தோட்டங்கள் இருப்பதும் தெரிந்தது. அந்தத் தோட்டங்களில் காய்களும் பழங்களும் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றைப் பார்க்கும் ஆவல் என்னை உந்தித் தள்ளியதால் பிரதான வீதியிலிருந்து உள்ளிறங்கி ஒழுங்கை ஒன்றினூடாக உந்துருளியைச் செலுத்தித் திராட்சைத் தோட்டங்களைப் பார்வையிட்டேன். அதில் ஒரு தோட்டத்தில் விவசாயி ஒருவர் வேலை செய்து கொண்டிருந்தார். வலையால் மூடப்பட்ட அந்தத் திராட்சைக் கொடிகளின் கூட்டுக்குள் நின்று கொடிகளைச் சீர்செய்து கொண்டிருந்த அவர் எனது உந்துருளியின் சத்தத்தைக் கேட்டுப் பார்வையை எனது பக்கம் திருப்பினார். என்னைக் கவனித்த கையோடு அவரிடம் நான் கதை குடுத்தேன். அவர் பெயர் கமல். அந்த இடம் உரும்பிராய் வடக்கு விளாத்தியடி லேன்.

திராட்சைக் கொடியைச் சீர்செய்து கொண்டிருந்த அவரிடம் திராட்சைச் செய்கை பற்றிக் கேட்டறியலாம் என்ற நோக்கில் நான் கேள்விகளைத் தொடுத்ததும் பெரு விருப்போடு பதிலளித்தார் அவர். திராட்சைத் தோட்டம் நல்லதொரு தொழில் முயற்சி என்றும் இந்தத் தொழிலைத் தான் விரும்பிச் செய்கிறார் என்றும் அவருடைய கதையின் சாரம். இதன் ஆரம்பம் பெரியதொரு வேலைத் திட்டமாக இருந்தாலும் சலிக்காமல் மனம் வைத்துச் செய்தால் இனிப்பளிக்கும் தொழில் இது என்றார் அவர்.

"கொடிய ஒடிச்சு வெட்டி ஒக்ரோபர் மாதம் அளவில பதிவைப்பம். ஒரு மாசம் ஒண்டரை மாதத்துக்க அது சின்னக் கன்டா வந்திடும். முதல்ல நிலத் தில ஏழு அடிக்கு ஒரு கிடங்கு கிண்ட வேணும். 2அடி 3அடி ஆழத்தில சதுரமாக் கிண்டவேணும். அதுக்குள்ள வெப்பங் குலைய நல்லா வைச்சு அடையவேணும். எருவும் கலக்க வேணும். பிறகு மூடிவிடவேணும். ஒக்ரோபரில இந்த வேலையைத் தொடங்கினா... பதி வைச்ச கன்ட டிசம்பரில... கிறிஸ்மஸ் சீசனில அதிலை வைக்கிறது. கிறேப்ஸ் தோட்டம் கிறிஸ்மஸ்ஸோடதான் ஆரம்பம். கிறிஸ்மஸிலையிருந்து பொங்கல் வரையான காலத்தில கன்டு நடுகை நடக்கிறது. மழை பெய்து கொஞ்சம் குறைய கன்டுகளை நட வேணும். மழை கடுமையா இருந்தா கன்டு பட்டிடும். கன்ட வைச்ச பிறகு வேருகளை எறும்புகள் தாக்காம லிருக்கப் பூருடான் எண்டு சொல்லி மருந்து போடுறது. பிறகு சின்னப் பாத்தி கட்டிக் கணக்குக் கணக்காத் தண்ணி விடவேணும். பிறகு வாய்க்கால் போட்டு மூன்று நான்கு நாள்களுக்கொருக்காத் தண்ணி இறைக்க வேணும். இப்பிடித் தண்ணியிறைச்சுக் கன்டு மேல வளரும் வரைக்கும் வேணும் எண்டால் வெங்காயம், பீட்ரூட் போன்றதுகளை வைக்கலாம். அதேநேரம் கன்டையும் வளத்துக் கொண்டு வரவேணும். நான் பீட்ரூட் செய்த னான்.." பெரியதொரு ஆரம்பத்தைக் கொண்ட திராட்சைச் செய்கையில் சில காலங்களுக்கு வேறு பயிர்ச் செய்கைகளைப் பக்கத் தொழிலாகச் செய்து வருமானமீட்டலாம் என்றார்.

"கன்டு வளரேக்கக் கிழுவம் தடியக் கன்டுக்கு நேர ஊண்டிக் கன்டு வளர வளரத் தடியோட அதைக் கட்டிக்கொண்டு வரவேணும். கனக்கக் கெட்டுகள் விட்டு வளரும். அந்தக் கெட்டுகளை எல்லாம் தட்டித் தட்டி ஒரு கன்டத் தான் வளத்துக் கொண்டு வரவேணும். வளந்து மேல வந்த பிறகு கெட்டுகளைப் படர விடவேணும். பிறகு கெட்டுகளை நுள்ளி நுள்ளி விட்டால் கிளைகள் பெருகி வளரும். தண்ணி இறைக்கேக்க இதைச் செய்வன். சித்திரையில சோளகக் காத்து அடிக்கத் தொடங்க வைகாசியில கொடிய அரியிறது. அரிஞ்சால் கிளைகளைப் பெரிப்பிக்கலாம். படருற கொடிய இடையில வெட்டி அரிவு போட வேணும். கிளையளில கெட்டுக் கெட்டா வரும். அந்தக் கெட்டுகளைத் தட்டுறதுதான் அரிவு போடுறது. அது சரியான மினக்கேடு. இதுக்குத்தான் கூலி கொண்டுபோகும். ஒரு நாளுக்கே எனக்கு அம்பது அறுபது பேர் வேலைக்கு வருவாங்கள். சரியா அரிஞ்சாத் தான் இடையால பூத் தள்ளுவார். அதைத் தான் நம்பியிருக்கிறது. அரிவுக் கொடிதான் இது. வைகாசியில அரிஞ்சது. ஆணியிலையும் அரியலாம். முதல் அரிவுப் பழம் வெட்டிற்றன். இது ரெண்டாவது அரிவு. இப்ப காயாகக் கிடக்குது. முதலாம் அரிவு பூவில கிடக்கும் சின்ன மல்லிப் பருவமாக் கிடக்கும். பிறகு நாப்பத்தஞ்சு நாளால திருப்பி அரிவம். அப்பிடி யரிஞ்சதுதான் இந்த ரெண்டாம் அரிவு. இந்த மாசக் கடைசில இது பழமாகிடும். வெட்டலாம். அதுக்குப் பிறகு இனி வந்து அரிவில்ல. இந்தக் கொடிய ஒடிச்சு விடுறது. ஒரு கிளையும் இல்லாமல் மேல படந்திருக்கிற எல்லாத்தையும் ஒடிக்கவேணும். அப்போது நீங்க வந்து பார்த்தால் தோட்டம் வெளியாக் கிடக்கும். கன்டு பட்டுப் போச்சுது எண்டு நினைப்பீங்கள். அதிலையிருந்து முளைவைச்சு வளரும். அதுக்குப் பிறகு தை மாதம் பழம் வரும்." திராட்சைக் கொடி வருடத்துக்கு மூன்று முறை பழம் தருகின்றது என்ற அவர் அதில் செலவுகள் இருக்கின்றன என்றும் குறிப்பிட்டார்.

"இதுக்குள்ள கன பிரச்சினையிருக்கு. கிளை மேற் கைகுடுக்க வேணும் பூ வரேக்குள்ள சரியான வெயிலா, வெக்கையா இருந்தால் வெயிலுக்குக் கராவல் எண்டு சொல்லி நோய் வரும். அதுக்குப் பிறகு மருந்தடிக்க வேணும். ஒருக்கா மருந்தடிக்கிறதெண்டால் 6... 7ஆயிரம் மருந்துக்கு மட்டும் முடியும். இவ்வளவு தோட்டத்துக்கும் சுத்தியடிக்க ஒரு நாள் வேணும். காய் பிடிச்ச பிறகு தண்ணியக் குறைக்கவேணும். தண்ணியக் குறைச்சால் தான் பழுத்தண்டு வரும். கன்டு தடியில வளர்ந்து வரேக்குள்ள தூண்களை அடிக்க வேணும். தூணுக்கு மேல கம்பி அடிக்க வேணும். பிறகு பழம் வரவெளிக்கிட வலையும் போட வேணும். தூணுக்கு வலைக்குக் கம்பிக்கு மருந்தடிக்க இறைப்புப் பசளை எண்டு சொல்லி இந்த 34 பரப்பிலையும் தோட்டம் போடுறதுக்கு எனக்கு 35லட்சத்துக்குக் கிட்ட முடிஞ்சுது." அவரது செலவுகளைக் கேட்டதும் எனக்குத் திகைப்பு உண்டாயிற்று, அதை அவதானித்த அவர் "இதோட நாலாவது வருசம் செய்யிறன்" என்று தொடர்ந்தார்.


"கராவல் அடிச்சா பழத்தில கீறல்போல இருக்கும். அது நிறைய வந்தால் அது நட்டம் தான் அந்தப் பழம் எடுக்க மாட்டாங்கள். பூச்சி வந்து பூவுக்குள்ளயே இருந்து பழுதாக்கிச் சொறிக் காயாக வாறதுதான். நோர்மலான தரமான பழம் கிலோ முன்னூறு ரூபாக்குக் குடுத்தனான். கராவல் எடுக்க மாட்டாங்கள் அதை வைனுக்குத் தான் குடுக்கிறது. கிலோ 100 ரூவாக்குள்ளதான் எடுப்பாங்கள். அடுத்தது அழுக்கணவன் பிடிக்கும். அதுக்கும் மருந்தடிக்க வேணும். இப்பிடி நிறையச் செலவுகள் இருக்கு. இருந்தாலும் இதிலை ஒரு தடவையில 15 ஆயிரம் கிலோ பழம் வெட்டுவன். செலவுகள் போக வருசத்தில பத்துப் பதினைஞ்சு லட்சம் மிஞ்சும். நல்லாக் காய்ச்சுதெண்டால் 80... 90 லட்சத்துக்கும் போகத்துக்குப் பழம் வெட்டலாம். அதோட ஒரு கன்ட 5 வருசம் வரைக்கும் வைச்சிருக்கலாம். நான் இந்த முறை 3ஆவது வருசத்திலேயே அடிவெட்டிப் போட்டன். அதாவது அடியோட கன்ட வெட்டிவிட வெட்டின கட்டையில இருந்து வாற முளைய வளர்க்கிறது. டிசெம்பரில வெட்டி, வளர்ந்து வாற கொடிய முதல் செய்ததுபோல உயர்த்திக் கொண்டுவாறது. அடி வெட்டுப் போட்டால் வருசத்தில ஒருக்கா ரெண்டு தரம் தான் பழம் வரும். இல்லாட்டி மூன்று தரம் பழம் வெட்டலாம்" திராட்சைத் தோட்டம் ஆரம்பிக்கும் போதும், போகத்துக்குப் போகம் பழங்களை விளைவிப்பதற்கும் பெருமளவு செலவு செய்தாலும், ஐந்து வருடங்களுக்கு அந்தக் கொடிகளால் செல்வமீட்ட முடியும் என்ற நம்பிக்கையில் கமல் பெரு விருப்புடன் திராட்சைக் கொடிகளை அளைந்தளாவினார்.

**திராட்சைத் தோட்டம் ஆரம்பிக்கும் போதும், போகத்துக்குப் போகம் பழங்களை விளைவிப்பதற்கும் பெருமளவு செலவு செய்தாலும், ஐந்து வருடங்களுக்கு அந்தக் கொடிகளால் செல்வமீட்ட முடியும்.**



# ஏன் மாட்டைக் கையில் எடுக்கிறார்கள்?

மகிந்த ராஜபக்சவுக்கு மாடுகள் மீது வந்துள்ளது திடீரப் பாசம். மாட்டிறைச்சிக்கு நாட்டில் தடை விதிக்கும் முன்மொழிவை அவர் பகிரங்கப்படுத்தியிருக்கிறார். அது சட்டமாக நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில், அதற்கு எதிராக




உயர்நீதிமன்றத்தைத் தாம் நாடுவோம் என்று இலங்கை தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பு தெரிவித்துள்ளது.

நிலமை இப்படியிருக்க, மாட்டைப் புரிந்து கொள்ள முற்படுவதன் மூலமாக ஒரு நாட்டின் அரசியலையோ, அந்த நாட்டை ஆள்கின்ற அரசையோ புரிந்துகொள்ள முற்படுவது என்பது வேடிக்கையான ஓர் அரசியல் ஆய்வுதான். இலக்கியம், சினிமா தொடங்கி அரசியல்வரை இந்தியாவிட மிருந்து இலங்கை நகல் எடுத்து வருவதால் இதுவும் அப்படிப்பட்டதாகத்தான் இருக்கிறது.

இந்தியாவில் சில காலங்களுக்கு முன்பாக மாட்டிறைச்சி உண்பதற்கு இந்துத்துவா ஆதரவாளர்கள் தடை விதித்தனர். உள்நாட்டில் மாட்டிறைச்சியை உண்டவர்கள் என்ற காரணத்தால் சிலர் அடித்தும் கொல்லப்பட்டிருந்தனர். இத்தனைக்கும் பிரேசிலுடன் போட்டி போட்டு மாட்டிறைச்சியை ஏற்றுமதி செய்து வரும் முன்னனி நாடு இந்தியா. இலங்கை அப்படியில்லாத பட்சத்திலும் ஏனிந்தச் சட்ட யோசனை?

இந்தியாவில் பாரம்பரியமாக மாடு வளர்ப்புத் தொழில் பிரதானமாக மூன்று துறைகளையே பெரிதும் நம்பியிருந்தது. இதில் பால், தோலுக்கு அடுத்த நிலையில் வருமானம் சார்ந்து சொற்ப இடத்திலேயே மாட்டிறைச்சி இருந்து வந்தது. அதாவது, ஒரு பாரம்பரிய இந்திய விவசாயி ஆடு வளர்ப்புபோல இறைச்சித் தொழிலை நம்பி மாடு வளர்ப்பதில்லை. ஆனால், இந்த நிலைமை பிற்பாடு வெகுவாக மாறியது.

குறிப்பாக, உலகமயமாக்கலுக்குப் பிந்தைய இன்றைய காலகட்டத்தில் இறைச்சித் தொழிலானது மாடு வளர்ப்பின் பிரித்துப் பார்க்க முடியாத ஓர் அங்கமாகிவருகிறது. இந்திய மாட்டிறைச்சி ஏற்றுமதி சந்தையின் மதிப்பு மட்டும் 2018ஆம் ஆண்டில் சுமார் ரூ.90,000 கோடிக்கு மேல்.

2016ஆம் ஆண்டில் மாட்டிறைச்சி ஏற்றுமதியில் உலகின் முதலிடம் நோக்கி நகர்ந்த இந்தியா, மாட்டிறைச்சி ஏற்றுமதிச் சந்தையில் இன்று கிட்டத்தட்ட உலகின் ஐந்தில் ஒரு பங்கு தேவையைப் பூர்த்தி செய்கிறது. தவிர உள்நாட்டிலும் இறைச்சித் தேவையைக் கணிசமான அளவில் பூர்த்திசெய்கின்றது. இந்த நிலையில்தான் மோடி அரசின் ஆரம்ப ஆட்சியின்போது மாட்டிறைச்சிக்கு உள்நாட்டில் தடை வந்தது. இதன் பின்னுள்ள அரசியலாக நிறையக் காரணங்கள் பேசப்பட்டன. மாட்டிறைச்சித் தொழிலில் கணிசமான எண்ணிக்கையில் ஈடுபட்டிருக்கும் முஸ்லிம்களின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதில் தொடங்கி, சிறுகுறு விவசாயிகள் ஆதிக்கத்தில் இருக்கும் இந்திய மாடு வளர்ப்புத் தொழிலைப் பெருநிறுவனங்களின் களமாக்குவது வரை இருக்கலாம் என்று ஆரூடம் கூறப்பட்டது.

அதைப்போலத் தான் இங்கு மகிந்த ராஜபக்சவின் மாட்டிறைச்சித் தடை முன்மொழிவுக்குப் பின்னாலும் முஸ்லிம்கள் குறிவைக்



கப்பட்டுள்ளார்கள். தமிழர்களில் அநேகர் இந்துக்களாக இருப்பதால் மகிந்த ராஜபக்சாவின் கருத்துக்கு அவர்கள் மறுப்புத் தெரிவிக்கப்போவதில்லை என்பது தெரிகிறது. மகிந்தவின் இந்த முன்மொழிவை இந்துக்கள் அனைவரும் வரவேற்பதாக இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் கூறியிருப்பது இதில் ஒரு படி மேலானது. ■

**மகிந்த ராஜபக்சவின் மாட்டிறைச்சித் தடை முன்மொழிவுக்குப் பின்னாலும் முஸ்லிம்கள் குறிவைக்கப்பட்டுள்ளார்கள். தமிழர்களில் அநேகர் இந்துக்களாக இருப்பதால் மகிந்த ராஜபக்சாவின் கருத்துக்கு அவர்கள் மறுப்புத் தெரிவிக்கப்போவதில்லை என்பது தெரிகிறது.**


**கிருபா லேணர்ஸ்**

கிருபா லேணர்ஸ் KIRUBAA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை

கல்விச் சேவையுடன் ஒன்றிய நிறுவனம்

தொலைபேசி இல.
021 222 4353
021 492 3200
071 454 6960

யாழ்ப்பாணம்
சுன்னாகம் 021 224 2022
பருத்தித்துறை 021 492 3201
கச்சேரி 021 222 6699
ஆவரங்கால் 021 222 6688
தெல்லிப்பளை 021 224 3737
சாவகச்சேரி 021 227 0700
நெல்லியடி 021 300 6550
கிளிநொச்சி 021 228 5505
விசுவமடு 021 320 1515
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
வவுனியா 024 222 7777
மன்னார் 023 225 1656

- ★ குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- ★ மும்மொழிகளிலும் வாகனப் பயிற்சி.
- ★ இரவு நேர வாகனப் பயிற்சி.
- ★ எழுத்துப் பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- ★ தவணை முறைக் கட்டணங்கள்.
- ★ அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- ★ சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.

தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி

வட மாகாணத்தின் முதல்தர சாரதி பயிற்சிப் பாடசாலை

கதிரேசன் காத்தவராயன்

# றோட்டுச் சங்கடங்கள் தேவையோ?

"உதிலை கடைக்கொருக்காப் போட்டு வாறியளோ?" எண்டுகொண்டு காசை நீட்டினபடி வந்தாள் என்ர மேள். "இப்ப தானே போட்டு வந்தனான். திரும்பவும் போறதெண்டால்?" எண்டு எரிச்சலோடை நான் புறுபுறுக்க "அப்போத மறந்து போனன்.... உதிலைதானே கடை. அதுக் கேன் புறுபுறுக்கிறியள்" எண்டு மகள் சத்தம்போடத் தொடங்கின உடனையே நான் வெளிக்கிடவேண்டியதாப் போச்சுது.

இப்ப றோட்டுகளிலை போற வாறது என்ன சுவமான வேலையே? உதுகளுக் கெங்கை விளங்கப்போகுது? எண்டு வலு கவனமாய் நானே எனக்கு மட்டும் கேட் கிறளவு சத்தத்திலை சொல்லிக் கொண் டன். கிடங்கு பள்ளமாக் கிடக்கேக்குள்ள அமாவாசை இருட்டுக்குள்ளை லைற்றும் இல்லாமல் பயமும் இல்லாமல் போய்த் திரிஞ்சு காலத்தை நினைச்சபடி போனன். அதுகும் கரையாலை போறது மலை நாட் டிலை போற மாதிரியல்லே கிடக்குது? றோட்டு விளிம்புக்குக் கீழை அரிபட்டு பெரிய பள்ளமாயெல்லெ கிடக்குது?

றோட்டுப் போடக்கு முன்னம் கூட்ட மொண்டப் போட்டு, றோட்டப் பாவிக்கிற ஆக்களெண்டு எங்களைக் கூட்டிவைச்சு படமெடுத்துப்போட்டுக் கதைச்சவங்கள். அதிலை றோட்டு ஒரு அடி உயரமாகு மெண்டவை. வெள்ளம் வடியிறதுக்குக் கான் வேணுமோ? வெறும் சோல்டர் காணுமோ? எண்டதுக்கு எங்கடை பொடிய னொருதன் கான் கட்டினா குப்பை கூழம் அடைபட்டு நாறும், பிரதேசக்காறர் அள்ளவும் மாட்டாங்கள் கிடந்து அடைச் சுப் பெரிய சீரழிவாப் போகும். சீமெந் தாலை சோல்டர் போட்டால்தான் நல்லது எண்டதுக்கு எல்லாரும் தலையாட்டிச் சம்மதிச்சனாங்கள். பிறகுதான் எங்கடை பொடியிட்டை சோல்டர் எண்டால் என்டா என்ன எண்டு கேட்டுத் தெரிஞ்சு கொண்டனாங்கள்.



"கதிரேசண்ணை! என்ன கடும் யோசினை யோடை?" எண்ட குரலைக் கேட்டனான், திரும்பிப் பாக்கிற பயத்தாலை டக்கெண்டு இறங்கிவிட்டன். அட எங்கட சம்பர்...! நாட்டு நடப்புத் தெரிஞ்சவர் தான் எண்டாலும் அரைக் கரைவாசி புழுகுதான். "இல்லையடாண்ணை இந்த றோட்டிலை யோசிக்காமல் போற துக்கு நானென்ன வெளிநாட்டுக் காசிலை மோட்டச்சயிக்கிளோடுற பொடியனெண்டு நினைச்சனீங்களே? சர்க்கஸ் காரன் கயித்திலை சைக் கிளோடுகிற மாதிரியல்லே ஓடவேண்டிக் கிடக்குது" எண் டன். "ஓஓ..!ஓம்! கதிரேசண்ணை... உலாஞ்சுப்பட்டு அங்காலை விழுந்தாப் பின்னாலை வாறவன் இடிப்பான்.. இஞ் சாலை விழுந்தால் பாதாளமல்லே?" எண்டு சம்பர் ஆமோதிச்சார்.

"கதிரேசண்ணை இதுக்குத்தான் அபி விருத்தி வேணுமெண்டு நிக்கிறியள்... இதுதான் அந்த அபிவிருத்தி... றோட்டுக் கரையிலை மரஞ்செடி ஒண்டுமில்லை. சீய்... யோசினையில்லாத சீவனு களாய்ப்போனம். றோட்டு வேணுமெண்டு ஒரு பக்கத்திலை றோட்டே வேண்டா மெண்டு மற்றப்பக்கத்திலை எல்லாத்துக் கும் போராட்டமாயல்லே கிடக்குது?"

சம்பர் சொல்லிவிட்டு நிப்பாட்டிப்போட்டு என்னை ஒரு பார்வை பாத்தார். அது என்ரை பதில் கதைக்கான எதிர்பார்ப்பு.

"ஓஓ... சம்பரண்ணை... இப்ப புதிசா வாற செம்மண் பேப்பர்க்காறர் வலு தெளிவாயல்லே போட்டிருந்தவங்கள்! பகலிலை கல்லைக் கொண்டுவந்து கொட்டி றோட்டாலை இரவிலை போற நாலைஞ்சு பேரை விழுத்தி முறிச்சுப்போட்டு இர விரவா அந்தக் கல்லை ஏத்திப்போட்டு உடைச்ச சீமெந்துக் கட்டியையும் மண்ணை யுங்கொட்டி வேலையை முடிக்கிறதைப் பற்றியும் எழுதினாத்தான்சரி. இஞ்சார் சம்பரண்ணை இந்த றோட்டுக் கிடக்கிற கிடையைப் பாருங்கோவன். கரை விழிம் புக்குச் சோல்டர் போடுறதெண்டது தான் பேச்சு... ஆனால் அது நடக்கவேயில்லை. உப்பிடித்தான் உவங்கடை வேலையள் கண்டியளோ?"


"இஞ்சார் கதிரேசண்ணை.... அவங்கள் பேப்பரிலை போட்டது ஒண்டுதான். ஆனால் முழு இடத்திலையும் இதுதான் பிரச்சினை... என்னெண்டால் நிலத்தின்ரை அமைப்பையோ பாட்டத்தையோ, அந்த றோட்டப் பாவிக்கிற ஆக்களின்ரை தேவையையோ பாக்கிறேல்லை. கொன் றாக்கிலை எங்கயெங்கை வெட்டலாம் எவ்வளவு தேறும் ஆராரைத் திருப்திப் படுத்தலாம். எண்டதுகளை மட்டுந்தானே பாக்கிறாங்கள்"எண்டார் சம்பர்.

"உண்மைதானே பாருங்கோ... தேவை யென்ன? அதாலை வாற பலனென்ன? சிக்கலென்ன? எண்டு ஒண்டையும் யோசிக்க ஆக்களில்லை. அதுதான் பிரச் சினை. வீட்டிலை தலைக்குச் சம்போவைப் பாத்துக்கொண்டிருக்குங்கள்... அப்ப வரட்டே?"

> அவங்கள் பேப்பரிலை போட்டது ஒண்டு தான் ஆனால் முழு இடத் திலையும் இதுதான் பிரச்சினை... என னெண்டால் நிலத்தின்ரை அமைப்பையோ பாட்டத்தையோ, அந்த றோட்டப் பாவிக்கிற ஆக்களின்ரை தேவையையோ பாக்கி றேல்லை. கோன்றாக்கிலை எங்கயெங்கை வெட்டலாம் எவ்வளவு தேறும் ஆராரைத் திருப்திப்படுத்தலாம். எண்டதுகளை மட்டுந் தானே பாக்கிறாங்கள்.

## மீண்டும் டைடானிக்

கடலைப் போலவே டைட்டானிக் கப்பலும் ஆச்சரியம்தான். மூழ்கி நூற்றாண்டைக் கடந்தாலும் டைட்டானிக்கைச் சுற்றி ஆராய்ச்சிகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியின் மூலம் இன்னும் நெருக்கமாகவும் துல்லியமாகவும் டைட்டானிக் கப்ப லின் சிதிலங்களை ஆராயும் முயற்சியை வரலாற்று ஆய்வாளர், உயிரி யலாளர், ஆழ்கடல் ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட ஒரு குழு முன்னெடுக்கிறது. டைட்டானிக் கப்பலின் இப்போதைய 3டி மாதிரி படம் உருவாக்கப்பட்டு ஒரு குழு ஆய்வு செய்ய, சிதிலங்களின் மீது உள்ள நுண்ணியிரிகளை ஆய்வு செய்து சிதிலங்களின் எதிர்காலத்தைக் கணிக்கிறார்கள். கப்பல் இயங்கியபோது அது சுமந்த உயிர்களின் எண்ணிக்கையை விட இப்போது அது சுமந்துநிற்கும் உயிரினங்களின் எண்ணிக்கை அதிகம், அதேபோல டைட்டானிக்குடன் தொடர்புடைய உணர்வுபூர்வமான கதைகளும் அதிகம். அப்படி ஓர் உணர்வுபூர்வமான கதையைப் பற்றிய உண்மையையும் சொல்லும் இந்த பக் ரு டைடானிக் *(Back To Titanic)* ஆவணப் படம் ஹாட்ஸ்டாரில் திரையிடப்பட்டி ருக்கிறது.





# நடிகைகளுக்குப் போதை மருந்து?

இந்திய திரைத்துறை நாயகிகள் போதைப் பழக்கத்துக்கு ஆட்பட்டி ருக்கிறார்கள் என்பது நடிகர் சுஷாந்த் சிங் ராஜ்புத்தின் இறப்பு விசாரணை யின் ஒருகோணமாகத் தெரியவந்து கொண்டிருக்கிறது. உயிரை மாய்த்துக்கொண்ட சுஷாந் சிங் போதை மாத்திரைகளைப் பயன் படுத்தியது தெரியவந்ததை அடுத்து, அவருக்குப் போதைப் பொருள் எவ்வாறு கிடைத்தது என்பது குறித்து விசாரணை முன்னெடுத்த நிலையிலேயே பிரபல கதாநாயகி கள் பலர் இதில் சிக்கி வருகிறார் கள்.

சுஷாந்த் சிங் இறப்புத் தொடர் பான வழக்கு ஒருபுறமும், அவருக்கு இருந்த போதைப்பொருள் பயன் பாடு தொடர்பான சர்சை தகவல் மறுபுறமும் என இந்த விவகாரம் புதிய திருப்பத்தை எட்டி வருகிறது. இந்த விவகாரத்தில் பொலிவூட் பிரபலங்கள் சிலருக்கும் போதைப் பொருள் கடத்தல் கும்பல்களுக்கும் தொடர்பு இருப்பதாக நடிகை கங் கணா ரணாவத் கூறியதை அடுத்து, இது தொடர்பான வழக்கை இந் தியத் தேசிய போதைப்பொருள் தடுப்புத் துறை வேறு தனியாக விசாரித்து வருகிறது.

இந்த நிலையில், போதைப் பொருள் தடுப்புத் துறையினரால் கடந்த செவ்வாய்க்கிழமை பிற் பகல் நடிகை ரியா சக்கரவர்த்தி கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 22ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு மும்பை நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது. அத்தோடு கன்னடத் திரையுலகில் போதை மருந்து பயன்பாடு குறித்து விசாரித்து வரும் மத்திய குற்றப் பிரிவு காவல் துறையினர், நடிகை சஞ்ஜனா கல்ராணியைக் கைது செய்துள்ளனர். பெங்களூரு நகரத்தில் பார்ட்டி களில் போதை மருந்து விநியோகம் செய்த குற்றத்துக்காக, நடிகை ராகினி த்விவேதியும் கைது செய் யப்பட்டுள்ளார். ஏற்கனவே இந்த வழக்கில் கைதாகியி ருக்கும் ராகுல் என்பவர் சஞ்ஜனாவின் நண்பர். ராகுலின் கைதிலிருந்தே சஞ்ஜனா கண்காணிக்கப்பட்டு வந்தார் எனத் தெரிகிறது. இப்படியாகக் கைதுகளும் விசாரணை களும் அங்கு தொடர்ந்தவண்ணமுள்ளன.


ரியா சக்கரவர்த்தி


சுஷாந்

# எங்கே போகிறோம்? 9

கோபம் ஓர் ஆரோக்கியமான உணர்வு தான். தேவை ஏற்படும்போது அது வெளிப்பட்டே ஆகவேண்டும். ஆனாலும் உணர்ச்சி எல்லை மீறுவதுதான் ஆபத்தா னது. எல்லை மீறும்போது சரியான தீர்மானம் எடுக் கும் திறன் பாதிக்கப்படும். சொல்வது மாறி விளங்கும். நிதானம் தவறும். உறவுகளை சீர்குலைக்க முனையும். கேடு விளைவிக்கும் எண்ணம் பிறக்கும்.

மது, போதை ஆதிக்கத்தில் கோபம் மேலும் சிக்க லானது. தனக்கோ அடுத்தவருக்கோ கேடு விளை விக்கத் தயங்காது. எனவே சூழ்நிலை அறிந்து ஏனை யோர் விலகிக் கொள்வதே உசிதமானது.

சிலருடைய சுபாவம் எப்பொழுதும் எதிலும் குறை கூறிக்கொண்டே இருப்பதுவும், எரிச்சல் ஊட்டுவதும் ஆகவே இருக்கும். அடுத்தவர்களுடைய கெட்ட ஓமோன்களைத் தூண்டுவதே அவர்களின் பாணி. இவர்களோடு விவாதிக்கப் போனால் எமக்குத்தான் தலைவலி மாத்திரை செலவாகும். அப்படிப்பட்ட வர்களை தவிர்ப்பதும், குரலைத் தாழ்த்தி இதமாகப் பேசுவதும் அவரவர் உடல் உள ஆரோக்கியத்திற்கு உகந்தது.



முகநூலில் ஒருவரின் பதிவும் போக்கும் தொடர்ந்து உங்களை எரிச்சல் ஊட்டுவதாக இருந்தால் பொது வெளியில் அவரோடு மோதி அமைதியின்மையை விலைக்கு வாங்காமல் உங்கள் நேரத்தையும் வீண டிக்காமல் மெல்ல அந்த நட்பில் இருந்து விலகி விடுங் கள். உங்களின் போக்கிற்கு ஒத்து வரத்தக்கவர்களை மட்டுமே நண்பர்களாகப் பேணுங்கள்.

சூடு, குளிர், மழை என்று புறணி பாடுபவர்களை ஆமாம் சாமி போட்டு சமாளித்து விடலாம். சிலர் தேவையற்ற விடயங்களுக்குள் மூக்கை நுழைப்பார் கள். உங்கள் சம்பளம் எவ்வளவு? பிள்ளைகள் எத்தனை பேர்? திருமணம் ஆச்சா? இப்படி பலவும் கேட்டு எரிச்சல் ஊட்டுவது பண்பு ஆகாது.

அவசியமற்ற காரணமின்றி அடுத்தவர் தொலை பேசிக்கு அழைப்பு எடுப்பதுவும், அரட்டை அடிப் பதுவும் (chat) பண்பு ஆகாது. ஒருவர் online இல் இருப்பதாக பச்சைப் புள்ளி காட்டினால் அவருடன் பேச எமக்கு உரிமை இருக்கிறது என்று அர்த்தமாகாது.

ஒரு தொலைபேசி அழைப்பு வருகிறது. முதல் கேள்வியே யார் நீங்கள் என்கிறார் அழைப்பு எடுத்த வர். அப்படி என்றால் ஆளையே தெரியாமல் எதற்கு அழைப்பு? எல்லாம் மலிந்து பண்பு கெட்டுவிட்டது.

1978 ஊருக்கு ஒரு தொலைபேசி தபாலகத்தில். அலுவலகங்களில் ஒவ்வொரு தொலைபேசி. ஒய்ந்து கிடக்கும். எப்போதாவது கிணுகிணுக்கும். பெரிய பய பக்தியுடன் அணுகி ஒரு நிமிட உரையாடல். அலு வல் இல்லாமல் அழைப்பு எடுப்பவர் எவரும் கிடை யாது. இன்று அதற்கு ஒய்வே கிடையாது.

பலருக்கு நேரம் இன்று தொலை பேசியோடு கழி கிறது. அது உருப்படியாக போகிறதா இல்லை வீண் பொழுதா என்பது அவரவருக்குத்தான் வெளிச்சம்.

தொலைபேசி சத்தம் இல்லாமல் எழுத்துருவில் பேசவும், கேட்கும் கருவிகளை பாவிக்கவும் வழி வகுக்கும் நிலைமை சாதகமானது. மற்றவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் அவரவர் கருமங்கள் ஆற்றி விட இது வாய்ப்பு ஆகின்றது. ஒரு கணினியில் ஆற்றுகின்ற வேலைகளில் பெரும்பகுதியை ஒரு கைபேசி கையாளவல்ல காலம் இது. இதனை முழுமை யாக ஆக்கத்திற்கு பயன்படுத்திக் கொண்டால் சரி.

தேடலுக்கும் வாசிப்பதற்கும் நிறைய விட யங்கள் இணையத்தில் கிடைக்கிறன. அவற்றை சரியான முறையில் பயன்காண்ப தும் சரியான பாதையில் பயணிப்பதும் ஆக்கத் திற்கான முயற்சியே.


எழுத்தாளர்
மு.சிவநேசன்
எழுதும் தொடர்

இன்று வாசிப்பு பழக் கம் அருகி வருகிறது. வாசிப்பு மனிதனை எவ்வளவு தூரம் வளர்த்துக்கொள்கிறது. உருப்படியான விட யங்களைத் தேடி வாசிப்பது அவசியமா னது. சும்மா நேரம் போவதற்காக எதையா வது வாசிக்காமல் அறிவியல் மதிநுட்ப மேம்பாட்டு கோணத்தில் வாசிப்பு அமைந் தாலே பயன் கிட்டும்.

நூலகங்களின் பக்கம் தலைவைத்து படுக்காதவர்கள் பலர் இருக்கிறார்கள். பலரது வீட்டில் எந்த ஒரு புத்த கமும் காணக் கிடையாது. கதைப் புத்தகங்களை பைத்தியமாக வாசித்து பரீட்சைகளை கோட்டை விட்டவர்கள் இருக்கிறார்கள். வாசிப்பினால் மேதை யானவர்கள் பலர். இன்றைய போக்கு கவலை அளிக் கிறது. புத்தகப் பூச்சியாக பரீட்சை இலக்கினை நோக்கி மட்டுமே வாசிப்பு இருக்கிறது.

வாசிப்பு மனிதனை முழுமையாக்கும். மூளைச் செயற்பாடு துரிதமாகும். சொல்வளம் மொழிவளம் எழுத்தாற்றல் அதிகரிக்கும். ஏனையவர்களை புரிந்து கொள்ள, அவர்களின் பிரச்சனைகளை உணர்ந்து கொள்ள, அவர்களோடு மனம் விட்டு பழக, வழி முறைகளை ஏற்படுத்தும்.

சில புத்தகங்களை கையில் எடுத்தாலோ, சிலருக்கு புத்தகங்களை கையில் எடுத்தாலோ தூக்கமே வரு கிறது என்றால் அதுவும் நன்மைதானே.

தூக்கம் வராமல் புரண்டு கொண்டு வீணாக அவஸ் தைப் படுபவர்கள் நல்ல தூக்கம் வரும்வரை எதை யாவது வாசிக்கலாம். (வளரும்)

# ஆறாவது குண்டு

கலியுக பித்தன்

நெடுங்கதை
அத்தியாயம் 08

“ராகுல் உங்க ரஸ்விகா உயிரோடுதான் இருக்கிறா” கவிந்த் சொன்னதும், ராகுலின் கண்களில் ஆனந்தம் பொங்கி வழிந்தது.

“ஆனா, இந்த மேடரை செய்ததும் உங்க ரஸ்விகா தான்.” இந்த தடவை ராகுலின் கண்களில் ஏமாற்றம் குடியேறிக் கொண்டது. அடுத்த விநாடியே கவிந்த் சொன்னதை ராகுல் ஏற்றுகொள்ளாமல், கவிந்த் மீது சந்தேகப் பார் வையை வீசினான்.


“எப்டி? அந்த மேடரை ரஸ்விகாதான் செய்தாள் என்டு கன்பார்மா சொல்றீங்க?”

“நான் ஓபிஸுக்கு போக, அங்கே சந்துரு பிணமாக கிடந்தான். ஏதாவது தடயம் இருக்குமா எண்டு ஆபிஸ்ல தேடிட்டு இருக்கும்போது, ஓபிஸின் பின் கேற்றால ஒரு கறுத்த உருவம் ஆபிஸையே திரும்பி பார்த்து, பார்த்து ஓடிப் போனது.”

கவிந்த் கறுத்த உருவம் என்று சொன்னதும், சாப்பாடு முடித்து அறைக்கு திரும்பிய போது அங்கே நின்று கரைந்துபோன கறுத்த ஜக்கெட் போட்டிருந்த அந்த உருவம் ராகுலின் கண்முன்னே வந்து நின்றது. ஆனால் ராகுல் அந்த விடயத்தை பற்றி கவிந்திடம் வாய் திறக்கவே இல்லை.

“கறுத்த உருவத்தை மட்டும்தானே பார்த்தீங்க. அது ரஸ்விகாதான் எண்டு எப்டி....?” கவிந்த் சொல்வது பொய்யாக இருக்க வேண்டும் என்ற வேண்டுதலோடு கேட்டான்.

“அந்த உருவத்தைப் பின்தொடர ஏலாதெண்டு யோசிச்ச பிறகு அறையை முழுசா தேட தொடங்கினன். அப்போ தான் எனக்கு இது கிடைச்சிச்சு” என்று கூறிக்கொண்டே ராகுலின் கைகளில் ஒரு கைக்கடிகாரத்தைக் கொடுத்தார் கவிந்த்.



அது ரஸ்விகாவின் கைகடிகாரம் தான் என்பதை உணர்ந்து கொண்டாலும் அதைக் காட்டிக் கொள்ளாது, “இந்த மணிக்கூட்டுக்கும், ரஸ்விகாதான் கொலையாளியெண்டு சொல்றதுக்கும் என்ன சம்மந்தம்?” பதற்றத்தோடு கேட்டான் ராகுல்.

“என்ன ராகுல்? அது ரஸ்விகான்ட வோச் இல்லை எண்டா சொல்லுறீங்கள்?”

“ஓம், சேர்...”

ராகுல் சொன்னதை கேட்டு கவிந்த் சத்தமாக சிரித்து விட்டு “சீ! மிஸ்டர் ராகுல்! ஐ ஆம் எ பொலிஸ் ஓபீசர். என்னட்ட இந்த மாதிரி பொய் சொல்ற வேலை வேண்டாம்” கடுமையான தொனியில் இரைந்தான்.

“இது ரஸ்விகான்ட வோச் என்டதுக்கு உங்களிட்ட என்ன ஆதாரம் இருக்கு?”

“என்னட்டை எதுவும் இல்லை. ஆனா உங்க கிட்ட இருக்கு ராகுல்.”

“எங்கிட்ட அப்டி எந்த ஆதாரமும் இல்லை.”

“உங்க கிட்ட இருக்கிற ரஸ்விகாவோட போட்டோதான் ஆதாரம்”

“அதுல என்ன இருக்கு?” குழப்பத்தோட ராகுல் கேட்டான்.

“அந்த போட்டோவை காட்டுங்க” கவிந்த் கேட்க, தனது பயணப் பையில் இருந்த போட்டோவை எடுத்து கவிந்தின் கைகளில் கொடுத்தான்.

அந்த போட்டாவில் இருந்த கைக்கடிகாரத்தை சுட்டி காட்டி, தன்னிடம் இருந்த கைகடிகாரத்தையும் எடுத்து காட்டினான். இரண்டும் ஒரே மாதிரியான கைக்கடிகாரங்கள் என்பது தெளிவாகவே தெரிந்தது. ஆனாலும் ரஸ்விகாதான் குற்றவாளி என்பதை ராகுலால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

“ஒரே மாதிரியான வோச் நிறைய இருக்கலாம். இது வேற யாருடையதோ வோச் ஆகவும் இருக்கலாமே” குறுக்கு விசாரணை செய்தான் ராகுல்.

“ஆதாரமில்லாம பழி போட நான் சாதாரண ஆள் இல்லை மிஸ்டர் ராகுல். க்ரைம் ப்ரான்ஜ் ஓட ஹெட். சோ நான் காரணமில்லாம ரஸ்விகா மேல குற்றஞ்சாட்டல” என்று கூறிக்கொண்டே தனது கையில் இருந்த கைகடி காரத்தின் பட்டியில் ஆர். ஆர். என்று எழுதப்பட்டு இருப்பதை சுட்டிக் காட்டி, போட்டோவிலும் அதே எழுத்து இருப்பதைக் சுட்டிக் காட்டித் தன்னுடைய குற்றச்சாட்டை உறுதிப்படுத்தினான்.

ராகுலால் அதை நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. மேற்கொண்டு எதுவும் பேசாது கூரையை வெறித்து பார்த்து கொண்டே இருந்தான்.

“ரஸ்விகாவை நீங்க எங்க பார்த்தாலும், இல்லை உங்களுக்கு போன் ஏதாச்சும் பண்ணாலும் உடனே எனக்கு இன்பார்ம் பண்ணனும். காதலின்னு சொல்லி காப்பாத்த நினைச்சா நீங்களும் உள்ள போக வேண்டிவரும். “பி கெயர் புல்” கடும் குரலில் கண்டிப்போடு கட்டளையிட்டு விட்டு ராகுலின் பதிலுக்கு காத்திராமல் எழுந்து சென்று விட்டான்.

கவிந்த் சொன்ன விடயங்களையும், தன் கண்முன்னே கரைந்து போன கறுத்த உருவத்தையும், நடந்து மேடர்களையும் மீண்டும் மீண்டும் அவன் மனம் அசைபோட்டுக் கொண்டே இருந்தது. அவனால் எந்த முடிவையும் அந்தக் கணத்தில் எடுக்க முடியவில்லை. காதலியைக் காப்பாற்றவா இல்லை ஒரு கொலைக் குற்றவாளியை கூண்டில் ஏற்றவா என்று இரு தலைக் கொள்ளி எறும்பு போல் துடித்துக் கொண்டிருந்தான். நேரம் பத்தரையைத் தாண்டவே, அவனை அறியாமலே நித்திரையாகிப் போனான். மனமும் உடலும் சோர்வடைந்து இருந்ததால் நன்றாகவே தூங்கிப் போயிருந்தான்.


அறையின் அழைப்பு மணி பலமாக ஒலிக்கவே கண்களைக் கசக்கி கொண்டு, கைகளை நீட்டி அலுப்பை முறித்து கொண்டு, சலிப்போடு எழுந்து நேரத்தைப் பார்த்தான். நேரம் காலை எட்டு மணி ஆகியிருந்தது. இவ்வளவு நேரம் தூங்கி விட்டேனே என்று தன்னைத் தானே திட்டிக் கொண்டான். மீண்டும் அழைப்பு மணி இன்னும் சத்தமாக அலறவே எழுந்து கதவை திறந்து பார்த்தான். அங்கே ரஸ்விகா கறுத்த ஜக்கெட்டுடன் நின்று கொண்டிருந்தாள். (தொடரும்)




## மூளைக்கு வேலை

முடிகிறதா பாருங்கள்

1




சரியான விடையைக் கண்டு பிடியுங்கள்?

அகீல்

# கடல் விழுங்கும் தென்கிழக்கு கரை!

## அம்பாறையில் அவலம்

கிழக்கில் அம்பாறை மாவட்டம் இலங்கையின் நெல் உற்பத்தியில் முக்கிய இடம் பிடிக்கும் ஓர் இடம். அதேநேரம் கடல் மீன்பிடியிலும் புகழ்பெற்றது. விவசாயமும் மீன்பிடியும் இந்த மாவட்ட மக்களின் முக்கியமான வாழ்வாதாரங்களாக இருக்கின்றன. இன்று இங்கு விவசாயம் சுமுகமாக முன்னெடுக்கப்படுகின்றபோதும் கடற்றொழில் பெரும் சவால்களை எதிர்கொண்டுள்ளது. தொடர்ச்சியான சவால்களால் கடற்றொழில் நலிவடைந்து வருகின்றது.

ஒலுவில் துறைமுகம் அமைக்கப்பட்டதனாலும் அது முழுமையாக அமைத்து முடிக்கப்படாமையாலும் கடற்றொழிலையே நம்பி வாழ்ந்து வந்த குடும்பங்கள் பெரும் சவால்களையும் சிக்கல்களையும் எதிர்கொண்டுள்ளன. இதனால் அம்பாறையின் கடலோரங்களில் மீன்பிடி இப்போது வெகுவாகக் குறைந்து வருகின்றது. அதேசமயம் கடலரிப்பு வேறு இந்தக் கடலோர மீன்பிடிக் கிராமங்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது.





### வரலாறு

அம்பாறையின் கரையோரம் உள்ள ஒலுவில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் ஒரு கிராமம். கடல் வளத்தை நம்பி மீன்பிடியையே முழுமையான தொழிலாகக் கொண்டு வாழ்கிறார்கள் இந்தக் கிராம மக்கள். முஸ்லிம் காங்கிரஸ் தொடங்கப்பட்ட நாள் முதல் அந்தக் கட்சிக்கு முழு ஆதரவு வழங்கி வந்தவர்கள் இந்த மக்கள் இதனாலும் தனிப்பட்ட பிடிப்பினாலும் மு.கா. நிறுவுநர் எம்.எச்.எம். அஷ்ரப் இந்தக் கிராமத்தை மிகவும் நேசித்தார்.

இதன் காரணமாகவே அவரது எண்ணக் கருவில் ஒலுவில் துறைமுகமும் தென்கிழக்குப் பல்கலைக்கழகமும் உருவாக்கப்பட்டன. ஆனால் அஷ்ரப்பின் மறைவுக்குப் பின்னர் ஒலுவில் மாற்றாந்தாய் குழந்தையாகிப் போனது கொடுமை. ஒலுவிலைச் சுற்றிய அஷ்ரப்பின் எண்ணக்கருவை அவருக்குப் பின்னர் முன்னெடுத்துச் செல்வதற்கு ஒருவரும் இருக்கவில்லை.

அஷ்ரப்பின் பாசறையில் வளர்ந்தவர்கள், அவரது வாரிசுகள் என்று மார் தட்டிக்கொள்ளும் இன்றைய முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பலரும் அசண்டையீனமாக இருப்பதன் காரணமாக ஒலுவில் நலிந்து போய்க்கிடக்கிறது.



### துறைமுகம்

ஒலுவில் துறைமுகத்திற்கென 2017ஆம் ஆண்டு 300 ஏக்கர் காணியை அரசு சுவீகரித்தது. துறைமுகம் அமைப்பதற்காக கடல்நீரேந்துப் பகுதி பெரிய கற்கள் கொண்டு மூடப்பட்டது. இதன் விளைவால் ஏற்பட்ட கடலலை நகர்வுகள் துறைமுகத்தை அடுத்துள்ள கிராமங்களைக் கரைக்கத் தொடங்கின.

இதன் பெரும் விளைவாக இந்தக் கிராமங்கள் கடலரிப்புக்கு உள்ளாகின. இதுவரையில் இந்தக் கிராமங்களின் சுமார் 600 மீற்றர் கரையோரம் கடலரிப்பால் காணாமல்போய்விட்டது என்று சொல்லப்படுகின்றது. இதனை நிரூபிப்பதற்கான அறிவியல் ரீதியான ஆய்வுகள் எவையும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. பாராமுகம் காட்டப்படுகின்றது.

துறைமுகம் அமைக்கப்படும்போதே இந்த விளைவு குறித்து வல்லுநர்கள் எச்சரிக்கை செய்திருந்தனர். எனினும் அது புறந்தள்ளப்பட்டதன் காரணமாகவே ஒலுவில் துறைமுகத்தை அண்டியுள்ள கிராமங்கள் காணாமற்போய்வருகின்றன என்று கூறுவோரும் உளர். ஆனால், அது பற்றிய ஆழமான ஆதாரங்கள் இதுவரையில் வெளியாகவில்லை.

துறைமுகம் அமைக்கப்படுவதற்கு முன்னதாக கடலரிப்பின் இலக்காக ஒலுவில் கிராமமே இருந்தது. கிட்டத்தட்ட அந்தக் கிராமமே கடலில் மூழ்கிவிடக்கூடும் என்றிருந்த நிலையில், துறைமுகம் அமைக்கப்பட்டதன் பின்னர் அண்டிய கிராமங்களை அலைகள் இப்போது சூறையாடுகின்றன.

ஒலுவிலை அடுத்த நிந்தவூர் இப்போது கடலரிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கிராமத்தின் மாட்டுப்பள்ளம் பகுதி விவசாய நிலங்களும் அட்டப் பள்ளம் பகுதி தென்னந்தோப்புக்களும் கடலரிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன.

### இந்த வாரம்

கடலரிப்பு மேலும் மேலும் உக்கிரமடைந்து வரும் நிலையில், ஒலுவிலில் அமைந்துள்ள தென்கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தை அண்டிய கடலோரங்கள் இந்த வாரம் கடுமையான கடலரிப்பை எதிர்கொண்டன.

பல்கலைக்கழக வளாகத்திற்குரிய நிலப்பரப்பு ஏற்கனவே கடலுக்குள் அமிழ்ந்துவிட்டதாக மக்கள் கூறுகின்றார்கள். இந்த வாரக் கடலரிப்பால் வளாகத்தின் எல்லை மதிற் சுவர் மற்றும் தற்காலிக வேலி என்பனவும் சேதமுற்றுள்ளன என்று கூறப்படுகின்றது.

இந்தக் கடலரிப்பைத் தடுப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்கும்படி கோரும் பதாகைகளை பல்கலைக்கழக மாணவர்கள் தமது வளாகத்தில் தொங்கவிட்டுள்ளார்கள். ஒலுவில் மக்களும் இந்தக் கோரிக்கையை நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றார்கள் என்றபோதும் ஆட்சி அதிகாரத்திலுள்ளவர்களின் காதுகளை இது எட்டியதில்லை என்பதே சோகம்.





### பொத்துவில்

இதேவேளை, வெளிநாட்டு உள்நாட்டு சுற்றுலாவிகளின் சொர்க்கம் என வர்ணிக்கப்படும் பொத்துவில் (20ஆம் பக்கம் பார்க்க)



# நிஜம்

தெல்லிப்பளையூர்
சிதம்பரபாரதி

சில்லென்ற காற்றின் வருடலால் விழிப்பு வந்து எழுந்தாள் மலர் விழி. நேரம் காலை 6.30 இரவு நேர இணையத்தைப் பாவிக்கலாம் என்ற நோக்கத்தோடு கைப்பேசியை துளாவி எடுத்து முகப்புத்தகத்துக்குள் கண்ணை ஓடவிட்டாள். அப்போதுதான் அந்தப் பதிவு தென்பட்டது.

பேருந்தில் வயோதிபர்களிற்கும், கர்ப்பிணிகளிற்கும் இடம்கொடுக்க வில்லை. இதனால் அந்தப் பேருந்தில் பயணித்த இளைஞர் யுவதிகளையும் ஒட்டுமொத்த இளம் சமுதாயத்தையும் குறைகூறும் விதமாகப் போடப்பட்டிருந்த பதிவு அது. அந்தப் பதிவுக்கு நிறைய நண்பர்கள் பாராட்டுக்களைத் தங்கள் அபிப்பிராயங்களாகப் பதிவிட்டிருந்தனர். ஒரு கிழமைக்குள் அவள் பார்க்கும் நான்காவது ஒரே மாதிரியான பதிவு இது. அவளுள் சிரிப்பும் உருவானது.

யாரும் எதுவும் கதைக்கலாம் என்கிற பேச்சுச் சுதந்திரமும் சிந்தனை வெளியும் தாராளமாகக் கிடைக்கின்றது என்பதால் எல்லோரும் ஏதாவதொன்றை எழுதி விடுகின்றார்கள். ஆனால் அதன் பின் னால் உள்ள நிஜம் என்ன என்பதை அனேகமானோர் ஆராய முற்படுவ தில்லை. அன்று அந்தப் பேருந்தில் இருந்த பெண்களில் எத்தனை பேருக்கு எழுந்து நிற்கமுடியாத சூழ்நிலை இருந் திருக்கும். ஏன் ஆண்களில் கூட யாருக் கேனும் ஏதேனும் பிரச்சினை இருந்திருக் கலாமே என்று சிந்தித்தவளுக்கு முன் பொரு நாள் தான் எதிர்கொண்ட அந்தப் பஸ் பிரயாணம் நினைவிற்கு வந்தது.

௦௦௦௦௦

அதிகாலை நான்கு மணி இருக்கும். அவளது அம்மாவுக்குத் திடீரென நெஞ்சுவலி. வீட்டில் அக்காவும் இவ ளும் தான். என்ன செய்வதென்று தெரி யாமல் ஆட்டோ ஒன்றைப் பிடித்து வைத் தியசாலை சென்றபோது ஐந்து மணி இருக்கும். ஐந்து மணியில் இருந்து மாறி மாறிப் பரிசோதனைகளுக்காக ஓடி முடித்து, அவரை நோயாளர் பராமரிப்புப் பகுதிக்குக் கொண்டு சேர்க்க, மாலை ஆறு மணி ஆகிவிட்டிருந்தது. மாலை யில் அக்கா வைத்தியசாலைக்கு வந்து ஆள்மாறி - இவள் விடு செல்ல ஆயத்த மானபோது 6.30 இருக்கும். பேருந்து நிலையம் நோக்கி வேக வேகமாக நடந் தாள். காலையில் இருந்து ஓரிடத்தில்கூட அமர்ந்து இருக்கவே இல்லை. அது மட்டுமன்றி அன்றைய நாள் காலையில் தான் அவளுக்கு மாதவிடாயும் தென்பட் டது. அன்று முழுநேரமும் சாப்பாடும் இல்லை. எல்லாம் சேர்ந்து உடலுக்குச் சுமையைக் கொடுக்க அவளது கால்கள் தள்ளாடத் தொடங்கின. வீதியில் சென்ற சிலரது கிண்டல்கள் இவற்றுக்கிடையில் அவளைத் தாக்கின.

எல்லாவற்றையும் மீறி அவள் பேருந்து நிலையத்துக்கு வந்தபோது, பயணத் துக்கு ஆயத்தமாக நின்ற பேருந்து நிறைந்து வழிந்தது. அந்த நெரிசலில் நிற்கும் தென்பு அவளிற்கு இல்லை. நேரம் போனாலும் பரவாயில்லை என எண்ணிய படி அந்தப் பேருந்து புறப்பட்ட பின்னர் தரிப் பிடம் வந்த அடுத்த பேருந்தில் ஏறி ஓர் இருக்கையைப் பிடித்துக் கொண்டாள். அமர்ந்தாள். அன்று முழுவதுமான அவ ளது அலுப்புக்குச் சற்று ஒத்தடமளித்தது அந்த இருக்கை.

ஐந்து நிமிடங்கள் கூட ஆகவில்லை. அந்தப் பேருந்தும் சனத்தால் நிரம்பி வழிந்தது. இருக்கையோடு சாய்ந்தாள். அவளை அறியாமல் அவளது கண்கள் மூடிக்கொண்டன. இரண்டு நிறுத்தங்கள் தாண்டியிருக்கவேண்டும்... "இந்தப் பிள்ளையோட வாற அம்மாக்கொரு சீற்றைக் குடுங்க" என்ற நடத்துனரின் சத்தத்தில் முழித்தாள். இவள் இருந்த இருக்கைக்கு இரண்டு இருக்கைகள் முன்னால் ஒரு பெண் குழந்தையோடு நின்றிருந்தாள். அவள் கையில் இருந்த குழந்தை நடந்து திரிந்து ஓடியாடக் கூடி யளவு வளர்ந்த குழந்தைதான் ஆனால் அந்தப் பெண் அந்தக் குழந்தையைக் கையிலேயே வைத்திருந்தாள். முன்னா லிருந்த இரண்டு இருக்கைகளிலும் அந்தப் பெண்ணுக்கு எவருமே இடம் குடுக்காததால், மலர்விழிக்கு என்ன செய்வ தென்று தெரியவில்லை. "குழந்தை யைத் தாங்கோவன் வைச்சிருக்கிறன்" என்றாள் "இல்லை இல்லை பிள்ளை யாரோடையும் சேராது. பரவாயில்லை நீங்க இருங்கோ" "இல்லை நீங்கள் குழந்தையை வைச்சுக் கொண்டு இருங்கோ" என்று சொல் லிக்கொண்டு எழுந்தாள் மலர்விழி. மீண்டும் கால்கள் சோரத் தொடங்கின. அடிவயிற் றைக் கிழித்தெடுத்தது அந்த வலி.

இப்போது புதிதாகத் தலையும் சுற்றத் தொடங்கியது.

இறுக்கமாகக் கம்பிகளைப் பற்றினாள். முதுகில் ஏதோ உறுத்துவது போல் உணர்ந்து திரும்பினாள். ஒரு நடுத்தர வயது ஆண் இவளை உரசிக் கொண்டு நிற்பதற்கு முயற்சி செய்துகொண்டி ருந்தான். உடல் வலியை - உள்ளுணரும் வலியை அவளால் தாங்க முடியவில்லை. இதுவேறு என மனம் நொந்து கொண் டாள். அவள் முன்னால் செல்லச் செல்ல அவனும் நெருங்கிவந்து கொண்டி ருந்தான். மூன்றாவது நிறுத்தத்தில் அவள் இடம் கொடுத்த அந்தப் பெண் குழந்தை யோடு இறங்க இன்னுமோர் பெண்மணி அதில் அமர்ந்தாள். மலர்விழிக்குத் தூக்கி வாரிப் போட்டது. கண்கள் பனித்தன.



அவள் வீடுபோய்ச் சேர இன்னும் அரைமணி நேரமாவது ஆகும். அது வரை அவளால் அந்த ஆண்மகனின் உரசலுக்கு ஈடுகொடுக்கவும் முடியாது.

௦௦௦

கைப்பேசியில் புதிய அபிப்பிராயம் வந்த சத்தம் அவளை சுயத்துக்குக் கொண்டு வந்தது. இது என்ன என்று பார்த்தாள். "மிகச் சரியானதும் உண்மை யானதுமான கருத்து இது. வெளிப் படையாகச் சொல்லிய உங்கள் தைரி யம் பாராட்டத்தக்கது" என வந்திருந் தது. யாரைத் தான் குறை சொல்ல முடி யும். கைப்பேசியை வைத்துவிட்டு வேலையில் முழ்கிப்போனாள் மலர் விழி.




சந்தோஷ் பி.ஜெயக்குமாரின் இயக்கத்தில் கவுதம் கார்த்திக், யாஷிகா ஆனந்த் நடிப்பில் 2018ஆம் ஆண்டில் வெளியாகிய படம் 'இருட்டு அறையில் முரட்டுக் குத்து'. ஆபாசம், இரட்டை அர்த்த வசனங்கள் நிறைந்த இந்தப் படம், இளைஞர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இந்த நிலையில், சந்தோஷ் பி.ஜெயக்குமார் மீண்டும் ஓர் இளையோர் நகைச்சுவைத் திகில் படத்தை இயக்கி வருகிறார் என்று கதைகள் எழ ஆரம்பித்து விட்டன. இந்தப் புதிய படம் இருட்டு அறையில் முரட் டுக் குத்தின் 2ஆம் பாகமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. ஆனால், இது அந்தப் படத்தின் தொடர்ச்சியாக இருக்காது என்றும் இது வேறு கதை எனவும் இயக்கு நர் தெரிவித்துவிட்டதால் இந்தப் புதிய படம் குறித்து எதிர்பார்ப்பாளர்கள் மத்தியில் பேச்சுகள் எழுந்து விட்டன. இந்த நிலையில், தனது இந்தப் புதிய படத்திற்கு 'இரண்டாம் குத்து' என்று பெயர் வைத்திருக்கிறார் இயக்குநர் ஜெயக்குமார் என் றும் தகவல் வெளியாகியுள்ளது. இப்படத்தின் மூலம் இயக்குனர் சந்தோஷ் பி. ஜெயக்குமார் ஹீரோவாக அறிமுகமாகவுள்ளாராம். இந்த இரண்டாம் குத்து எப்படி யிருக்குமோ...?

# எந்நாளும் நலம் வாழ

மருத்துவர்: **கந்தையா சோதிதாசன்**

## கீழ்க் காய் நெல்லி


*காயமது காக்கும் கற்ப மூலிகையாம்*
*கீழ் காய் நெல்லிக் குணம் சொல்வேன்*
*போயகலும் - மஞ்சள் காமாலை கண்நோய்*
*கடுமிரத்தப் போக்கு, காய்ச்சல் என நீளும்*
*நோயகலும் இன் சொல்லாய் இன்னும் கேள்*
*ஆறாத விரணம் சிறுநீரெரிச்சல் நீரிழிவும் நீங்குமடி*
*தேயாது தேகம் இரும்பாகும் சொறி சிரங்கோடும்*
*மேனி பொன்னாகும் அருந்த நன் மருந்தென்றறி*

### விளக்க உரை

தேகத்தை இளமை குன்றாது காக்கின்ற காய கல்ப மூலிகைகளில் ஒன்றாகச் சித்த மருத்துவ நூல்கள் குறிப்பிடுகின்ற கீழ்க்காய் நெல்லி என்ற மூலிகையின் மருத்துவப் பயன்களைச் சொல்வேன் கேட்பாயாக!

இது மஞ்சள் காமாலை நோய்க்குச் சிறந்த மருந்தாகச் சொல்லப்படுகிறது. இதன் இலைச் சாறிலே பசுவின் பால் சேர்த்து காலையில் வெறும் வயிற்றில் குடித்துவர மஞ்சள் காமாலை நீங்கும் (பத்தியம் மோரும் சோறும் உண்ண வேண்டும்). கண்ணில் நீர் வடிதல், கண்ணெரிச்சல் போன்ற நோய்களுக்கு இதன் சாறு நல்லெண்ணெய்யில் சேர்த்துத் தயாரிக்கப்படும் தைலமாகப் பாவிக்கப்படுகிறது. பெண்களுக்கேற்படும் கடும் குருதிப்போக்கையும் கீழ்க்காய் நெல்லி கட்டுப்படுத்துகிறது. காச்சல் குடிநீரில் இது சேர்க்கப்படும்போது காய்ச்சலைக் குணமாக்குகிறது (பித்தசுரம்) இனிய சொற்களைப் பேசுபவளே! இன்னும் கேட்பாயாக - ஆறாத புண்கள் இதனால் குணமாகும் (மஞ்சள், வேப்பிலை, குப்பைமேனி, கீழ்க்காய் நெல்லி, சமூலம் இவைகளை அரைத்துப் பூசலாம்) மேலும் சிறுநீர் எரிச்சல், நீரிழிவு நோய் என்பனவும் இதனால் நீங்குகிறது அதுமட்டுமன்றிக் குருதிச் சோகையை நீக்கித் தேகத்தைப் பலமாக்குகிறது. சரும நோய்களை நீக்கி உடல் வனப்பையும் ஏற்படுத்துகிறது. எனவே கீழ்க்காய் நெல்லி ஒரு சிறந்த நன்மை தரும் மருந்தென்பதை அறிவாயாக!






## ஜனவரிக்குள் முடிக்க கமல் திட்டம்?

ஷங்கர் இயக்கத்தில் கமல் நடிப்பில் உருவாகி வரும் படம் 'இந்தியன் 2'. லைக்கா நிறுவனம் இதைத் தயாரித்து வருகிறது. இந்தப் படத்தில் காஜல் அகர்வால், ரகுல் ப்ரீத் சிங், சித்தார்த், நெடுமுடி வேணு, பாபி சிம்ஹா, விவேக் உள்ளிட்ட பலர் நடித்து வருகிறார்கள். இந்தப் படத்தின் படப்பிடிப்பு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்றது. இதனிடையே படப்பிடிப்புத் தளத்தில் விபத்து ஏற்பட்டதால் படப்பிடிப்பு நிறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து வந்த கொரோனா அச்சுறுத்தலால் 'இந்தியன் 2' படப்பிடிப்பு இன்னும் தொடங்கப்படாமல் உள்ளது. ஆனால், இதுவரை படமாக்கப்பட்ட காட்சிகளுக்கான இறுதிக்கட்டப் பணிகளைப் படக்குழு தொடங்கிவிட்டது. இதனிடையே, 'பிக் பாஸ் 4' படப்பிடிப்பும் தொடங்கிவிட்டதால் அதன் பணிகளையும் கவனித்து வருகிறார் கமல். 'இந்தியன் 2' படத்திலும் இன்னும் பல காட்சிகள் படமாக்க வேண்டியிருப்பதால், ஜனவரிக்குள் முடித்துவிடும்படி கமல் படக்குழுவினரைக் கேட்டுக் கொண்டுள்ளார். தனது காட்சிகளை முழுமையாக ஜனவரிக்குள் திட்டமிட்டு முடித்துவிடும்படியும், அதற்குப் பிறகு தேர்தல் பணிகளில் தான் கவனம் செலுத்த உள்ளார் எனவும் கமல் தெரிவித்துள்ளாராம்.

# கொடூர நாய்கள்!



யானைகளின் தேசம் ஆபிரிக்கா. ஆசிய யானைகளோடு ஒப்பிடுகையில் நிறையும் வலிமையும் கூடிய ஆபிரிக்கா யானைகள் உருவத்திலும் பெரியவை. இந்த யானைகள், மற்றும் சிங்கங்கள், புலிகள் போன்ற விலங்குகளிடமிருந்து தன்னை வேறுபடுத்துகிறது ஆபிரிக்கக் காட்டு நாய். வேகம், வலிமை ஆகியவற்றுடன் நரியைப் போன்ற திருட்டுத்தனத்தையுடையது இது என்று பன்னாட்டு ஊடகமான ரொய்டர்ஸ் தனது கட்டுரை ஒன்றில் இந்தக் காட்டு நாயின் குணங்குறிகள் குறித்துக் குறிப்பிடுகிறது. தனது இரையைத் தேடிச் சோர்வடையாது நீண்ட தூரம் பயணித்து இலக்கை அடையக்கூடிய இந்த நாய்கள் இரையைத் துரத்தும் தனித்துவமான வேட்டைப் பாணியைப் பயன்படுத்துகின்றன என்றும் விவரிக்கப்படுகிறது. இவற்றை ஆபத்தான ஆபிரிக்கக் காட்டு நாய்கள் என்றும் ரொய்டர்ஸ் சுட்டுகிறது. ஆபத்தான இந்த உயிரினத்தின் விரிவான புதிய உடற்கூறியல் ஆய்வில் இந்த விலங்குகளின் எலும்புகள், தசைகள் மற்றும் தசைநார்கள் ஆகியவற்றில் இயங்கும் சகிப்புத்தன்மைக்கான முக்கியமான பரிணாமத் தழுவல்கள் அடையாளம் கணப்பட்டுள்ளனவாம். சிக்கலான ஒருங்கிணைந்த உத்திகளைப் பயன்படுத்திப் பெரிய மிருகங்களையும் வேட்டையாடுகின்ற இவை பெரும்பாலும் தினமும் 30 மைல் (50 கிலோமீற்றர்) வரை சாதாரணமாகப் பயணிக்கின்றனவாம். அத்தோடு மணிக்கு 64 கிலோமீற்றர் வேகத்தில் ஓடி இரையைத் துரத்துகின்றனவாம். இருப்பினும், இந்தக் காட்டு நாய்கள் சில நேரங்களில் பெரிய, மிகவும் ஆக்ரோஷமான விலங்குகளிடம் தங்கள் இரைகளை இழக்கின்றன என்கிறார் பீர்ஜே இதழில் இது குறித்து வெளியிடப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைக்குத் தலைமை தாங்கிய ஸ்மித்.





■ பேர் அறிஞன்

# சித்தி வீதத்தை உயர்த்துதல் தவிர்க்கவியலாக் கேள்விகள்...

3

சிறு தொகுதியினரிடமிருந்து பெற்ற அனுபவத்தினூடாகத் தயாராகும் கல்விச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும் முறை மிகவும் நகைப்பிற்குரியதாகவே இருக்கிறது. செயலட்டைகள், அலகுப் பரீட்சைகள், மாதிரிப் பரீட்சைகள் என்று பாடசாலை நேரத்தில் பெரும் பகுதியைக் குறுகிய வட்டத்துள்ளேயே செலவிட்டு முடிக்கவே ஆசிரியர் களும் மாணவர்களும் நிர்ப்பந்திக்கப்படுகின்ற னர்.

வரட்டுத்தனமான பாடத்திட்டம், பொருத்தமற்ற பாடப்பரப்புகள், சூழலிற்குப் பொருந்தாத விடயங்கள் என்ற கசப்புகள் உண்மைகளாக இருந்தாலும் அதுதான் பரீட்சைக்கானது என்ற தவிர்க்கப்பட முடியாத நிலையில் அவற்றைத்தானும் கற்பிக்கும் -

> “ தொழில்சார் உலகம் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை உணரச்செய்து, அதனைச் சரிவரக் கையாளக்கூடிய நிபுணத்து வத்தை ஏற்படுத்து வதைக் கவனத்திற் கொள்வது மாணவர் அறிவுலகப் பிரவேசத்திற்கான திறவு கோலாக அமையும் என்பதைக் கவனிக்காதது ஏன்?


கற்கும் வாய்ப்புக்கள் பறிக்கப்படுகின்றன என்பதைக் கவனிப்பதில்லை. இதுபற்றிக் கவனம் கொள்ளப்படுவதில்லை. பொருத்தமற்றதாக இருந்தாலும் பொருத்தமான முறையிலாவது பிரயோகிக்கப்படுகிறதா? பொருத்தமற்ற ஒன்றைப் பொருத்தமற்ற முறையில் செய்து விளைவை எதிர்பார்ப்பது எவ்வாறு? அது புத்திசாலித்தனமானதா?

இந்த நடைமுறைகளுடன் விசேட செயலமர்வுகளும் சேர்ந்துகொள்கின்றன. பரீட்சைக் காலம் நெருங்கிய நிலையில் பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் கல்விப்புலம் சாராதவர்கள் முன்னெடுக்கும் விசேட செயலமர்வுகள் என்பது இக்கட்டுரையினது முற்கூறில் குறிப்பிட்ட மிகச் சிறு தொகுதியினருக்குப் பயன்மிக்கதாக அமையலாம். ஏனெனில் அத்தொகுதி தன்சார்ந்த தெளிவுடன் மீட்டலுக்கும் புதிய உத்திகளைப் பெற்றுக்கொள்வதற்கும் வழியேற்படலாம். ஆனால் பெரும்பான்மையான தொகுதி இவ்விசேட செயலமர்வுகளால் தடுமாற்றத்துக்கு உள்ளாகும் நிலைமையே அதிகமாக உள்ளது.

குறித்த சில மணிநேரத்தினுள் இத்தொகுதி மாணவர்கள் செயலமர்வுகளில் வழங்கும் விடயங்களைக் கிரகித்துப் பிரயோகிக்கும் திறனைப் பெற்றுவிடுவார்களா? விடுமுறைகளில் தொடர் செயலமர்வுகளை முன்னெடுப்பது சிலவேளைகளில் பயனுடையதாக அமையலாம். ஆனால் இதுபற்றிய எண்ணம் ஏன் உருவாகவில்லை? மேலும் கற்பித்தலுக்காகவே கல்விமுறையியல் உளவியல் போன்ற முறைப்படுத் தப்பட்ட ஆசிரிய தொகுதிக்குப் புறம்பாக மேற்கொள்ளப்படும் கற்பித்தல் என்பது தேவைப்பாடுடையதா? பொருத்தப்பாடுடையதா?

நிலைமைகள் இவ்வாறிருக்கையில் ஆசிரியர்கள் நிர்வாக ரீதியாக உளநெருக்கீட்டிற்கு உள்ளாகும் விதமாகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகப் பரவலான ஓர் அவதானிப்பும் அதனாலெழும் உரையாடல்களும் தொடர்கின்றன. இவ்வுரையாடல்கள் ஆசிரியர்களுக்குச் சார்பாகவும் எதிராகவும் உள்ளன. இவற்றை ஆய்வு ரீதியாகப் பார்க்கவேண்டிய தேவை நிறையவே உள்ளது. ஆனால் இதுவும் மறக்கப்பட்ட அல்லது புறந்தள்ளப்பட்ட ஒன்றாகவே இருக்கிறது. எனக் கொள்ள வேண்டிய நிலையிலேயே உள்ளது.

அதிபர் - ஆசிரியர் என்பதற்கப்பால் ஆசிரிய பயிற்சி வழங்குநர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் உதவி மற்றும் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் தொடர்பாகவும் இது அவசியமானதாகவே உள்ளது. இவ்விடயங்கள் தொடர்பிலான ஆய்வுகள் என்பது பாரட்டுதல் அல்லது குற்றம் சுமத்துதல் எனும் குறுகிய வட்டத்துக்கு அப்பால் குறித்த தொகுதியினரில் ஏற்படுத்த வேண்டிய, அவர்களது செயற்பாடுகளில் ஏற்படுத்தப்பட வேண்டிய ஆரோக்கியமான மாற்றங்களை நோக்கியதாக, மேம்பாடு கருதியதாக அமைவது அவசியமானது.




பாடத்திட்டம் பாடநூல் என்பதற்குமப்பாலே ஓர் அறிவுசார் - தொழில்சார் உலகம் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை உணரச்செய்து, அதனைச் சரிவரக் கையாளக்கூடிய நிபுணத்துவத்தை ஏற்படுத்துவதைக் கவனத்திற்கொள்வது மாணவர் அறிவுலகப் பிரவேசத்திற்கான திறவுகோலாக அமையும் என்பதைக் கவனிக்காதது ஏன்?

கல்விசார் செயற்பாட்டாளர்களும், கோட்பாடுகளை - கொள்கைகளை மனனம் செய்து வினாத்தாளில் கொட்டி உயர்புள்ளி பெறுவதை ஊக்கப்படுத்துவதைவிட செயற்பாட்டுரீதியாக தயார் செய்வதன் முக்கியத்துவமும் கவனத்தில் கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை.

(தொடரும்)

யாழ் முற்றம்
மீண்டும் விரைவில் யாழ் நகரல்..!
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் சந்தை



பனைசார் உற்பத்திப் பொருட்கள்
தும்பு உற்பத்திப் பொருட்கள்
இயற்கை விவசாய மரக்கறிகள்
இயற்கை விவசாய இடுபொருட்கள்
வீட்டுத்ததோட்ட மரக்கன்றுகள்
இயற்கை உரங்கள்
கைவினைப் பொருட்கள்
மட்பாண்டம்
பாதணிகள்
உலர் உணவுப் பொருட்கள்
கடல் உணவுப் பொருட்கள்
இரசாயணமற்ற ஆரோக்கிய பானங்கள்
ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகங்கள்
சித்திரங்கள்
பயிற்சி வகுப்புகள் (யோகா, பரதம், கராட்டி, சமையல்....)

உள்ளூர் உற்பத்தி – கலாசாரம் – பாரம்பரியம்

பவாகரன், சாவகச்சேரி.




3 கதை

பேய் அல்லது ஆவியைக் கண்டதாகக் குறிப்பிடுகின்ற பலர், அவலச் சாவடைந்தவர்கள் பேயாக, ஆவியாக அலைந்து திரிவது அதிகம் என்கின்றனர். சோதிடக்காரர்களின் கூற்றுப்படி, ஒருவர் இறப்பதற்குரிய காலம் தீர்மானமாவதற்கிடையில் அவர் இறக்க வேண்டி ஏற்பட்டால் அவர் அடுத்த பிறவி எடுப்பதற்கு அதிக காலம் எடுக்கும் நிலை இருக்கும். அதனால், அதுவரை அவர் ஆவியாக அல்லது பேயாக அலைந்து திரிவதற்குச் சந்தர்ப்பம் இருக்கின்றது எனப்படுகிறது.

இந்த ஆவி, பேய் பற்றிய விடயம் இந்துக்களுக்கு மட்டும் பொருந்துவதில்லை. எல்லா மதத்தவருக்கும், இனத்தவருக்கும், ஏன் இது குறித்து ஆராய்ச்சிகளை நடத்துபவர்களுக்கும் கூடப் பொருந்துவதே. எவர் எங்கு நின்று இது குறித்து ஆராய்ந்தாலும் பேய் விடயத்தில் ஒரு பொதுத் தன்மை காணப்படுகின்றது. அது திகிலூட்டும் கதையாகவே இருக்கும். இது விடயமாக இந்தியாவிலும் மேற்கத்தேய நாடுகளிலும் பல திரைப்படங்களையும், விவரணங்களையும் தயாரித்திருக்கிறார்கள். அவையும் திகிலூட்டத் தவறுவதில்லை.

இந்தப் பத்தியை வாசிப்பவர்கள் தாம் அறிந்தவற்றைச் செம்மண்ணுக்கு எழுதி அனுப்பினால் இந்தப் பகுதியில் சேர்த்துக்கொள்ளப்படும். இதன் மூலம் வாசகர்களுக்கு அதிக தகவல்களைக் கொடுக்க முடியும். பேய் என்பது பயப்படுகின்ற விடயமல்ல.

இலங்கையில் அவலச் சாவடைந்த பிரிவினராகப் போராளிகள் பலர் காணப்படுகின்றனர். இந்தப் போராளி இளைஞர், யுவதிகளின் பேய் - ஆவி பற்றிய கதைகள் இயக்க உறுப்பினர்களால் அதிகம் பகிரப்பட்டுகின்றன.

மணலாறு காட்டுப் பகுதியில் ஒரு தீபாவளி நாளில் ஓர் இளம் போராளி தனியாக நடந்து போய்க்கொண்டிருந்தார். அப்போது ஓரிடத்தில் இன்னோர் போராளி புதுச் சாறமும், புதிய பெனியனும் அணிந்தபடி இருந்திருக்கிறார். நடந்து போய்க்கொண்டிருந்த போராளி, "என்னன்னே புதுச் சாரமெல்லாம் கட்டியிருக்கிறியள்?" என்று கேட்க, "இன்டைக்குத் தீபாவளி அதுதான் கட்டியிருக்கிறன் உள்ளுக்க சரியான புளுக்கமா இருக்கு. அது தான் இதில இருக்கிறன்" என்று கூறியிக்கிறார் மற்றைய போராளி.

கதை கேட்டவர் நின்று கதைக்காமல் அப்படியே போய்விட்டார். பாசறைக்குப் போன பின்னர் இந்த விடயத்தை எதேச்சையாகத் தனது பொறுப்பாளரிடம் கூறியபோது, இராணுவ உளவாளிகள் யாராவது ஊடுருவியிருக்கக் கூடும் என்ற எண்ணத்தில் புதிய போராளியையும் கூட்டிக் கொண்டு பொறுப்பாளர் அந்தப் போராளி கதைத்த இடத்தைச் சென்று பார்த்திருக்கிறார். அவர் காட்டிய இடம் ஓர் புதை குழிப் பகுதி. 6 மாதங்களுக்கு முன்னர் அங்கு புதைக்கப்பட்டவரைப் பொறுப்பாளருக்குத் தெரியும். அங்கு கண்டவர் எப்படியான அங்க அடையாளங்களைக் கொண்டவர் என்று பொறுப்பாளர் கேட்டபோது புதிய இளம் போராளி கூறிய அடையாளங்கள் ஏற்கனவே புதைக்கப்பட்ட போராளிக்குப் பொருந்திப் போவதைப் பொறுப்பாளர் புரிந்துகொண்டார்.

இளம் போராளிக்கு அவர் அதைக் காட்டிக் கொள்ளவில்லை.

வாகரையைச் சேர்ந்த ஒருவர் இப்படிக் கூறினார், "மலையை அண்டிய பகுதி ஒன்றில் பூங்கா ஒன்று அமைக்கத் திட்டமிட்டு, மதில் கட்டும் வேலைக்குப் போயிருந்தோம். நாங்கள் 6 பேர். இரவு அரிக்கன் லாம்பு ஒன்றைக் கொழுத்தி வைத்துச் சாப்பாட்டை முடித்து விட்டுக் கதைத்துக் கொண்டிருக்கத் திடீரென எங்கள் கன்னங்களில் மாறி மாறி யாரோ அடித்தார்கள். ஒரே நேரத்தில் ஆறுபேருக்கும் அடிகள் விழுந்தன. நாங்கள் குளறியடித்துத் திக்கு முக்காக ஓடினோம். எந்த உருவத்தையும் நாங்கள் காணவில்லை. மறுநாள் காலை விடிந்ததும் அந்த இடத்தை விட்டே ஓடிவிட்டோம். விடுதலைப் புலிகளின் இருவேறு பிரிவுகளுக்குள் (கருணா) சண்டை நடந்த இடம் அது என்றும் அந்தச் சண்டையில் இறந்தவர்களை அவ்விடத்தில் அடக்கம் செய்தனர் எனவும் பின்னர் அறிந்தோம்" என்றார். ■

## கொரோனாவுக்குள் "டெனெட்" சாதனை!

கொரோனா நெருக்கடியால் தொடர்ந்து மூடப்பட்டிருக்கின்றன திரையரங்குகள். திரைப்பட வெளியீடுகளும் முடங்கியுள்ளன. சில படங்கள் ஒத்தி வைக்கப்பட்டன. சில படங்கள் ஓடிடி தளங்களில் வெளியாகின. சில நாடுகளில், விதிமுறைகளுக்கு உட்பட்டு திரையரங்குகள் திறக்கப்படுகின்ற நிலையில், கிறிஸ்தோபர் நோலனின் 'டெனெட்' திரைப்படம் வெளியாகிச் சாதனை படைத்துள்ளது. 'டெனெட்' படத்துக்கு வசூல் ரீதியிலும் விமர்சன ரீதியிலும் பெரும் வரவேற்புக் கிடைத்துள்ளது. பிரிட்டன், கனடா, தென் கொரியா உள்ளிட்ட 41 நாடுகளில் வெளியாகியுள்ள இந்தத் திரைப்படம் ஐந்தே நாள்களில் 53 மில்லியன் அமெரிக்க டொலர்களை வசூலித்துள்ளது. இது தாங்கள் எதிர்பார்த்ததை விட அதிக தொகை என்கிறது வேர்னர் பிரதர்ஸ் நிறுவனம். நிலமை இப்படியிருக்க, கடந்த செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதியன்று அமெரிக்கா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளில் 'டெனெட்' திரைப்படம் வெளியாகி, முதல் வாரத்திலேயே 78.3 மில்லியன் அமெரிக்க டொலர்களை வசூலித்து விட்டது. இதனால், இதுவரை இது வசூலித்துள்ள தொகை 146.2 மில்லியன் டொலர்கள். இஸ்ரேல், கட்டார், ஜப்பான், மெக்சிக்கோ ஆகிய நாடுகளிலும் இது வெளியாகிறது. 200 மில்லியன் செலவில் உருவான படம் உலகம் முழுவதும் வெளியானால் குறைந்தது 500 மில்லியன் டொலர்களை வசூலிக்கும் என்று கூறப்படுகிறது.

## பாசிப் பயறுக் கஞ்சி...

நெல்லைப்போலான ஒரு விதையுணவு பயறு. ஆனால் பருப்பு வகையைச் சார்ந்தது. நெல்லைப்போல காபோவைதரேற்று எனப்படுகின்ற மாப்பொருள் பயறில் அதிகமில்லை. புரதம் நிறைந்தது. மீன் உண்ணாதவர்களால் தொன்றுத் தொட்டுப் பயறு பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. சத்துக் கூடுதலாகக் காணப்படும் பயறு ஈரப்பதன் குறைந்த விதையாதலால் அதைப் பல நாள்கள் பாதுகாப்பாக வைத்திருக்க இயலும். இப்பயறுகள் உலர்ந்து விதைகளாக மாறுவதற்கு முன்னரும் உண்ண உகந்தவை. நன்கு முதிர்ந்த பயறு வகைகளிலேயே அதிக சத்துக்களும் குறைவான ஈரப்பதமும் காணப்படுகின்றன. எது எப்படியிருப்பினும் நம்மவர்கள் துவைத்து மோதகம், கொழுக்கட்டை போன்ற உணவுப் பண்டங்களாகவும் பயறை உள்ளெ தவறுவதில்லை. அதைப்போல சிவப்பு அரிசியில் பால் கஞ்சி காய்ச்சும்போதும் பகுதியள சேர்க்கத் தவறுவதில்லை. அதைப்போலதான் இந்தப் பயறுக் கஞ்சி.


### என்னென்ன பொருள்கள் தேவை?

சிவப்பு அரிசி - ஒரு டம்ளர்
பாசிப்பயறு - அரை டம்ளர்
சின்ன வெங்காயம் - 4
பச்சை மிளகாய் - மூன்று
வெந்தயம் - ஒரு கரண்டி
உப்பு - தேவையான அளவு
துருவிய தேங்காய்ப்பூ - தேவையான அளவு

### எப்பிடிச் செய்வது?

பச்சை மிளகாய்களையும் வெங்காயங்களையும் நறுக்கிக் கொள்ளுங்கள். சிவப்பு அரிசியையும் பயறையும் சேர்த்து நன்றாகக் கழுவி விட்டு நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், வெந்தயம், உப்பு ஆகியவற்றைச் சேர்த்துச் சிறியளவு பானை ஒன்றுக்குள் 4 டம்ளர் அளவில் தண்ணீர் ஊற்றி வேக வைக்கவும்.

வெந்துகொண்டிருக்கையில் அகப்பையால் நன்றாக மசித்துக் கொள்ளுங்கள். பின் அதில் தேவையான அளவு தண்ணீர் ஊற்றி நன்கு கொதிக்க விடுங்கள். ஏற்றளவுக்குத் தண்ணீர் சேர்த்துக் கொள்ளுங்கள். தேங்காய்ப்பூவை அதனுடன் கலந்து கொள்ளுங்கள். சுவையான மற்றும் சத்தான கஞ்சி தயார்.





# தடைகளை தாண்டும் அழகு

● காயா

போருக்குப் பின்னரான தமிழ் கூறும் நல்லுலகில் மிக வேகமாக வளர்ந்துவரும் துறைகளில் ஒன்று அழகுக் கலை. தனிநபர் அழகுக் கலை அதனது உச்சத்தை இன்னும் தமிழ்ப் பகுதிகளில் எட்டவில்லை என்றபோதும், திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்தநாள் விழாக்கள் போன்றவற்றில் லட்சங்களைக் கொட்டி தம்மை அழகாக்குவதில் தமிழ்ப் பெண்களின் ஆர்வம் பெருகிவருகின்றது. பெண்களுக்கு மட்டுமென்றில்லை ஆண்களுக்கும் அதன் மீதான ஆர்வம் முன்னைய காலங்களோடு ஒப்பிடுகையில் பெருகித்தான் வருகின்றது.

"என்ன மேக்கப்பா...? மேக்கப் படிக்கப்போறியா? ஏன் மேக்கப்? அது தேவையில்ல... என்றெல்லாம் இந்தத் துறையில இறங்கும்போதே நிறையப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தன். உறவினர்கள்கூடக் கடிந்தார்கள்" என்கிறார் நிறோஜினி. அழகுக் கலை, அலங்கார - ஒப்பனைத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார் சுன்னாகத்தைச் சேர்ந்த அவர். இந்தத் துறையில் கால்பதித்தபோது மேற்குறிப்பிட்டதுபோல வசைபாடல்களுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுத்திந்தாலும் இன்று அவருக்கு அதுவொரு சிறந்த வாழ்வாதாரமாக மாறியிருக்கிறது. அவரைப் போலவே பலரும் இந்தத் தொழி லில் ஆர்வத்துடன் ஈடுபடத் தொடங்கியிருக்கிறார்கள்.

இன்றைக்கு அவர் அந்தத் துறைசார்ந்த புதிய புதிய தொழில் முயற்சிகளில் ஆர்வத்தோடும் ஈடுபாட்டோடும் செயற்பட்டு வருகிறார். அதில் உச்சம் தொடும் பரிசோதனைகளிலும் இறங்கியுள்ளார். தனக்குக் கீழே சில பெண் பிள்ளைகளைப் பணிக்கமர்த்தி அவர்களுக்கு ஊதியம் வழங்கி, அவர் தம் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்தும் வகையிலான தொழில் வழங்குநராகவும் ஆகியிருக்கிறார்.

பெண்கள் தமக்கேற்ற துறைகளில் திறம்படச் செயலாற்றினால் போட்டி மிகுந்த இந்த நூற்றாண்டின் வர்த்தக உலகில் தடம் பதிக்கவும், ஈடுகொடுக்கவும் முடியும் என்கிறார் அவர். பெண்களின் தொழிலுலகில் ஒரு முன்னுதாரணமாகத்திகழும் அவரைச் செம்மண் வாரமலருக்காக அணுகியதில் தன்னுடைய தொழில் வளர்ச்சி குறித்து விவரித்தார்.

"நான் மேக்கப் தொடங்கின காலத்தில என்னப் பார்த்துச் சிரிச்ச ஆக்கள்தான் அதிகம். ஏன் கொண்டுபோய் இவ்வளவு காசை இதுக்குக் கொட்டுறாய்? ஏன் இவ்வளவு ரைம்ம வேஸ்ற் ஆக்கிறாய்? இதில என்னத்த உழைக்கப் போறாய்? என்றெல்லாம் பல மாதிரிக் கதைகள். அது இண்டு வரைக்கும் இருக்குது" என்கிறார் அவர்.





"நான் 2008ஆம் ஆண்டு மேக்கப், பியூட்டி கல்ச்சர், கெயார் ஸ்ரைல் படிச்சனான். 2009இல வேலை ஸ்ராட் பண்ணினான். பெஷன் டிசைன் தான் என்ர ஆசை. நான் ஏ.எல். எடுத்திட்டுச் சும்மா இருக்கிறன் எண்டிட்டுத்தான் ஏ.எல். எடுத்த உடனயே இதைப் படிக்க வெளிக்கிட்டன். பிறகு கம்பஸ் முடிச்சிட்டும் வேலையில்லாமல் இருந்ததால இதைத் தொடர்ந்தன். முதல் நான் இதை ஒரு தொழிலாத்தான் தொடங்கினான். பிறகு கொஞ்சம் காலம் போகப் போக இதில ஆர்வம் வந்ததால அதிக பணம் உழைக்கிறத மட்டும் எதிர்பார்க்காமல், ரசிச்சு ஈடுபாட்டோட செய்ய வெளிக்கிட்டன். தொழில் வராட்டியும் பரவாயில்ல என்டு செய்தன். ஆனால் அதிக வருமானம் வருகுது. இப்ப தீவிரமாச் செய்யிறது தொழிலுக்காக இல்ல. என்ர திறமையை வெளிக்காட்டுறதுக்கும் எனக்கிருக்கிற விருப்பத்துக்கும்தான்"



இவ்வளவும் சொல்லிய கையோடு நிறோஜினி பேச்சைச் சிறிது நிறுத்தினார். தான் கற்ற கல்வியும் இதற்குக் காரணம் என்றார். பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு தொழில் கல்வியில் இறங்கிய அவர் பல்கலைப் படிப்பை முடித்துக்கொண்டு அரச வேலைக்குக் காத்திராது கற்ற - தெரிந்த தொழிலில் இறங்கிவிட்டார். அதனால் தன்னிறைவாக வளர்ந்தும் விட்டார். இந்தத் துறை மீது தனக்கிருக்கின்ற விருப்பமும் ஈடுபாடும் காரணமாக அந்தத் துறையில் தான் புதிய புதிய உத்திகளைப் புகுத்தி வருகிறார் என்றும் அவர் கூறுகிறார்.

"சாதாரணமான அலங்கரிப்பாளர்கள் ஒரு மணப்பெண் அலங்காரமாக ஒரு பொம்பிளையை அலங்கரிப்பதற்காகச் என்னென்ன அணிய வேண்டும், எப்படி அலங்கரிக்க வேண்டும் எண்டு யோசிப்பினம். நான் பல்கலைக் கழகத்தில் சித்திரமும் வடிவமைப்பும் கற்றதால் மேக்கப்பைத் தாண்டியும் கொஞ்சம் வித்தியாசமா என்னால என்ன செய்ய ஏலும் எண்டு தேடிப் பார்த்து மினக்கெட்டு ஈடுபாட்டோட செய்தன். நானே செலவளிச்சு, அர்த்தநாரிஸ்வரர் செய்தன். எந்தத் தேவைக்காண்டியும் அதைச் செய்யவில்லை. எனக்கிருந்த ஈடுபாட்டால செய்தன். அதுக்கு முப்பதாயிரம் வரை செலவு. ஒரே முகத்தில் இருளும் வெளிச்சமும் என்ற கருத்தில் ஓவியம் செய்தன். ஒரு ஸ்கின்னிலயே டார்க் ரோன் லைற் ரோன் எப்பிடியிருக்கும், அதைத் திறீ டீயாக் கொண்டந்திருக்கிறன். அம்மன் செய்திருக்கிறன். கையில் கண் செய்திருக்கிறன். ஆட்டிஸ்ற் திங்க்ஸ் (தூரிகை உட்பட்ட வரைதல் பொருள்கள்) இல்லாமல் மேக்கப் திங்ஸ்ஸால முதுகு ஒன்றில் முக உருவம் செய்தன்" என்றார்.



மற்றைய அலங்காரிப்பாளர்களை விடத் தான் புதிய புதிய பரிட் சார்த்த முயற்சிகளில் இறங்கியிருப்பதாகக் குறிப்பிட்ட நிறோ ஜினி அதன் முதற் கட்டமாகத் திரைப்பட நடிகைகளின் சாயலில் உள்ளூர்ப் பெண்களை வடிவமைத்ததாகக் குறிப்பிட்டார்.
ஸ்கின்னில பெய்ன்ரிங் மெதெர்ட்டில மேக்கப் செய்யிறன். திறீ டீ வேர்க். அதாவது ஓர் ஆளின்ர முகத்திலயே இன்னொராளக் கொண்டுவரலாம்.

தான் புதிய புதிய பரிட்சார்த்த முயற்சிகளில் இன்னும் தீவிரமாக இறங்கியிருக்கிறார் எனக்கூறும் நிறோஜினி அதன் முதற் கட்டமாகத் திரைப்பட நடிகைகளின் சாயலில் உள்ளூர்ப் பெண்களை வடிவமைத்தேன் எனக் குறிப்பிட்டார்.

"ஸ்கின்னில பெய்ன்ரிங் மெதெர்ட்டில மேக்கப் செய்யிறன்.

## தடைகளைத் தாண்டும்....

திறீ டீ வேர்க். அதாவது ஓர் ஆளின்ர முகத்திலயே இன்னொராளைக் கொண்டுவரலாம். என்ர முகம் இதுவாகவே இருக்க இன்னொரு நபரின்ர முகமா அதைப் பெய்ன்ரிங்கால மாற்ற முடியும். அதுக்கு நான் படிச்ச கல்விதான் ஹெல்ப்பா இருக்குது. அதுக்கு முகச் சாயல் இருக்கவேணும் எண்ற கட்டாயமில்ல. பெரிய கண் இருக்கிற பிள்ளை எண்டு சொன்னால் நாங்க இன்னொராளா மாத்திச் செய்யச் சின்னக் கண்ணாக்க வேணும்.

ஒருவரின் முகச் சாயல் இல்லாத ஒரு பிள்ளையின் முகத்தில் முன்னையவரின் சாயலைக் கொண்டு வறாதுதானே கெட்டித்தனம். நான் நயன்தாராவின் உருவத்தைச் செய்தனான். அதே கரெக்டரக் கொண்டுவர முடிந்தது. அப்பிடிக் கொண்டுவாறதுக்கு நிறைய ரைம் எடுக்கும். ஏனெண்டா ஒவ்வொரு விசயமும் பார்த்துப் பார்த்துச் செய்யவேணும். கண் பாக்கோணும் மூக்குப் பாக்கோணும் நாடி பாக்கோணும் எங்க வளையுது எங்க நெளியுது என எல்லாத்தையும் பாத்துப் பாத்துச் செய்யிறதால நாலு, அஞ்சு மணித்தியாலயங்கள் ஆகும் முடிக்க.

நயன்தாராவைப் போன்று வேறு ஒரு கலாசாரத்தில், பின்னணியில் உள்ள ஒருவரை யாழ்ப்பாணத்துப் பெண்ணில் கொண்டு வருவதென்பது கல்லில் நார் உரிப்பதற்கு ஒப்பானது, அவ்வளவு கடினமானது. அவங்கட றெஸ்ட் கோட் அவங்கட பண்பாடு என எல்லாத்தையும் இவயிட்ட திணிக்க வேணும். நயன்தாரா வடிவில செய்தது நல்லா வந்தது. ஹன்சிகா மாதிரிச் செய்தது சரியா வரவில்லை. எல்லாரும் அது ஹன்சிகா மாதிரி வந்திருக்கெண்டு சொல்லியிருக்கினம். ஆனால் எனக்கது திருப்தியில்லை"

நிறோஜினி சொல்லிய நடிகைகளின் வடிவமைப்பில் அவர் செய்த அழகுச் செதுக்கல்கள் அசலின் உருவ ஒற்றுமையை பிரதிபலிக்கத் தவறவில்லை என்பதை ஒளிப்படங்கள் பறைசாற்றுகின்றன. இவ்வாறாகப் புதியதொரு தொழில் முனைவராகத் தன்னை முன்னிறுத்திவருகின்ற நிறோஜினியின் கைவசம் இன்னும் வேலைத் திட்டங்கள் உள்ளன. அவற்றைத் தோற்றுவித்துப் பல பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கின்ற எதிர்காலத் திட்டம் ஒன்றையும் அவர் கைவசம் வைத்திருக்கிறார்.

"எல்லாத்தையும் அக்கடமியாப் பதிவு செய்து செய்யோனும் எண்டு ஆசை இருக்கு. தனி ஒரு பெண்ணாக நான் இப்பிடித் தொழில்துறைகளில முன்னேறி வாறதுக்குக் காரணம் என்னுடைய கணவர்தான். என்னுடைய எல்லா முயற்சிகளுக்கும் ஊக்கமளிப்பதோடு எனக்கு உற்சாகமும் தாறது அவர்தான்."



# அங்கே கொண்டாட்டம் இங்கே திண்டாட்டம்..!

குமரன்

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலின் பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள சூழல், குறிப்பாக நாட்டின் இரு பெரும் துருவங்களான வடக்கு தெற்கில் நிலவுகின்ற அரசியல் நிலைப்பாடுகள் தெற்கில் கொண்டாட்டமாகவும் வடக்கில் திண்டாட்டமாகவுமே காணப்படுகின்றது.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற அதிபர் தேர்தலில் சிறுபான்மையினரின் வாக்குகள் எந்தவித தாக்கத்தையும் செலுத்த முடியாத வகையில் பெரும்பான்மைச் சிங்கள வாக்குகளால் கோத்தாபய ராஜபக்ச அதிபராகத் தெரிவு செய்யப்பட்டார். அப்போதே ராஜபக்சக்களின் நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியும் உறுதியாக எழுதப்பட்டாயிற்று.

ராஜபக்சக்களை எதிர்த்து நின்ற சஜித் அணியினரால் பெரியளவில் எதிர்ப்பைப் பதிவு செய்யமுடியவில்லை. ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே அவர்களுக்கு எற்பட்டிருந்த உட்கட்சி மோதல் வேறு அவர்களைப் பலவீனப்படுத்தியது. அதற்கும் மேலாக வரலாற்றில் முதல் தடவையாக ஐக்கிய தேசியக் கட்சி ஒரேயொரு ஆசனத்தைக்கூடக் கைப்பற்ற முடியாத அளவிற்குப் பலவீனப்பட்டுப்போனது.

> “ தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கிய தூணாகக் கருதப்பட்டு வந்தவரான சட்டத்தரணி மணிவண்ணனைக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்தும் நீக்கி தனது உட்கட்சிப் பூசலை அப்படியே நசுக்கிவிட அந்தக் கட்சித் தலைமைப் பீடம் முனைந்திருக்கின்றது. ”

இதனால் ராஜபக்சக்கள் தேர்தலுக்கு முன்பான தமது கூட்டாளிகளுடன் சேர்ந்து நாடாளுமன்றத்தில் 150 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டு தீர்க்கமான ஆட்சியை அமைத்துக்கொண்டார்கள். அவர்களது கொண்டாட்டம் இனி 05 வருடங்களுக்கு தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது.

இப்படி வெற்றி மகிழ்ச்சியில் கொரோனவுக்கு நடுவிலும் அவர்கள் அங்கே கொண்டாட்டமாக இருக்க, வடக்கு - கிழக்கிலோ நிலைமை பெரும் திண்டாட்டமாகவே உள்ளது. தமிழர்களது ஏக பிரதிநிதிகள் என்று இதுவரை காலமும் உரக்கச் சொல்லித்திரிந்த கூட்டமைப்பினர் தற்போது பெட்டிக்குள் அடைபட்ட பாம்புகளாகிப் போய்விட்டனர். காரணம் அவர்கள் கடந்த தேர்தலில் கண்ட கடும் பின்னடைவு. என்ன தான் மூன்று ஆசனங்களைக் கைப்பற்றினாலும் இத்தனை காலம் காப்பாற்றிவந்த கூட்டமைப்பின் பெயர் காற்றோடு போய்விட்டது.

மறுபுறத்தில் 10 வருட காத்திருப்பிற்குப் பின்னர் நாடாளுமன்றத்திற்குள் சென்றிருக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதிலிருந்து





ஒரு அரசியல் வேகத்தைப் பெறும் என்று பார்த்தால் அப்படி ஏதும் நடப்பதாகத் தோன்றவில்லை.

கூட்டமைப்பிற்குள்ளும் தமிழ்த் தேசிய முன்னணிக்குள்ளும் தேர்தலுக்கு முன்னர் காணப்பட்ட உட்கட்சி பூசல்கள் தேர்தலுக்குப் பின்னர் வெளிப்படையாகவும் வலுவாகவும் வெளித்தெரிகின்றன. கூட்டமைப்பிற்குள் ஊடகப் பேச்சாளர் மற்றும் நாடாளுமன்றக் கொறடா பதவிகளின் மீது ரெலோ மற்றும் புளொட் கட்சிகளும் கண் வைக்கின்றன. ஆனால், அந்தப் பதவிகளில் தற்போதுள்ளவர்கள் மாற்றப்பட்டாலும் அது தமிழ் அரசுக் கட்சியின் கைகளுக்குள்ளேயே இருக்கவேண்டும் என்பதில் அந்தக் கட்சியின் உயர்பீடங்கள் உறுதியாக நிற்கின்றன.

இந்தப் பதவிகள் வரும் 22ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வின் பின்னரான கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், கனன்றுகொண்டிருக்கும் இந்தப் பிரச்சினை எப்போதும் வெடிக்கலாம் என்பதே உண்மை.



மறுபக்கத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கிய தூணாகக் கருதப்பட்டு வந்தவரான சட்டத்தரணி மணிவண்ணனைக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்தும் நீக்கி தனது உட்கட்சிப் பூசலை அப்படியே நசுக்கிவிட அந்தக் கட்சித் தலைமைப்பீடம் முனைந்திருக்கின்றது. இதையடுத்து தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை என்கிற அமைப்பை மணிவண்ணன் கட்டமைத்திருக்கிறார். இந்த அமைப்பு முன்னணியின் ஓர் அங்கம் என்று அறிவித்திருந்தாலும், இனிவரும் காலங்களில் மணிவண்ணன் முன்னணியின் பெயரைப் பயன்படுத்தக்கூடாது என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அறிவித்திருக்கிறார். இதனால் மாகாண சபை வரைக்கும் இந்த மோதலும் விரிவடைந்து செல்லும் என்று எதிர்பார்க்கலாம்.

கட்சியைவிட்டு நீக்கப்பட்டுள்ள மணிவண்ணன் பக்கம் நிற்கும் கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் சிலர் மீதும் நடவடிக்கைகள் பாயத் தயாராகின்றன என்கிற தகவல்வேறு இந்தப் பிரச்சினை இப்போதைக்கு ஓயப்போவதில்லை என்பதையே கட்டியம் கூறுகின்றது.

ஆக தென்னிலங்கையில் ராஜபக்சக்கள் மீண்டும் மீண்டும் வெற்றிக் கொண்டாட்டங்களில் திளைத்திருக்க, வடக்கு கிழக்கில் தமிழ்க் கட்சிகளோ தொடர்ந்தும் திண்டாடிக்கொண்டே இருக்கின்றன. தமிழர்களின் எதிர்காலமோ இன்னும் கடுமையாகத் திண்டாடி வருகின்றது.



தொடர்வண்டியில் பயணிப்பது பெரும்பாலானவர்களுக்குப் பிடிக்கும். பள்ளி வயதில் ஒருவரின் தோளை ஒருவர் பிடித்துக் கொண்டு சுக்குப் பக்குச் சுக்குப் பக்குக் கூ... என்று கூவியவாறு ஓடி விளையாடிய காலம் ரசனைக்குரியது. கண்டி காலி கொழும்பெல்லாம் சுற்றித் திரிகின்ற தொடர்வண்டிப் பாடலும் மனதிலிருந்து நீங்காதது. இப்படிப்பட்ட மறக்க முடியாத தொடர்வண்டியை ஓட்டிச்செல்லும் ஓட்டுநரை எப்போதாவது பார்க்க நாம் ஆசைப்பட்டிருக்கிறோமா? இல்லை என்பதே அநேகரின் பதில். அப்படியான ஒரு ரயில் ஓட்டுநரின் கதையே இந்தத் திரைப்படம். 2017ஆம் ஆண்டில் நடந்த 89ஆவது ஒஸ்கார் விருது விழாவில் சிறந்த வெளிநாட்டு மொழித் திரைப்படப் பிரிவில் செர்பியா நாட்டின் சார்பாக போட்டியிட்டது. 38ஆவது மொஸ்கோ சர்வதேச திரைப்பட விழாவில் பார்வையாளர்களின் விருதை வென்றது. 2017இல் ப்ராக் சுதந்திர திரைப்பட விழாவில் மூன்று விருதுகளை வென்றது.

**கதை**

தென் கிழக்கு ஐரோப்பிய நாடான செர்பியாவில் ஒரு சிறிய பகுதியில் தொடர்வண்டி ஓட்டுநராகப் பணிபுரிந்து வருகிறார் இலியா. அவரது அப்பாவும் தாத்தாவும் கூட இதே பணியைச் செய்தவர்களே. இலியா தத்தெடுத்து வளர்க்கும் சிமாவிற்கும் இலியாவைப்போல ரயில் ஓட்டுநராகிவிட ஆசை. இலியாவுக்கு அது விருப்பமில்லை. சிமாவை வேறு ஏதோ ஏதோ வேலைக்கெல்லாம் அனுப்பும் இலியா அவனை ரயில் ஓட்டுநராக்காது தடையிடுகிறார். ஆனால் தனது பிடிவாதத்தால் தொடர்வண்டி ஓட்டுநராகும் சிமா, அதன்பின் என்ன மாதிரியான மன அழுத்தங்களை எதிர்கொள்கிறான் என்பதே மீதிக் கதை.

**இயக்குநரின் திறமை**

இந்தப் படத்தை இயக்கித் தயாரித்துள்ளார் மிலோ ரெடோவிச். திரைக் கதையை அழகாகச் செதுக்கியிருக்கிறார். தொடர் வண்டியை இயக்குவது என்பது அவ்வளவு சாதாரணமில்லை என்பதைப் படம் புரியவைக்கிறது. முதல் காட்சியிலேயே இலியா தண்டவாளத்தில் குறுக்கே நிற்கும் ஒரு வானின் மீது தொடர் வண்டியை ஏற்றிவிட்டு, அதில் இறந்தவர்களின் குடும்பத்திடம் சென்று அவர்கள் மீது தொடர் வண்டியை ஏற்றியது தான்தான் எனச் சொல்லி விட்டு, மலர் வளையம் வைத்துவிட்டு வரும் காட்சியிலேயே இது தெரிந்து விடுகிறது. சிமாவைக் கூட தண்டவாளத்தின் குறுக்கே தற்கொலை செய்துகொள்ள வரும்போது தான் அவர் தத்தெடுக்கிறார். சிமாவை தொடர்வண்டி ஓட்டுநராகக் கூடாது என்பதில் பிடிவாதமாக இருக்கும் இலியா, வேறு வழியில்லாமல் அவனுக்கு ஓட்டுநராகத் தேவையான விடயங்களையெல்லாம் சொல்லிக் கொடுக்கிறார். இலியா கடைசி வரை திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதற்கான காரணம்கூட அந்த தொடர் வண்டியுடனேயே சம்மந்தப்பட்டிருக்கிறது.

இலியா எங்கேயும் சிமாவை தன் மகன் என்றோ பேரன் என்றோ சொல்ல மட்டார். ஆனாலும் சிமா மீதான பாசம் அவரை விபரீத முடிவுகளைக் கூட எடுக்க வைக்கிறது. இலியாவுடன் வேலை பார்க்கும் தொடர் வண்டி ஓட்டுநர்களெல்லாம் சிமாவைச் சந்தித்து பேசும் போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு அனுபவங்களைச் சொல்கின்றனர். தனது பாட்டியின் மீதே ரயில் ஏற்றியது, ஒரு பெட்டி முழுக்க இருந்த பயணிகள் உயிரிழந்தது எனப் பல சம்பவங்களைச் சொல்லும்போது அதற்கான அழுத்தங்கள் மிக மென்மையாக ஏற்படுத்தப் படுகிறது. இந்த விசயங்களை இவ்வளவு மென்மையாகச் சொல்ல முடியுமா என ஆச்சரியப்பட வைக்கிறார் இயக்குநர்.

பிடிவாதத்துடன் தொடர் வண்டி ஓட்டுநராக வேலையில் சேரும் சிமா அதன்பிறகு அந்த வேலையை மன அழுத்தத்தோடு மேற்கொள்ளும் காட்சிகள் அருமை. அவனால் சரியாகத் தூங்க முடிவதில்லை, சாப்பிட முடிவதில்லை. ஒவ்வொரு பாலங்களுக்கு அருகிலும் வளைவுகளுக்கு அருகிலும் தொடர் வண்டியை நிறுத்தி நிறுத்தி யாரேனும் வருகிறார்களா எனப் பார்த்துப் பார்த்து இயக்கும் காட்சி ஒன்றே அவனது மன அழுத்தத்தை சொல்கிறது. அதிலிருந்து விடுபட இலியா சொல்வது கூட இன்னும் அதிர்ச்சியாக இருக்கிறது, ஆனால் அதனைத்தான் செய்தாக வேண்டும்.

ஆயிரக்கணக்கான மக்களை தனக்குள் ஏற்றிக் கொண்டு செல்லும் தொடர் வண்டியை இயக்குபவர் எப்படியெல்லாம் இருக்கிறார்? அவர் மனநிலை என்ன? நாம் யோசிக்காத வர்களின் வாழ்க்கையை நம் முன் அழகாகச் சொல்கிறார் மிலோ ரெடோவிச்.


தொடர் வண்டி ஓட்டுநர் எவ்வளவுதான் கவனமாக இருந்தாலும் விபத்துகள் நிகழ்வதை தவிர்க்க முடியாது. அந்த விபத்துகளுக்கு அந்தத் தொடர் வண்டி ஓட்டுநர்களும் காரணமாக முடியாது. ஆனால், எதிர்பாராத விதமாக விபத்து நடைபெறும்போது அனைவரும் அந்த ரயில் ஓட்டுநரைத்தான் திட்டித் தீர்க்கிறோம். அவரது பணிச் சூழலில் இருந்து யோசிக்கும்போது அதன் கடினம் புரியும். அவரும் குற்றவுணர்ச்சியில்தான் தவிப்பார். இப்படியான மனிதர்களைப் பற்றி யோசிக்க வைத்ததே இந்தத் திரைப்படத்தின் வெற்றி. இனி நாம் பயணிக்க போகும் ரயிலில் அந்த ஓட்டுநர் எப்படி இருப்பார் என்றாவது யோசிக்க வைக்கும் இந்தத் திரைப்படம்.



# ட்ரெயின் டிரைவர்ஸ் டயறி



## ஹிட்மான் இன் "பிக் சிக்ஸ்"



கிரிக்கட் உலகில் 'ஹிட்மான்' என்று ரசிகர்களால் செல்லமாக அழைக்கப்படுபவர், இந்திய அணியின் துணைத்தலைவர் ரோகித் சர்மா. இவரது துடுப்பாட்டம் மற்றும் துடுப்பெடுத்தாடும் நுணுக்கங்கள் ரசிகர்களது கவனத்தை வலுவாக ஈர்க்கவல்லன. தற்போது ஐ.பி.எல் போட்டிகளுக்காக மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைமைப் பொறுப்பினை ஏற்று ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு சென்றுள்ள ரோகித், பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். அண்மையில் நடந்த பயிற்சி ஆட்டம் ஒன்றில் வீரர் ஒருவர் வீசிய பந்தினை நேராகத் தூக்கி அடித்துள்ளார். அந்தப் பந்து மைதானத்துக்கு மேலாக 95 மீற்றர் தூரத்துக்குச் சென்று வீதியில் சென்றுகொண்டிருந்த பேருந்து ஒன்றின் ஜன்னல் கண்ணாடியினை பதம்பார்த்துள்ளது.

இந்த சிக்சர் தொடர்பில் மும்பை இந்தியன்ஸ் அணியின் கீச்சகப் பக்கத்தில் "பேட்ஸ்மன்கள் சிக்சர்கள் அடிப்பார்கள், ஜாம்பவான்கள் மைதானத்துக்கு வெளியே அடிப்பார்கள், ஆனால் ஹிட்மான் அடித்த சிக்ஸ் மைதானத்தையும் தாண்டி ஓடும் பேருந்தையும் தாக்கும்" என்று பதிவிடப்பட்டுள்ளது.

மானிப்பாய் சுதன்

# இருக்கைகள் குட்டி போடுமா?

சுரேன் வழமைபோல் இரவு 9.30க்கு தனது கடையின் வெளிக்கதவை மூடிவிட்டு, கணக்குகள் எல்லாம் முடித்து, சமான்களை ஒதுக்கிவைத்துவிட்டுக் கடையில் இருந்து புறப்பட நேரம் 11 ஆகிவிட்டது. வீட்டுக்கு வந்தவன் குளித்து, சாப்பிட வந்தபோது மனைவி தூக்க கலக்கத்துடன் இரவு உணவைப்பரிமாற அதனை அவசர அவசரமாக உண்டு விட்டுப்போய்ப் படுத்தவன்தான். நாள்முழுவதும் கடையில் நின்றவனுக்கு நித்திரை எப்படி வந்ததென்றே தெரியவில்லை.

சமயலறையில் கணவனின் கோப்பையைக் கழுவி வைத்துவிட்டு வந்த வதனாவின் முகம் வழமைபோல் சுருங்கிவிட்டது. கணவன் குறட்டை விட்டபடி நித்திரைகொள்வதைப் பார்த்தபோது ஓவென்று கத்தி அழவேண்டும்போல் இருந்தது. சத்தம் வந்தால் பக்கத்து அறையில் படுத்திருக்கும் மாமியார் எழுந்துவிடுவாரோ என்ற பயத்தில் தானும் படுத்துக்கொண்டாள்.

இப்படித்தான் திருமணமான புதிதில் கணவன் படுத்துவிட அவனை எழுப்பிக் கதைத்துக் கொண்டிருந்தவளை, பகல் முழுக்க வேலை செய்தவனை நித்திரைகொள்ள விடாமல் தொணதொணத்துக் கொண்டிருக்க வேண்டாம் என அடுத்த நாள் மாமியார் கடிந்தது இன்றுவரை ஞாபகமிருந்தது.

வதனாவின் கணவன் நல்லவன்தான்! நல்லவனாகத்தான் இருக்கவேண்டும். ஏனெனில் ஒருநாளும் சண்டைபோட்டதும் இல்லை, மனைவியைப் பேசியதும் இல்லை. அவன் வீட்டில் இருந்தால்தானே பேசுவதற்கும் சண்டையிடுவதற்கும். காலையில் 5 மணிக்கு எழும்பித் தனது வேலைகளை முடித்துக்கொண்டு கடைக்குச் சென்றான் என்றால் திரும்பி வருவது ஆரம்பத்திலேயே உங்களுக்குத் தெரிந்திருக்குந்தானே.

சுரேனின் பத்தாவது வயதிலேயே அவனது அப்பா இறந்துவிட சுரேனின் தாய் கணவனின் கடையைத் தானே நடத்திச் சுரேனையும் வளர்த்து, கடையில் முதலாளியாக அமர்த்தினாள். உழைப்பு உழைப்பு இதைவிட அவள் உலகம் சுரேன், சுரேனைத்தவிர வேறெதுவும் இல்லை. இன்றும் சுரேன் பத்து வயதுப் பிள்ளையே அவளுக்கு. எப்பொழுதும் தன் கண்முன்னே சுரேன் இருக்கவேண்டும்.



சுரேனுக்கு முப்பது வயதை கடக்க ஊரவர்கள் உறவினர்கள் சுரேனின் திருமணத்தைப் பற்றிக் கேட்டபோது தான், சுரேனின் தாய்க்குத் தனது மகன் இன்னும் சிறுவனில்லை என்ற நினைப்பே வந்தது. திடீரென்று ஏதோ ஒரு ஏக்கம், பயம் பற்றிக்கொண்டது. தனது மகன் தன்னை விட்டுப் போய்விடப்போ கின்றான், தனக்கென்று இனி எவருமில்லை என்ற உணர்வு மெல்ல எட்டிப்பார்க்கத் தொடங்கியது.

அவளையறிமால் மகனுக்கு வரும் ஒவ்வொரு பெண்களை யும் தட்டிக் கழித்துக் கொண்டு வந்தாள். நிறைய நிபந்தனைகள் விதித்தாள், நிபந்தனை கள் கூடக் கூடச் சுரேனின் வயதும் முப்பத்தெட்டைத் தொட்டது. இனியும் தட்டிக்கழிக்க முடியாது என்று நினைத்தவள் பல நிபந்தனைகளுடன் வதனாவைத் திருமணம் முடித்து வைத்தாள் சுரேனுக்கு.

வதனா குடும்பத்தில் மூத்தவள், ஒவ்வொரு பிரச்சினைகள், ஏமாற்றங் கள் வரும்போதும், திருமணம் முடித்து புகுந்த வீட்டுக்குச் செல்லும்போது தனது தாய் கூறிய வார்த்தை களே அவளது மனதில் தோன்றும். "பிள்ளை, என்ன பிரச்சினைகள் வந்தாலும் பொறுமையா கவும் அமைதியாகவும் இருக்கவேணும். உனக்குப் பிறகு இரண்டு தங்கச்சிமாரின்ட வாழ்க்கை உன்ர கையிலதான் இருக்குது."

இன்றும், திருமணமாகி மூன்று வருடங்கள் கடந்துவிட்ட நிலையி லும், வதனாவைத் தாயின் வார்த்தைகளே வழிநடத்திக்கொண்டி ருக்கின்றன. ஆனால் காலம் அமைதியாக இருக்கவிடுவதில்லை அனைத்து நேரங்களிலும். திருமணம் முடித்து வைத்த ஊரவர் வாய் அடுத்த கட்டமாக இன்னும் ஒன்றும் இல்லையோ? என்ன பேரப்பிள்ளை பார்க்கின்ற நோக்கம் இல்லையோ எனக்கேட்கத் தொடங்கினர்.

சுரேனின் தாயின் பார்வையும் நமது பாரம்பரியத்தின்படி மருமகளின் மீதே போனது. கடைசியில் வதனாவை சோதித்த மருத்துவர் வதனாவில் பிரச்சினை எதுவுமில்லை எனக்கூறி, சுரேனை சோதித்துவிட்டு "எண்ணிக்கை காணாது" என்றார். ஆனாலும் அது ஒரு பிரச்சினை இல்லை எனக் கூறி இருவருக்கும் மருந்து மாத்திரைகளைக் கொடுத்துக்கொண்டி ருந்தார். வருடங்கள் இரண்டு ஓடச் சுரேனின் வயது நாற்பத்துமூன்றானது.

இந்த வருட ஓட்டங்களுக்குள் வதனாவும் சுரேனும் மனச்சோர்வுக்கு உள்ளாகியிருந்தனர். வேறுவழியின்றி வதனா தனது தாய்வீட்டுக்குப் போய் ஒரு கிழமை நிற்கப்போவதாக அடம்பிடிக்க, சுரேனும் இரவு பத்து மணிபோல் வதனாவுடன் மாமியார் வீட்டுக்குப் போனான். தங்களது விட்டுக்கு அத்திபூத்தாற்போல் வரும் மகளும் மருமகனும் இரவு நேரத்தில் வருவதைக்கண்ட வதனாவின் தாய் பதைபதைத்துப் போனார்.

சிறிது நேரம் சுரேன் மாமியார் வீட்டில் இருந்துவிட்டு தனது தாயின் தொலைபேசி அழைப்புவர, தான் ஒருகிழமை கழித்து வந்து கூட்டிச்செல்வதாகக் கூறிக் கிளம்பினான். சுரேன் கிளம்பியதும் கட்டுடைத்த வெள்ளம்போல் அழத்தொடங்கிவிட்டாள் வதனா. தாய் ஆதரவாக வதனாவை வருடியபடி, அவள் அழுது முடியும் மட்டும் பொறுமையாக இருந்தாள். வதனா அழுது ஓய்ந்து தாயின் மடியிலேயே நித்திரையாகிவிட்டிருந்த போது மணி பதினொன்றை தாண்டியிருந்தது. திடீரென வதனா எழும்பி அவருக்குச் சாப்பாடு போட்டுவைக்க வேண்டும் என்றவள், தான் இருப்பது தாய்வீடு என்று தெரிந்தபின் அமைதியானாள். தாய் கொடுத்த தேநீரைக் குடித்தபடி, தாயிடம் தன் சோகங்களை கூறத்தொடங்கினாள்.

திருமணமான புதிதில் எல்லாமே புதிதாக இருக்க, சந்தோசமாக எற்றுகொண்டாள் வதனா. தனது மாமியாரின் தாய்ப்பாசத்தைப் பார்த்துப் பூரித்துப்போனாள். ஆனால் நாளாக நாளாக தான் ஓர் மூன்றாந்தரப்பு ஆளாக உணரத்தொடங்கினாள். சுரேன் எப்போதும் தன் கண்முன்னாலேயே இருக்கவேண்டும் என்ற மாமியாரின் நினைப்பு வதனாவையும் சுரேனையும் வெகுவாகப் பிரித்துவைத்தது. வதனா வெறும் சமையலுக்காகவும், வீட்டுவேலைகளுக்கா வும், வீட்டுக்கொரு காவலாளியாகவுமே இருந்து கொண்டாள்.

சுரேனும் மாமியாரும் வியாபாரத்திலேயே குறியாக இருந்தனர். பணம் இருந்தது, வசதி இருந்தது. ஆனால் ஏதோ ஒன்று இல்லாததாகவே உணர்வும் இருந்தது. உடுபுடவைகள் புதிதாக வேண்ட வேண்டிய தேவையும் இல்லை. ஆரம்பத்தில் இரவு ஏழு மணிக்கு கடையை மூடி வீட்டுக்கு வந்த சுரேன் வதனாவுடன் கூடுதலாக நேரத்தை செலவிட்டது மாமியாருக்குப் பிடிக்கவில்லை. அவர் மனம் கடிவாளம் இட்ட குதிரையாக மகன் மீதான அன்பு தன்னிடம் மட்டுமே அதிகம் இருக்கவேண்டும் என்று எதிர்பார்த்தார். மகனுக்கு தன்மீதான பாசம் குறைந்துவிடுமோ? என்ற அச்சத்தின் விளைவாகக் கடையை 9.30 வரை திறக்கவேண்டும் இல்லாவிட்டால் வியாபாரம் உடைந்துவிடும் எனக்கூறி வீட்டுக்கு போகும் நேரத்தைக் குறைத்துக் கொண்டார்.

சுரேனும் வியாபாரம் பாதிக்கப்படக்கூடாது என்று அப்படியே இருந்து கொண்டான். ஞாயிறும் வியாபாரம் நடந்தது. வதனாவின் அமைதியும் பொறுமையும் மாமியாருக்கு வாய்ப்பாகப் போய்விட, வதனா தனிமையில் வீட்டில் துணியினால் மூடி வைத்திருக்கும் இருக்கைகள் போலா னாள். இருக்கைகள் குட்டிபோடுமா என்ன?




| Sizes (in Inches) | M | L | XL |
|---|---|---|---|
| Chest | 20 | 21 | 22 |
| Height | 27 | 28 | 29 |

Scan Here

https://www.facebook.com/UniqueteesSriLanka

Price: Rs. 1150 (Islandwide Free Delivery for ezcash Payment)

விபரங்களுக்கு அழையுங்கள்: 0769 355 944

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:

'யாழ் முற்றம்' - இல: 461, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(அத்தியடி உப தபால் நிலையம் அருகில்)

Lion Comics & Muthu Comics

உங்கள் மனங்கவர்ந்த காமிக்ஸ் புத்தகங்கள்!
இலங்கையிலும் விற்பனையாகின்றன!




யாழ்ப்பாணத்தில்

பாக்யா புத்தகசாலை - கொக்குவில்
ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்

கொழும்பில்

பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை
கந்தையா அன்ட் சன்ஸ் - 357, காலிவீதி, பம்பலப்பிட்டி

தபாலில் பெற விபரங்களுக்கு (SMS மட்டும்) - 0769 355 944

https://www.facebook.com/tamilcomics/

லயன், முத்து காமிக்ஸ் குழும வெளியீடுகளை அனுமதியின்றி அச்சுவடிவிலோ மின்னிதழ் வடிவிலோ விற்பனை செய்தல், பரிமாறுதல் போன்ற நடவடிக்கைகள் காப்புரிமைச் சட்டப்படி தண்டனைக்குரிய குற்றமாகும்! - வெளியீட்டாளர்


# மறக்காமலிருக்க நாமென்ன மரமா.....?

விடுமுறை நாள் பள்ளியறைபோல
வெறிச்சோடிக்கிடக்கிறது அந்த மரத்தடி
அவர்கள் விட்டுப்போன வார்த்தைகளும்
எஞ்சிய புன்னகைகளும்
அங்கங்கே சிந்திக்கிடக்கிறது
காற்று கடந்துபோகும் போதெல்லாம்
உதிர்ந்துகொண்டேயிருந்தன தங்கஇதழ்கள்
மழைநேர புத்துநண்டுகள் நிமிடம் நின்று
அவர்களிடம் பேசிவிட்டுச்சென்றதாய் சொன்னால்
நீங்கள் நம்புவீர்கள் என நான் நம்பவில்லை
அன்றொருநாள்போல் இன்றும் வருடினேன் அந்த மரத்தை
விரல்கள் நனைந்தது.
அது மழைத்தண்ணீரென நான் நம்புவேன் என்று மரம் நம்பாது.
பெருத்த வேரினிடையில் பிசுபிசுத்தது
அது ஆண்டுகள் கடந்த வார்த்தையென்பதை
கைக்குட்டையால் துடைத்துக் கண்டுகொண்டேன்.
அவள்களும் அவன்களும் அம்புகளுக்குக் காப்பெடுத்தது
இந்த மரம்தான்,
வேர்களில் தலைவைத்தபோது வருடி விட்டதும் இந்த மரம்தான்.
குட்டைமுடிக்காரி தனக்கு கௌபித்துவையல் ஊட்டியதை
இன்றும் தனது ஞாபக வேரில் வைத்திருந்து காட்டியது.
சன்னத்துண்டால் அம்மா பேரை கிறுக்கிவிட்டு
தடவும்போது முலைக்காம்பு வலித்ததாயும்
மரம் சொன்னது.
மரம் மனிதனாக, நாம் மரமானோம்
முன்னைசந்ததியின் எச்சம்தான் எங்களது இருப்பிடம்
என எந்தப்பறவைக்கும் தெரியாது.
ஆனாலும் அவை பாடிக்கொண்டே இருக்கின்றன
அது தமக்கு கடவுள் தந்ததென.
நட்டவரையும் உரமிட்டவரையும் மறக்காமலிருக்க
நாமென்ன மரமா?
மனிதர்.
கொண்டாடிக்கொண்டே குடியிருக்க
பறவைகளால் மட்டுமே முடியும்.
கொப்புகளில் கோணல்கள் பார்க்க ஆளில்லை
எம்மைத்தவிர யாரதைச் செய்வது. யாம் செய்வோம்.
நட்டவர்களையும் உரமானவர்களையும் கொண்டாட
மரங்களும் பறவைகளும் போதும்
நாங்கள் மனிதர்கள்
எங்களுக்கு ஏகப்பட்ட வேலைகள் இருக்கிறது.
முதல்கட்டமாக இலைகளை வெட்டிவிட்டு
கொப்புகளின் கோணல் பார்ப்போம்.
இவர்களின் மேலேயும்
தங்க இதழ்கள் உதிர்ந்துகொண்டிருக்கிறது வஞ்சகமின்றி
பாவம் மரத்துக்கு தெரியுமா
இவர்கள் வேறு அவர்கள் வேறு என்பது
மனுச எச்சம் என்பதற்காயே மடிவிரித்துக்கிடக்கிறது.
எந்த மனுசருக்கும் தெரிவதில்லை
முன்னைச்சந்ததியின் எச்சம்தான் தங்கள் இருப்பிடமென்று
சொல்லாதீர்கள் இது கடவுள் தந்ததென
எந்தக் கடவுளும் தியாகம் செய்ததாய் நான் அறியவில்லை.

- சி.ப.வேந்தன்

# கடல் விழுங்கும்....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறுகம்பைக்குடா பகுதியிலும் கடலரிப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது. இந்தப் பகுதியில் உள்ள உல்லாச விடுதிகள், தங்ககங்கள் என்பவற்றிற்கும் இதனால் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அண்மையில் ஒலுவில் துறைமுகப் பகுதிக்கு வருகை தந்த கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஒலுவில் துறைமுகத்தை மீளச் செயற்படுத்தும் வகையில் பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படும் என்று அறிவித்தார். கடலரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளும் விரைவுபடுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

கடந்த அரசின் காலத்தில்கூட ஒலுவில் துறைமுகம் மற்றும் கடலரிப்புத் தடுப்பு நடவடிக்கை தொடர்பில் பல்வேறு வாக்குறுதிகள் அள்ளி வீசப்பட்டன. ஆனால், உருப்படியாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஒலுவிலைச் சுற்றியுள்ள கிராமங்கள் கடலினுள் அமிழ்ந்துபோவதற்கு முன்னதாவது இந்த ஆட்சியாளர்கள் தக்கதொரு நடவடிக்கையை எடுப்பார்களா என்று வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கிறார்கள் மக்கள்.

**கே** ரவிச்சந்திரன், மானிப்பாய்
பொதுத் தேர்தலுக்குப் பின்னர் திடிரென்று தமிழ் அரசியல் களத்தில் தமிழ் அரசியல்வாதிகள் ஒற்றுமைப்படவேண்டும் என்கிற கோரிக்கைகள் வலுவாகத் தெறிக்கின்றனவே! நீர் என்ன நினைக்கிறீர் அகராதி?

**ப** தேர்தலுக்குப் பின்னரும் அரசியல்வாதிகள் மக்கள் தலையில் மிளகாய் அரைப்பதை நிறுத்தவில்லை என்று நினைக்கின்றேன். இன்று ஒற்றுமை ஒற்றுமை என்பது இன நலனுக்கு என்று மட்டும் நினைத்துவிடாதீர்கள், எல்லாம் அவர்களின் நலன்களைக் காப்பாற்றிக்கொள்ள மட்டும்தான். அதற்கும் மேலாக, நாடாளுமன்றத் தேர்தலைப் போலவே மாகாண சபையிலும் மக்கள் அங்கஜனுக்கும் டக்ளசுக்கும் சந்திரகுமாருக்கும் இடதுசாரிகளுக்கும் வாக்களித்துவிட்டால் தங்கள் ஏகபோகங்கள் எல்லாம் கேள்விக்குள்ளாகிப்போகுமே என்கிற அச்சமும் இந்த ஒற்றுமைக் கோசத்திற்கான காரணம்.

**கே** பரிமளாதேவி, பம்பைமடு
கொரோனா நிலமை எல்லாம் எப்படியிருக்கு?

**ப** அதையேன் கேக்கிறீங்க! இந்தியாவினுடைய கேரள மாநிலத்தில ஒரு நோயாளர் காவு வண்டி சாரதியைக் காவலர்கள் கைது செய்திருக்கிறார்கள். கொரோனா தொற்று இருப்பதான சந்தேகத்தில் வைத்தியசாலைக்கு ஏற்றிச் செல்லப்பட்ட 19 வயதுச் சிறுமியை வன்புணர்ந்தார் என்கிற குற்றத்தின் பேரில் அந்தச் சாரதி கைது செய்யப்பட்டிருக்கிறார். இலங்கையில் ஒருத்தன் முகக் கவசத்துக்குள் இருந்து ஹெரோயின் சரைகளை மீட்டிருக்கிறார்கள் காவலர்கள். இப்படிப் போகிறது நிலமை.

**கே** நிரோஷா, மண்டைக்கல்லாறு
கொரோனாவுக்குத் தடுப்பு மருந்து கண்டுபிடித்துவிட்டார்கள் என்றார்களே. அது எப்போது பயன்பாட்டுக்கு வரும்.

**ப** என்ன ஒரே கொரோனா கேள்விகளாகவே இருக்கின்றன. கொரோனாவுக்கான தடுப்பு மருந்துகள் பல நாடுகளிலும் தயாராகிக் கொண்டிருக்கின்றன. இதனுடன் மிகப் பெருமெடுப்பிலான வர்த்தகமும் தொடர்புபட்டுள்ளதால் மருந்தைக் கண்டுபிடிப்பதில் நீயா நானா என்கிற கடும் போட்டி நிலவுகின்றது. மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் எல்லாத் தரப்புகளும் ஒரே குடையின் கீழ் செயற்பட்டு மிகச் சிறந்த மருந்தை உருவாக்கவேண்டும் என்பது உலக சுகாதார அமைப்பின் கோரிக்கை. ஆனால், அதற்கு யாரும் செவி சாய்ப்பதாக இல்லை. ரஷ்யா ஏற்கனவே தனது மக்களுக்கு இந்தத் தடுப்பு மருந்தை ஏற்றத் தொடங்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்தத் தடுப்பு மருந்து தயாரிப்புப் பணியில் தொடக்கம் முதலே அறியப்பட்ட வகையில் முன்னணியில் இருந்து வந்த ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றொரு மருத்துவ நிறுவனமான ஒஸ்ரா செனேக்காவுடன் இணைந்து மனிதர்களுக்கு இந்த மருந்தைச் செலுத்தி நடத்தி வந்த சோதனைகள் நிறுத்தப்பட்டுள்ளன. மருந்து கொடுக்கப்பட்டவர்களில் பலர் "என்னவென்று விளங்காத நோயால்" பாதிக்கப்பட்டுள்ளதை அடுத்து வழக்கமான நடவடிக்கையாக இந்த சோதனை நிறுத்தம் நிகழ்ந்திருப்பதாக ஒஸ்ரா செனேக்கா தரப்பில் சொல்லப்பட்டாலும் பிரிட்டனில் இந்த மருந்தை எடுத்துக்கொண்டவர்களிடம் பாதகமான எதிர் விளைவுகள் தென்பட்டிருக்கின்றன என்கின்றது மருத்துவ உலகு. எனவே உரிய, சரியான தடுப்பு மருந்து வருவதற்கு இன்னும் சில காலம் எடுக்கக்கூடும்.



# அகராதி பிடிச்சவன் பதில்கள்

**கே** ஜெயரமணன், கொக்குவில்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து மணிவண்ணனை நீக்கிவிட்டார்கள் பார்த்தீர்களா? தேர்தலில் வாக்குப்பெறுவதற்கு அவரைப் பயன்படுத்தி விட்டுப் பின்னர் இப்படிச் செய்திருக்கிறார்களே, இதற்கான சரியான பதிலடி மணிவண்ணன் தனிக் கட்சி தொடங்குவதுதான் என்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்.

**ப** அரசியல் கட்சிகளுக்குள் பிளவுகள் வருவதும், தன்னை மீறி ஒருவன் வளர்ந்துவிடாமல் தலைமைகள் கவனமாக இருப்பதும், அத்தகைய தலைமையை மீறி தன்னைத் தலைவனாக்கிக்கொள்ள ஒருவர் முயல்வதும் அரசியல் இருக்கும் வரைக்கும் இருந்து கொண்டே இருக்கப்போகும் விடயங்கள்தான். மணிவண்ணனைப் பொறுத்தவரையில், கட்சியால் தான் பயன்படுத்தப்படுகின்றேன் என்பதைத் தேர்தலுக்கு முன்னரே அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால், மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு எப்படி அரசியல் செய்யப் போகிறார்? அத்தோடு கட்சிக்குள் முரண்பாடு என்றால் தனிக் கட்சி தொடங்குவதுதான் வழி என்பதும் ஏற்கத்தக்கதல்ல. தனித் தனியே கட்சி தொடங்கிவிட்டு பின்னர் கூட்டணி என்று ஒன்று சேர்ந்து மக்களை ஏமாற்றுவதைவிட இணக்கம் எட்டுவதே நல்லது.

உங்கள் கேள்விகளை
**551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
என்கிற தபால் முகவரிக்கு
அல்லது
**shemman.redsoil@gmail.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு
அனுப்பி வையுங்கள்.



உங்களின் தேவைக்கு நீங்களே பயிரிடுங்கள்!




வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான கத்தரி, தக்காளி, மிளகாய் நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு.

வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகளும் விற்பனைக்கு உண்டு.
வெண்டி - பால்வெண்டி 10கிராம் 150/=
பயிற்றங்காய் - குரங்குவால் 10கிராம் 100/=
கத்தரி - திருநெல்வேலி ஊதா 10கிராம் 150/=
கீரை 30 - 40கிராம் 100/=
தக்காளி 4கிராம் 200/=
பாகற்காய் - திருநெல்வேலி 10கிராம் 200/=
பச்சைமிளகாய் 5கிராம் 100/=
சோளம் 50கிராம் 120/=
பூசணி 20விதை 200/=
முள்ளங்கி 10கிராம் 100/=
பீற்ரூட் 10கிராம் 150/=
முருங்கை - PKM1 15விதை 250/=

வீட்டில் போதிய இடம் இல்லாதவர்களுக்கு Grow Bag வசதி மூலம் மரக்கறிக் கன்றுகள் விநியோகிக்கப்படும்.




மிளகாய் - 200/=
கத்தரி - 250/=
தக்காளி - 250/=
வெண்டி - 250/=

இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட பசளைகள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.



யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதும் விநியோகிக்கப்படும்.

உங்களின் வீடுகளிற்கு விநியோகிக்கப்படும்.



விநியோக கட்டணம் -
யாழ் மாநகர எல்லை - 50/=
வலிகாமம் - 100/=
தென்மராட்சி - 150/=
வடமராட்சி - 200/=
தீவகம் - 250/=

இலங்கை முழுவதும் தபால் மூலமாகவும் விதைகள் அனுப்பி வைக்கப்படும்

தொடர்புகளுக்கு: - 077 411 4422
shop.semba.lk

## சுள்ளியின் பம்பல்கள்

### என் பேரன் நல்லவன்!



சுள்ளிராஜாவும் அவரது நண்பர் ஜம்புலிங்கமும் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது இன்றைய இளைஞர்களைப் பற்றிப் பேச்சுத் திரும்பி, நீண்டது. உடனே சுள்ளிராஜா சொன்னார், எல்லோருமே தங்கள் வீட்டுப் பிள்ளைகளைக் குறைகூறுகிறார்கள், ஏனென்று தெரியவில்லை. என் பேரனும்தான் இருக்கின்றான், குறைகூறும் அளவிற்கு அவன் ஏதும் செய்வதில்லை, மற்றப் பிள்ளைகள் மட்டும் ஏன்தான் இப்படியிருக்கிறார்களோ!

**ஜம்புலிங்கம்:** உன் பேரன் புகைப் பிடிப்பதில்லையா?

**சுள்ளி:** அவனுக்கு அப்படியென்றால் என்னவென்றே தெரியாது!



**ஜம்பு:** அவன் மது குடிப்பதில்லையா?

**சுள்ளி:** அந்தப் பக்கமே போகமாட்டான்.

**ஜம்பு:** அவன் தாமதமாக, நள்ளிரவுகளில் வீடு திரும்புவதில்லையா?

**சுள்ளி:** இல்லவேயில்லை , அதற்கு வாய்ப்பேயில்லை!

**ஜம்பு:** அப்படியென்றால் உன் பேரன் சிறந்தவன்தான், என்ன செய்துகொண்டிருக்கின்றான் இப்போது?

**சுள்ளி:** அடுத்த வாரம்தான் அவனுக்கு வயது 6 மாங்கள் ஆகப்போகின்றது. தாயிடம் பால் குடித்துவிட்டு அமைதியாகத் தூங்குவான், வேறு எந்தத் தொந்தரவும் தருவதில்லை.


ஜம்பு:????

### திருப்பி விட்டேன் பார்த்தாயா!



ஒரு தடவை சுள்ளிராஜா மலைத் தளம் ஒன்றுக்குச் சுற்றுலா சென்றார். அவர் தனது காரிலேயே அங்கு சென்றார். மலை அடிவாரத்தில் அவரைக் கண்ட ஒரு சிறு வியாபாரி சுள்ளிராஜாவைப் பார்த்து, மேலே செல்லும்போது காரைப் பின்புறமாகவே செலுத்திச் செல்வது நல்லது, ஏனெனில் மலை உச்சியில் காரைத் திருப்புவதற்குப் போதிய இடவசதி இருக்காது என்று அறிவுறுத்தினார். அதைக் கேட்ட சுள்ளிராஜாவும் அப்படியே செய்தார். சிறிது நேரத்திற்குப் பின்னர் மலைப் பாதையில் சுள்ளிராஜாவின் கார் பின்புறமாகவே இறங்கிவ வருவதை அந்தக் கடைக்காரர் பார்த்தார். அவருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. சுள்ளிராஜாவிடம் சென்று ஏன் பின்புறமாகவே வருகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு சுள்ளிராஜாவோ பெருமையுடன், மேலே ஒரு சிறிய பொருத்தமான இடத்தைக் கண்டுபிடித்து என் காரை அங்கேயே திருப்பி விட்டேன் பார்த்தாயா என்றாரே பார்க்கலாம்!

## கார்ட்டூன்




## மூளைக்கு வேலை விடைகள்

1) 1+2x2 = 5
2x3x3 = 18
2x3x1+1 = 12
1+3-2 = 2

## இந்த வார சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | 2 | | | | | 7 | 4 |
| | | | | 2 | 3 | | | 5 |
| 4 | | | | | | | | |
| | 6 | | | 3 | 4 | | | 7 |
| 2 | | 8 | 7 | 1 | 5 | 4 | | 9 |
| 1 | | | 6 | 9 | | | 3 | |
| | | | | | | | | 8 |
| 8 | | | 5 | 6 | | | | |
| 7 | 4 | | | | | 3 | 2 | |

இந்த சுடோக்கு விளையாட்டு தர்க்க ரீதியாக எண்களை ஒரொழுங்கில் அடுக்குவதற்கானது. நேராகவும் கிடையாகவும் 9 பெட்டிகளைக் கொண்டுள்ள இந்தச் சதுரத்தினுள் ஒவ்வொரு சிறிய பெட்டியினுள்ளும் 1 முதல் 9 வரையான ஒரு எண் இடப்பட வேண்டும். பெரிய பெட்டியின் கிடை மற்றும் நேர் வகிடுகளிலும் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலைப் பெட்டிகளின் நேர் மற்றும் கிடை வகிடுகளிலும்கூட ஒரு எண் இரட்டிப்பாகக்கூடாது என்பதே விதி. முயற்சி செய்து பாருங்கள். சரியாக நிரப்பி விட்டீர்களானால் அதனை அப்படியே வெட்டி

**செம்மண்**
சுடோக்கு,
**551 A, கஸ்தூரியார் வீதி,**
யாழ்ப்பாணம்

என்னும் முகவரிக்கு, உங்கள் முழுப் பெயர், வயது, தபால் முகவரி, தொடர்பு எண் என்பவற்றுடன் அனுப்பி வையுங்கள். சரியாக எழுதி வெற்றிபெறும் ஒரு அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250 பரிசாக வழங்கப்படும். விடையும் வெற்றிபெற்றவரின் விவரங்களும் அடுத்தவார பத்திரிகையில் வெளியாகும். வெற்றிபெற்றவர் பரிசுத் தொகையை செம்மண் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்த வாரம் வெளியாகிய சுடோக்கிற்கான விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 5 | 1 | 7 | 2 | 9 | 6 | 4 | 3 |
| 4 | 2 | 3 | 5 | 6 | 8 | 1 | 7 | 9 |
| 7 | 9 | 6 | 1 | 4 | 3 | 2 | 8 | 5 |
| 2 | 8 | 7 | 3 | 1 | 5 | 4 | 9 | 6 |
| 3 | 6 | 9 | 4 | 8 | 7 | 5 | 2 | 1 |
| 1 | 4 | 5 | 6 | 9 | 2 | 8 | 3 | 7 |
| 9 | 7 | 2 | 8 | 5 | 6 | 3 | 1 | 4 |
| 5 | 1 | 8 | 9 | 3 | 4 | 7 | 6 | 2 |
| 6 | 3 | 4 | 2 | 7 | 1 | 9 | 5 | 8 |

## செம்மண்

### வாரமலருக்கு...

- கவிதை
- கட்டுரை
- சிறுகதை
- நெடுங்கதை
- குறுங்கதை
- நிமிடக்கதை
- நாவல்(தொடர்)
- சிரிப்புத் துணுக்குகள்

ஆகியவற்றை எழுத விரும்புபவர்கள் அவற்றைப் பின்வரும் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கலாம்!

**அஞ்சல் /தபால்**
**செம்மண் வாரமலர்**
**551A, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**மின்னஞ்சல்**
**shemman.redsoil@gmail.com**
**தொடர்புக்கு: 021 492 7781**

எந்தவொரு ஆக்கத்துக்கும் தெளிவான முழுப் பெயர், முகவரி புனைபெயர் (இருந்தால்), தொடர்பு எண் என்பன குறிப்பிடப்பட வேண்டும். இந்த விவரங்கள் இல்லாத ஆக்கங்கள் எவவளவு தரமானவையாக இருந்தாலும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.



# மேலெழும் தமிழர்.....

(02 ஆம் பக்கம் தொடர்ச்சி)

இயங்கியிருக்கின்றன என்கிற முடிவுக்கு ஆய்வாளர்கள் வந்திருக்கின்றார்கள். கீழடியில் இரும்பு உருக்காலை, மண்பாண்டத் தயாரிப்பு ஆலை, ஆபரணத் தொழிற்சாலை, நெசவு, சாயப்பட்டறைகள் செயல்பட்ட தற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்கிறார்கள் அவர்கள்.

கீழடியைச் சுற்றிய கொந்தகை, மணலூர், அகரம் ஆகிய பகுதிகளிலும் ஆய்வுகள் நடந்தன. அங்கிருந்து மனித மற்றும் விலங்கு எலும்புக்கூடுகளும் கண்டெடுக்கப்பட்டன. இவற்றில் கொந்தகை கீழடியின் இடுகாடாக இருந்திருக்கும் என்கிறார் தமிழகத் தொல்லியல் துறை துணை இயக்குநர் ஆர்.சிவானந்தம்.

கீழடி பற்றிய ஆய்வுகள் இன்னும் அதிகம் மேற்கொள்ளப்படவேண்டியிருக்கின்றது. இந்தப் பகுதியில் ஆய்வு செய்வதற்காக 293 இடங்களைத் தெரிவு செய்திருக்கி றார்கள். அவற்றில் கீழடியில் மட்டும் 100 ஏக்கர் நிலப் பகுதியில் ஆய்வு நடத்தப்படவேண்டும் என்று குறித்திருக்கிறார்கள் ஆய்வாளர்கள். இதுவரையில் 20 ஏக்கர் பரப்பில் மட்டுமே ஆய்வு நடந்திருக்கின்றது. எனவே முழுமையான ஆய்வு நடத்தப்படும்போதும் உலகின் மிக முக்கிய நாகரிகங்களில் ஒன்று முழுமையாக வெளிச்சத்துக்கு வரும்.

தமிழக அரசின் நிதி வளத்தால் மட்டும் இவ்வளவு பெரிய ஆய்வை முன்கொண்டு செல்வது சாத்தியமானது அல்ல. எனவே உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் ஒன்றிணைந்து இந்த ஆய்வுக்கான அறக்கட்டளை ஒன்றை உருவாக்கி அதன் மூலம் போதுமான நிதி வசதிகளை ஆய்வாளர்களுக்கு வழங்கவும் இன்னும் விரிவான ஆய்வுகள் இதையொட்டி நடக்கவும் ஆவன செய்யவேண்டும்.

1. டெரகோட்டாவில் (சுடுமண்) செய்யப்பட்ட புகைப்பான்கள். மேல்பகுதியில் புகையிலையை வைத்துக் கொளுத்தி, கீழுள்ள ஓட்டையில் ஒரு மூங்கில் தக்கையை வைத்து இழுப்பார்கள்.

2. ஆறாம்கட்ட ஆய்வில், அகரம் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட நுண்கற்காலத்துக் கல் ஆயுதங்கள். விலங்குகளை அறுக்கும் கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டவை. முறைப்படி ஆய்வுசெய்து நிரூபித்தால் இந்தக் கற்காலக் கருவிகள் கீழடியின் 5,000 ஆண்டுக்கால வரலாற்றுக்கு ஆதாரமாகும் என்கிறார்கள் தொல்லியலாளர்கள்.

3. கீழடியில் கிடைத்த மணிகள். கங்கைச் சமவெளிப்பகுதிகளைச் சேர்ந்த வணிகர்கள் கீழடியில் வந்து வணிகம் செய்ததற்கான ஆதாரம் இவை. இந்த மணிகளைக் கொண்டு ஆபரணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

4. வணிகர்கள் பயன்படுத்திய எடைக்கற்கள். கொற்கையும் அழகன்குளமும் பெரும் துறைமுக நகரங்களாக இருந்துள்ளன. அந்தத் துறைமுகங்களின் வழியாக ரோமானிய, சீன, வடக்கிந்திய வணிகர்கள் கீழடிக்கு வந்து வணிகம் செய்தது, கிடைத்துள்ள தொல்பொருள்களின் மூலம் தெரிய வருகிறது.

5. அகரத்தில் கிடைத்த தங்க நாணயம். 17-ம் நூற்றாண்டைச் சேர்ந்த 'வீரராயன் பணம்' என்கிறார்கள். இந்தப்பகுதியில் காலம் கடந்தும் செழிப்பாக மக்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கான ஆதாரம் இது.

6. மணலூரில் கிடைத்துள்ள கட்டுமானம். இது மண்பாண்டங்களை வேகவைக்கப் பயன்படுத்தப்பட்ட சூளை என்கிறார்கள். கீழடியில் கிடைத்த சில மண்பாண்டங்களில் எழுத்து வடிவங்கள் கிடைத்துள்ளன. இப்பகுதி மக்கள் மண்பாண்டத் தயாரிப்பில் சிறந்த தொழில்நுட்பங்களைக் கையாண்டதற்கும், கல்வியறிவில் சிறந்து விளங்கியதற்கும் அதுவே ஆதாரம்.

7. இது மாட்டினத்தைச் சேர்ந்த விலங்கின் விலா மற்றும் முதுகெலும்பு. கீழடியில், 300க்கும் மேற்பட்ட விலங்குகளின் எலும்புத் துண்டுகள் கிடைத்துள்ளன. அவற்றில் 50 எலும்புகள் புனேயில் உள்ள டெக்கான் கல்லூரியில் ஆய்வு செய்யப்பட்டன. திமில் உள்ள காளை மாடு, பசு, ஆடு, பன்றி, மான்களின் எலும்புகள் என அவை உறுதி செய்யப்பட்டுள்ளன. திமில் கொண்ட காளை மாடு சிந்து சமவெளியோடும், ஜல்லிக்கட்டோடும் கீழடியை இணைக்கிறது. பன்றி, மான்களின் எலும்புகளில் வெட்டுப்பட்ட தடயங்கள் இருப்பதால் அவற்றை உணவுக்குப் பயன்படுத்தியிருக்கலாம்.

8. கொந்தகையில் 29 அகழ்வுக்குழிகள் தோண்டப்பட்டன. 32 தாழிகள் கிடைத்துள்ளன. தவிர, மண்ணில் புதைக்கப்பட்ட 5 குழந்தைகளின் எலும்புக்கூடுகளும், 1 பெரியவரின் எலும்புக்கூடும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மரபணு சோதனை மூலம் இவை எந்தக் காலத்தைச் சேர்ந்தவை என்று கண்டறியும் பணி நடந்துவருகிறது.

9. கட்டடங்கள் மிக நுட்பமாக எழுப்பப்பட்டுள்ளன. மேலே மரங்களை ஒன்றோடு ஒன்று இணைக்க இரும்பு ஆணிகளைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். ஓடுகளில் இரண்டு ஓட்டைகள் இருக்கின்றன. இருபுறமும் மரச்சட்டங்களில் சேர்த்துக் கட்டியிருக்கிறார்கள். உறுதியாக நின்று காலம் கடந்தும் ஆதாரமாக மிஞ்சியிருக்கிறது இந்தத் தொழில்நுட்பம்.

## அதிகம் பகிரப்பட்ட #கருவறையில்_ தீண்டாமை

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டம் தமிழகத்தில் நிறை வேற்றப்பட்டு 14 ஆண்டுகள் ஆகின்றன. ஆனாலும் இன்றுவரை ஆகம கோவில்க ளில் தகுதிபடைத்த பார்ப்ப னர் அல்லாதா அர்ச்சகர்கள் நியமிக்கப்படவில்லை. தமிழக அரசால் கடந்த 2006 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அர்ச்சகர் பயிற்சி பள்ளியில் உரிய முறையில் பயிற்சி பெற்ற 206 மாணவர்கள் இன்றும் பணி நியமனம் வழங்கப் படாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கம் தொடர்ந்து போராடி வருகிறது. அவர்களுக்கு ஆதரவாக பல ஜனநாயக சக்திகள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றனர்.





இந்நிலையில் 22.08.2006 அன்று தமிழகத்தில் இரண்டாவது முறையாக அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என சட்டம் நிறைவேற்றப்பட்டு 14 ஆண்டு நிறைவடைந்த தைத் தொடர்ந்து, கடந்த 23.08.2020 அன்று கீச்சகத்தில், ஜனநாய சக்திகள் மற்றும் சமூகநீதிக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் *#SaveTemples From Brahmanism* கருவறையில்_ தீண்டாமை என்ற ஹேஸ்டேக்களை முன்வைத்து தங்களது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

energy evolved (pvt) Ltd.
E. B. CREASY & CO. PLC
Since 1878

முதலீடு

நீங்களும் சூரிய ஒளியிலிருந்து மின் சாரத்தை உற்பத்தி செய்து இலங்கை மின்சாரசபைக்கு விற்பனை செய்வதன் மூலம் சிறந்ததொரு மாதாந்த வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும் ...




சிறிய, நடுத்தர, பாரிய அளவிலான முதலீடுகள்.

அரச அங்கீகாரத்துடன் இலங்கை மின்சார சபையினால் 20 வருடங்களுக்கு செய்து கொள்ளப்படும் வலுவான ஒப்பந்தம்.

மத்திய வங்கியால் வழங்கப்படும் மானிய வட்டி அடிப்டையில் இலகுவான முறையில் கடன் வசதி.

சிறிய முதலீட்டின் மூலம் உங்களது வீட்டு மின் கட்டணத்தை (00 ரூ) பூச்சியம் ரூபாய் ஆக்கமுடியும்.

சூரிய ஒளி மின்சக்தி தொழில் நுட்பங்களில் 18 வருட அனுபவம்.

அலகு ஒன்றிற்கு ரூபாய் 22/- மின்சார சபையிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

SPECIAL OFFERS ARE AVAILABLE

| வழமையான மின் கட்டணம் | முதலீடு |
|---|---|
| 3363.00 | 185000.00 |
| 6763.00 | 285000.00 |
| 13963.00 | 495000.00 |

ENERGY EVOLVED (PVT) LTD
071 1387066
வாடிக்கையாளர் சேவை நிலையம்
மட்டக்களப்பு கல்லடி பாலம்
மீன் இசை பூங்கா, கட்டடத்தொகுதி.

# வெறுப்பிலிருந்து இலாபம் சம்பாதிப்பதின் மீது வெறுப்பு!

முகப் புத்தகம் (பேஸ்புக்) எனப்படும் சமூக ஊடக நிறுவனத்தின் மென்பொறியாளராக இருந்தவரான அசோக் சந்வாணி அந்த நிறுவனத்திலிருந்து வெளியேறிவிட்டார். வெறுப்பிலிருந்து இலாபம் சம்பாதிப்பதைத் தொடர்ந்து சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை என்று அவர் அதற்குக் காரணம் கூறியிருக்கிறார்.

சமூக ஊடகமான முகப் புத்தகத்தில் வெறுப்பூட்டும் கருத்துக்களும், அவதூறுகளை அள்ளி வீசும் பதிவுகளும் உண்மைக்குப் புறம்பான தகவல்களும் கொட்டிக்கிடக்கின்றன என்கிற குற்றச்சாட்டு சமீப காலங்களாகவே அதிகரித்து வருகின்றன. இந்த விமர்சனங்கள் வெளியிலிருந்து மட்டுமல்ல நிறுவனத்தின் பணியாளர்களிடம் இருந்தும் வருகின்றன என்பதே கவனத்துக்குரியது.

முகப் புத்தகத்தில் உயர் அதிகாரிகளாகப் பணியாற்றிய பலரும் நிறுவனத்தின் இந்தப் போக்கை எதிர்த்துப் பொது வெளிக்கு வந்து பகிரங்கமாகக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களில் அசோக் கடைசியானவர்.

பாரம்பரிய ஊடகங்கள் என்று சொல்லப்படும் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி என்பன ஒரு கட்டத்திற்குள் செயற்படும் நிலையில் இருந்தபோது அதை உடைத்து யார் வேண்டுமானாலும் தமது கருத்துக்களைப் பகிரங்க வெளியில் தெரிவிப்பதற்கான, கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான தளமாகவே முகப் புத்தகம் போன்ற சமூக ஊடகங்கள் நோக்கப்பட்டன.

ஆனால், ஒரு தசாப்த கால இடைவெளியில் இந்த கட்டற்ற கருத்துச் சுதந்திரம் ஆக்க வழியைவிடவும் அழிவுப் பாதையை நோக்கி அதிகம் நகருகின்றது என்கிற குற்றச்சாட்டுகள் எழத் தொடங்கிவிட்டன.

பொய்யும், புரட்டும், வெறுப்பும் காறி உமிழப்படும் இடமாக இந்தச் சமூக ஊடகங்கள் வடிவம் பெற்றுக்கொண்டன என்பதன் மீது தற்போது கரிசனைகள் அதிகரித்து வருகின்றன. அதிலும் குறிப்பாக அமெரிக்காவில் ஜோர்ஜ் பிளாய்ட் என்கிற கறுப்பினத்தவர் வெள்ளையின காவல் அலுவலர்களால் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இனக் குரோதங்களையும், வெறுப்பையும் உமிழும் அமில ஆலைகளாக முகப் புத்தகம் மாறிவிட்டதான குற்றச்சாட்டு அதிகரித்திருக்கின்றது.




இத்தகைய வெறுப்பூட்டும் கருத்துக்களில் இருந்துதான் முகப் புத்தகம் இலாபம் சம்பாதிக்கின்றது என்கிற உள்ளுணர்வு காரணமாக அதன் பணியாளர்கள் பலரும் தமது பணியிலிருந்து விலகிச் சென்றிருக்கிறார்கள்.

தாம் தமது பதிவுகளில் இருந்து பல லட்சக்கணக்கான வெறுப்பூட்டல் பதிவுகளை நீக்கியுள்ளதாக விளக்கமளிப்பதன் மூலம் தன்னை நியாயப்படுத்திக்கொள்ள முகப் புத்தகம் முயற்சிக்கின்றது.

ஜோர்ஜ் பிளாய்டின் படுகொலையை அடுத்து அமெரிக்காவில் நிகழ்ந்த கறுப்பர்களின் வாழ்வு என்கிற கருத்தியல் போராட்டத்தின்போது அதிபர் ட்ரம் தெரிவித்த கருத்துக்களை தனது பக்கத்தில் இருந்து முகப் புத்தகம் நீக்க மறுத்தபோது அதன் மீதான விமர்சனங்கள் இன்னும் அதிகரித்தன. மற்றொரு சமூக வலைத்தளமான ருவிற்றர், ட்ரம்பின் கருத்தை நீக்கிவிட்ட நிலையில் அது வன்முறையைக் கொண்டாடுகின்றது என்கிற விமர்சனத்தை எதிர்கொண்டாலும் முகப்புத்தகம் வெறுப்பூட்டல் பேச்சுகளுக்குக் களம் அமைக்கின்றது என்கிற பெரும் கண்டனத்தை எதிர்கொண்டது.

தன்னுடைய மென்பொறியாளரின் கருத்துக்குப் பதிலளித்துள்ள முகப் புத்தகம், வெறுப்பிலிருந்து நாம் இலாபமடையவில்லை. இந்தச் சமூகம் பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்பதற்காக நாம் மில்லியன் கணக்கான டொலர்களை ஒவ்வொரு வருடமும் முதலீடு செய்கிறோம், அத்தோடு எமது கொள்களை மேம்படுத்திக்கொள்வதற்காக வெளியிலுள்ள வல்லுநர்களுடனும் நாம் இறுக்கமாகக் கைகோர்த்திருக்கிறோம். தரவுகளைச் சரிபார்ப்பதற்கான பொறிமுறையை மேலும் மேலம் மேம்படுத்தி வருகின்றோம்.

ஆனால், செய்வதற்கு இன்னும் நிறையவே இருக்கின்றன என்கிறார்கள் எதிர்ப்பாளர்கள். ■






இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ, கஸ்தூரியர் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.09.2020 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு: 0214927781